# இஸ்லாமிய நாகரிகம்

## தரம் - 13

### ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



சமயக்கல்வித் துறை
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# இஸ்லாமிய நாகரிகம்

## தரம் 13

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2010ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)

**சமயக் கல்வித் துறை**
**கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**2010**

© தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு - 2010

சமயத்துறை
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பகம்:

# முகவுரை

தேர்ச்சிகளை அடித்தளமாகக் கொண்ட கலைத்திட்டத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகம் செய்யும் பணி 13ஆந் தரத்துக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அறிமுகங் செய்வதுடன் பூர்த்தியடைகின்றது. 12ஆம் 13ஆந் தர மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்காக நிலவும் கடுமையான போட்டிக்கு உள்ளாவதால் நிதமும் கணிசமான அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். க.பொ.த. உயர் தரத்துக்காக புதிய கலைத்திட்டத்தை முதல் தடவையாகப் பயன்படுத்தும் நிலையில் அவ்வழுத்தம் மேலும் அதிகரிக்கும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் உங்களது கைகளை அடையும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது பாடத்திட்டத்தைப் போன்றே முக்கியமானதாகும். இங்கு ஆசிரியர் முதன்மை யாகக் கவனத்திலெடுக்க வேண்டிய மூன்று அம்சங்கள் உள்ளன. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் பாடத்திட்டத்துடன் முழுமையாகப் பொருந்தியமைந்திருத்தல், கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு கலைத்திட்டத் தத்துவத்தையும் தூரநோக்கையும் முதன்மையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல், 12ஆம் 13ஆந் தர மாணவர்களிடத்தே எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை மனதிற்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல் ஆகியனவே அவையாகும். எனவே இதனை நன்கு உசாவுதல் ஆசிரியரின் இன்றியமையாத பணியும் பொறுப்புமாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் உங்களது கவனத்துக்குக் கொண்டு வருதவற்காகத் தேசிய கல்வி நிறுவகம் 13ஆந் தரத்தில் கற்பிக்கும் சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும் உரிய பயிற்சியை வழங்கும் பணிகளையும் செய்து வருகின்றது. தொடர்ச்சியாக நடத்தப்படும் இப்பயிற்சி அமர்வுகளில் ஆசிரியர்கள் பங்குபற்றுவது இன்றியமையாததாகும். இங்கு தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் கோட்பாடுகள், செயன்முறைகளை விளங்கிக்கொள்வதற்கு அப்பயிற்சி பெரிதும் துணையாக அமையுமென்பதே அதற்கான காரணமாகும். குறிப்பாக பாடசாலை மட்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகளை தேர்ச்சி விருத்திக்குத் துணையாகக்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது. கற்பித்தலை பாட விடங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது மாணவ மாணவியரது திறன்களுக்கு மெருகூட்டுதல் எனும் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு இவ்வெல்லாத் தலையீடுகளும் இன்றியமையாதவையாகும் என்பதை கல்வி மற்றும் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் நாம் அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிக்கும் சிரமமிக்க பணியை நிறைவு செய்வதில் பங்களிப்புச் செய்ய தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியணியினர் உட்பட ஏனைய சகல பணியணியினருக்கும் வெளிவாரியாகப் பங்களிப்புச் செய்த கல்விமான்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

**கலாநிதி உபாலி எம். சேதர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் தரத்திற்குரிய கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உங்களுக்குத் துணையாக அமையும். இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையிலிருந்த பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டது. இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறுபாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமற் போக இடமுண்டு. சிலவேளை, அதற்காக நீண்டகாலம் எடுக்கலாம். எனினும், தேர்ச்சி மட்டங்களையும் அந்தத் தேர்ச்சி மட்டத்தின் கீழ் தரப்பட்டுப்பட்டுள்ள கற்றற் பேறுகளையும் இத்தரம் முடிவடைவதற்குள் அடைதல் அவசியமாகும். எனவே, இத்தரத்திற்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு அத்தேர்ச்சி மட்டங்களும் கற்றற்பேறுகளும் துணையாகும்.

இக்கற்றற்பேறுகளை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டுக் கருவிகளை தயாரித்துக் கொள்வதற்குமான நியதிகளாகப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம். மேலும் இப்பாடத்தைப் பயிலும்போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள், இணைய வலை கடப்பிடங்கள் (Web Site) முதலானவை குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்கு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.

நீங்கள் ஆக்கபூர்வமான ஆசிரியராகச் செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்புடனேயே உத்தேச செயற்பாடுகள் இங்கு மாதிரிச் செயற்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ளுங்கள். குறிப்பாக ஆசிரியர் - மைய வகுப்பறைச் செயன்முறையை மாற்றி மாணவர் - மையச் செயன்முறையாக அமைத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மாணவரை நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களில் கவனம் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கற்பித்தலின்போது மரபு ரீதியான முறையில் ''குறிப்பு'' வழங்குவதற்குப் பதிலான கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலானவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழில்நுட்பத்தை உச்சளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழில்நுட்பச் சாதனங்களை இன்றளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

13ஆம் தரத்தில் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு இப்பாடத்திட்டம் குறித்து தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடத்துள் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல்-கற்பித்தல் திட்டத்தை அறிமுகஞ் செய்வதால் கற்றலின்பால் அம்மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும் முழுப் பாடத்தையும் கற்பதற்காக மாணவர்களை பாடசாலையின்பால் ஈர்ப்பதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பினூடாக வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயன்முறையில் தெள்ளத் தெளிவாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இப்பாடத்திட்டத்தையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விஷேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி எம். சேதர அவர்களுக்கும் அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்.
தேசிய கல்வி நிறுவகம்

# கல்வி வெளியீட்டு ஆணையாளரின் செய்தி

# அறிமுகம்

நல்லொழுக்கமும் பண்பாடும் மிக்க சமூகமொன்றை உருவாக்குவதில் கல்வி பிரதான இடத்தை வகிக்கின்றது. இந்தப் பணிக்கு சமயங்களும் நாகரிகங்களும் நிறைந்த பங்களிப்பை வழங்கி வருகின்றன. அதனால் சமயம், நாகரிகம் என்பவற்றுக்கு மனித உள்ளத்தில் நிலையான பதிவு உண்டு.

ஒரு சமூகம் ஒரு நாகரிகத்தைப் பற்றி நிற்பதற்கு அதன் கோட்பாடுகளும் நடைமுறைச் சாத்தியங்களுமே காரணமாக அமைகின்றன. கோட்பாடுகளும் நடைமுறைகளும் கொண்டிருந்த அடிப்படைகளே நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு காலாக அமைகின்றன. ஒரு நாகரிகத்தின் அடிப்படை சரியாகப் பின்பற்றப்படும் காலமெல்லாம் அந்நாகரிகம் சிறப்புற்றிருப்பதையும் அடிப்படைகள் புறக்கணிக்கப்படுகின்ற காலகட்டத்தில் அது தளர்வுற்றிருப்பதையும் வரலாறு சுட்டிக் காட்டுகிறது. ஆகவே, நாகரிகத்தின் அடிப்படைகள் எப்போதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இஸ்லாமிய நாகரிகம் சமூக வளர்ச்சிக் கட்டத்தில் தோன்றிய ஒரு நாகரிகமன்று. அது காலத்தின் தேவை அறிந்து இறைவழிகாட்டலில் உருவாக்கப்பட்ட ஒரு நாகரிகமாகும். எனவேதான் அதன் அடிப்படைகளும் மூலாதாரங்களும் இறைவழிகாட்டலிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. இஸ்லாமிய நாகரிகத்தைக் கற்பதன் நோக்கம் அதன் அழகைச் சுவைப்பது மட்டுமன்றி, அதன் உயர் அம்சங்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டுவதுமாகும். வரலாற்றில் அது எழுச்சி பெற்றதற்கான காரணங்களைக் கண்டறிந்து தளர்வடைந்திருக்கும் இக்காலகட்டத்தில் அதனை மீளெழுச்சி பெறச் செய்வதற்கான முயற்சிகளைக் கண்டறிவதும் அவற்றை நடைமுறைப் படுத்துவதும் இப்பாடத்தைக் கற்பதன் முதன்மையாக நோக்கங்களாகும். பொதுவாக மனித சமுதாயமும் குறிப்பாக கட்டிளமைப் பருவத்தினரும் பண்பாட்டுத் துறையில் வீழ்ச்சியடைந்து வரும் இக்காலகட்டத்தில் அவர்களை வழிநடாத்தும் பெரும் பொறுப்பை சமய, நாகரிகப் பாடங்கள் ஏற்றிருக்கின்றன.

ஒழுக்கச் சீர்கேடுகளும் சிந்தனைச் சிக்கல்களும் பிரவாகமெடுத்துவரும் இக்காலச் சூழலில் இஸ்லாமிய நாகரிகத்தைக் கற்பது மாணவனின் பண்பாட்டுத் தகைமை விருத்திக்கு மிக அவசியமானதாகும். அதனைப் பரீட்சைக்கான பாடமாக மட்டுமன்றி, இம்மை மறுமைக்கான வழிகாட்டலாகவும் கற்பிக்க வேண்டிய பாரிய பொறுப்போடு ஆசிரியர்கள் அமர்ந்துள்ளனர். எந்தச் சமூகம் தனது வரலாற்றையும் நாகரிகத்தையும் தெரிந்துகொள்ளவில்லையோ அந்தச் சமூகம் ஏனைய நாகரிகங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தனது தனித்துவத்தை இழந்துவிடும் என்பதே வரலாறாகும்.

அந்த நிலையை தவிர்க்கும் ஒரு முயற்சியாக இந்தப் பாடம் வகுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சி மையப் பாடத்திட்டம் என்பதால் ஒவ்வோர் அலகிலும் எதிர்பார்க்கின்ற தேர்ச்சி மட்டங்களை அடைய வைப்பதில் ஆசிரியர் மிகுந்த கரிசனை காட்ட வேண்டும். இவ் ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கங்கள் சில சுருக்கமாகவும் சில விரிவாகவும் தரப்பட்டுள்ளன. சுருக்கமாகத் தரப்பட்ட உள்ளடக்கங்களை விரிவாக கற்பதற்கான வழிகாட்டல்களை ஆசிரியர் வழங்க வேண்டும். அவர்களின் அர்ப்பண சிந்தனையுடனான முயற்சிகளே இப்பாடத்தை வெற்றியடையச் செய்யும் என நம்புகிறோம்.

**ஆக்கக்குழு**

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் வழிகாட்டலும்** | : | **கலாநிதி உபாலி. எம் சேதர**<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>**திரு. விமல் சியம்பலாகொட**<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **பணிப்பு** | : | **கலாநிதி மாம்புல்கொட சுமணரதன தேரர்**<br>பணிப்பாளர்<br>சமயக் கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **இணைப்பாக்கம்** | : | **ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன்**<br>பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **விடய ஆலோசனை** | : | **கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி** - பணிப்பாளர்<br>நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை<br><br>**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**<br>பிரதிப் பணிப்பாளர்,<br>நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை<br><br>**ஜனாப் எம்.ஐ.எம். அமீன்**<br>தலைவர், அரபு இஸ்லாமிய நாகரிகத்துறை<br>பேராதனை பல்கலைக்கழகம்<br><br>**மௌலவி எம்.எச்.எம். லாபிர்**<br>பிரதிநிதி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா |
| **எழுத்தாளர் குழு** | : | அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் பாரி<br>ஜனாப் எம்.எச்.எம். நாளிர்<br>அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி<br>ஜனாப் எம்.எஸ்.எம். அனஸ்<br>ஜனாப் எம்.எஸ்.எம். பூஸரி<br>ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன் |
| **மொழிச் செவ்வையாக்கம்** | : | **எம்.எச்.எம். யாக்கூத்** |
| **பதிப்பு** | : | **ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன்**<br>பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம்<br>**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி** |
| **கணினி பதிப்பும் வடிவமைப்பு** | : | **எம்.டபிள்யூ.ஏ. அஸார்**<br>**எப்.ஏ.எப். நிஸ்மியா**<br>தொழினுட்ப உதவியாளர்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **அட்டைப்படம்** | : | எம்.டபிள்யூ.ஏ. அஸார் |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | i |
| முன்னுரை | iii |
| கல்வி வெளியீட்டு ஆணையாளரின் செய்தி | iv |
| அறிமுகம் | v |
| எழுத்தாளர் குழு | vi |
| விடய வழிகாட்டித் தொடர் | 01 |
| பாடசாலை மட்டக் கணிப்பீடு | 84 |

**தேர்ச்சி 7.0 : இஸ்லாத்துக்கு முந்திய காலகட்டத்தில் நிலவிய சமூக, கலாசார, அரசியல் நிலைகளை இனங்காண்பதனூடாக ஜாஹிலிய்யத்தை தவிர்ந்து நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1:** நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத் பெறுவதற்கு முன்புள்ள அறபு நாட்டின் சமூக, சமய, பொருளாதார, அரசியல் நிலைகளை வரலாற்று ரீதியாக கண்டறிவார்.

**காலம்** : 30 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள்** :
- இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அறபு மக்களின் வாழ்க்கை முறையினை விளங்கி எழுதுதல்.
- ஜாஹிலிய்யா மக்களின் சீர்கெட்ட வாழ்க்கைக்கான காரணங்களை இனங்கண்டு உரையாற்றுதல்.
- நவீன வாழ்க்கையின் முரண்வழிகளைக் கண்டறிந்து விலகி நடத்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**அறேபியாவின் புவியியல் வரலாறு**

- **புவியியல்**
  - தேசப்படத்தின் துணையுடன் அன்றைய அறபு நாட்டை கண்டறிதல்
  - அறபு நாட்டின் எல்லைகள், புவியியல் நிலை, பிரதேசங்கள் (ஹிஜாஸ், யமன், ஹழரமவ்த், நஜ்த், உம்மான்)
  - பிற கலாசாரங்கள் நுழைய முடியாமல் தடைசெய்த காரணிகளும் சுவாத்தியமும் பற்றிய விமர்சன ரீதியான விளக்கம். உதாரணம்:
  - வட அறேபிய, தென்னறேபிய புவியியல் வேறுபாடுகள்.

- **வரலாறு**
  - அறபா என்பது செமித்திய மொழியில் பாலைவனத்தையும், ஹீப்ரு மொழியில் காட்டையும், மொழியில் சொல் வன்மையையும் குறிக்கின்றது. உலகில் வாழும் அனைத்து மக்களை விடவும் தாமே பேச்சாற்றல் மிக்கவர் என அறேபியர் பெருமைப்பட்டனர். இதனால் தம்மை அறேபியர் என அழைத்துக் கொண்டனர்.
  - நூஹ் (அலை) அவர்களின் மகன் ஸாம் ஆவார். அவரது சந்ததியில் தோன்றியோர் ஸாமிய்யூன் எனப்பட்டனர். ஸாமிய்யூன்களே செமித்தியர் (Semitic) எனப்படுகின்றனர்.
  - செமித்தியர், அறபு நாட்டில் வாழ்ந்தனர். பின்னர் குடியிருப்பு வசதிகள் குறைவாக இருந்தமையால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை நோக்கிக் குடிபெயர்ந்தனர். இவர்களே அறேபியரின் பூர்வீகமக்களாவர். அறபிகள் குடியேறிய காலகட்டத்தைப் பொறுத்து அவர் களை மூன்று பிரிவுகளாக சுட்டிக் காட்டுவர்.

    அ) அறபுல் பாஇதா (பண்டைய அறேபியர்) ஆத், ஸமூத், அமாலிகா ஜதீஸ், ஜர்ஹும் கோத்திரத்தினர் இதிலடங்குவர். வறட்சி, வறுமை, அக்கிரமம் காரணமாக வும், குஷாருல் அஹ்மர் என்போரின் படையெடுப்பாலும் இவர்கள் அழிவுற்றனர்.

    ஆ) அறபுல் ஆரிபா (பரம்பரை அறேபியர்) யூப்பிரடீஸின் கிழக்குப் பிரதேசத்திலிருந்து வந்து யமன், ஹழரமவ்த் பிரதேசங்களில் குடியேறிய கஹ்தான் குழுவினர் இதிலடங்குவர். நூஹ் (அலை) அவர்களின் கொள்ளுப் பேரன் கஹ்தானின் மகன் யரப். அவர் மகன் ஸபா. ஸபாவின் சந்ததி ஸாபியீன் எனப்பட்டனர். யரப்பின் மற்றொரு மகன் ஜுர்ஹும். இவர்கள் ஹிஜாஸில் குடியேறினர். அடுத்த

மகன் ஹிம்யர். இவரது சந்ததியினர் யமனில் குடியேறினர். இவர்கள் ஹிம்யாரியர் எனப்பட்டனர்.

இ) அறபுல் முஸ்த.்.ரிபா (பிந்திய அறேபியர்) இவர்கள் இஸ்மாயில் (அலை) அவர்களின் சந்ததியினர் ஆவர். பலஸ்தீனத்திலிருந்து வந்த இஸ்மாயில் (அலை) ஜுர்ஹும் கோத்திர ஸஃதா என்ற பெண்ணை மணமுடித்தார். குறைஷ், ஹுதைல், கினானா கோத்திரத்தவர்கள் இப்பிரிவில் அடங்குவர்.

- இஸ்மாயில் (அலை) அவர்களின் மக்கா குடியேற்றமும், பின்னர் தந்தை இப்றாஹீம் (அலை) அவர்களுடன் சேர்ந்து க.்.பதுல்லாஹ்வைப் புனர்நிர்மாணம் செய்தமையும் அவர்களை தலைமைத்துவத்துக்குத் தகுதியானவர்களாக்கின.

- நபி (ஸல்) அவர்களின் முன்னோர்களின் பதினோராவது தலைமுறையான பிஹ்ர் பின் மாலிக் என்றவர் வணிகராக இருந்தமையால் குறைஷ் எனும் சிறப்புப் பெயரால் வழங்கப்பட்டார். இவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் வாழ்ந்தவர். இவரது சந்ததியினர் குறைஷியா எனப்பட்டனர். இவரின் சந்ததியில் தோன்றிய குஸை பின் கிலாப் (398-480) மக்காவில் ஒரு நிருவாக அமைப்பை ஏற்படுத்தி க.்.பாவைப் பரிபாலித்ததோடு சமூகத்தையும் வழிநடத்தினார். இது நபி (ஸல்) அவர்களின் பாட்டன் அப்துல் முத்தலிப் அவர்களின் காலம் வரை தொடர்ந்தது.

- **சமூக பொருளாதார நிலை**
  - ***சமூகம்:*** இஸ்லாத்துக்கு முற்பட்ட ஜாஹிலிய்யா சமூகம் கோத்திரங்களாகப் பிரிந்திருந்தது. அதனை உடைந்த கண்ணாடிக்கு ஒப்பிடுவர். கோத்திரமும் குடும்பமும் இருந்தனவே தவிர அங்கு சமூகமோ, தேசியமோ காணப்படவில்லை என்பர். இதற்கு அறபு நாட்டின் புவியியல் நிலை காரணமாயமைந்தது எனலாம். அரிதான வளம் (கால் நடைகளுக்கு புல்லும் நீரும் தேடல்) அதனைப் பெற்றுக் கொள்வதிலேற்பட்ட போட்டி, எதிரிகளிலிருந்து பாதுகாப்புப் பெறல் என்பன இந்த நிலையை உருவாக்கின. ஆனால், பின்னர் அது ஒரு வெறியாக மாற்றம் பெற்று போராட்டங்களை ஏற்படுத்தியது.

    "மனிதர்களே, நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். நீங்கள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதற்காக கிளைகளாகவும் (ஷுஊப்) கோத்திரங்களாகவும் (கபாஇல்) ஆக்கினோம்..." (49:13) என்று கோத்திரங் களின் தோற்றம் பற்றிய கருத்தை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

    தனிநபர்கள் ஒன்றிணைந்து குடும்பமாகவும், குடும்பங்கள் ஒன்றிணைந்து ஷுஊப்களாகவும், ஷுஊப்கள் ஒன்றிணைந்து கபாஇல்களாகவும் விரிவடைந்து தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர். (உதாரணமாக ஹாஷிம், உமையா, ஸுஹ்ரா, அஸத், அதீ, தைம் போன்ற ஷுஊப்களைக் குறைஷ் கபீலா கொண்டிருந்தது.)

  - கோத்திரங்களாக இணைந்தமையால் காலப் போக்கில் அது ஓர் உணர்வாக வளர்ந்தது. இதனை அஸபிய்யா என வழங்குவர். எல்லா நிலையிலும் நிபந்தனை யின்றி கோத்திரத்துக்கு விசுவாசமாக இருத்தல், இரத்த உறவுகளை நேரடியாகப் பாதுகாத்தல் என்ற உணர்விலிருந்து அஸபிய்யா தோன்றியது எனவும், தனிமனிதன் கோத்திரத்தையும், கோத்திரம் தனிமனிதனையும் பாதுகாப்பதற்காக அஸபிய்யா தோன்றியதெனவும் கருத்துக்கள் உண்டு. உனது கோத்திரத்துக்கு விசுவாசமாக இரு; அதன் உறுப்பினர் மீது அதற்குள்ள உரிமை, கணவனொருவன் அவனது மனைவியை கைவிட்டு விடச் செய்யுமளவு பலமானது.

- கோத்திரங்களும், கோத்திர உணர்வும் வளர்ந்தபோது ஒரு தலைமைத்துவம் உருவானது. கோத்திரத் தலைவர்கள் ஷைகு எனப்பட்டார். இவர் அறிவு, அனுபவம், வீரம், செல்வாக்கு, கொடை, நன்னடத்தை உடையவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் “மலஉ” என்ற மன்றத்தில் கலந்துரையாடி தீர்மானங்களை எடுத்தார். செல்வத்தையும் மேய்ச்சல் தரையையும் பாதுகாத்தல், முகாமமைத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், இழப்பீடுகளை நிர்ணயித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றினார்.

- பாதுகாப்புக்காக உருவான கோத்திர அமைப்பு பௌதிக சூழல் காரணமாக போராட்ட சமூகமாக அவர்களை மாற்றியமைத்தது. இதனால் போர் முக்கிய இடத்தைப் பெற்றது. 50 ஆண்டுகளில் 132 போர்கள் இடம்பெற்றதாக கணிக்கப்பட்டுள்ளது. காரணம் அற்ப விடயங்களுக்காக நீண்ட காலம் போரிட்டமையாகும். ஒட்டகமொன்று காயப்படுத்தப்பட்ட தற்காக பக்ர்-தக்லப் கோத்திரத்தவர்களிடையே 40 ஆண்டுகள் பஸூஸ் யுத்தம் இடம்பெற்றது. குதிரைப் பந்தய நிபந்தனை மீறப்பட்டதால் அபஸ்-சுப்யான் கோத்திரத்தவர்களிடையே 40 ஆண்டுகள் தாஹிஸ் யுத்தம் இடம்பெற்றது. இழிவான வார்த்தைப் பிரயோகம் கினானா - கைஸ் கோத்திரத்தவரிடையே புஜ்ஜார் யுத்தத்தை 10 வருடங்கள் நடத்தியது.

- போராடுதவற்கென்றே ஆண்களும் சிலபோது பெண்களும் பயிற்றுவிக்கப்பட்டனர். கட்டாய இராணுவ சேவை இருந்தது. வீர உணர்வு வளர்க்கப்பட்டது. எங்களில் எந்தத் தலைவரும் மூக்கினால் மரணிப்பதில்லை. பழிவாங்கப்படாத நிலையில் கொலை செய்யப்படவுமில்லை. என்று அவர்களின் கவிதையொன்று கூறுகிறது. போரின்போது உயிர் மூக்கின் வழியாகவன்றி காயத்தின் வழியாகவே வெளியேறுமென அவர்கள் கருதி வந்தனர். சமாதானத்தை ஏற்படுத்தும் நிறுவனங்களற்ற நிலையில் பழிக்குப் பழி தீர்வாக அமைந்தது. அநியாயத்திற்கு உள்ளாக்கப்பட்ட கோத்திரம் அநியாயம் செய்த கோத்திரத்தை ஷைகின் அனுமதியின்றி போருக்கிழுக்க முடியாது. எதிர்க் கோத்திர ஷைகு அனுமதிக்காதபோது பழிக்குப் பழி வாங்கப்படும்.

- வலவணி, இடவணி, முன்னணி, பின்னணி, நடுவணி என படையணிகள் இருக்கும். கவிஞர்கள் தமது கோத்திரத்தின் மேன்மையை மத்ஹ் (புகழ்பா) ஆகவும், எதிர்க் கோத்திரத்தின் கீழ்மையை ஹிஜா (வசைபா)வாகவும் பாடுவர். பெண்கள் உயர்ந்த குரலில் சத்தமிட்டு உற்சாகப்படுத்துவர்.

- போரில் குழந்தைகளையும் பெண்களையும் எரித்தல், கர்ப்பிணிகளின் வயிற்றைக் கிழித்தல், பயிற்சி பெறுவதற்காக சிறுவர் மீது அம்பெறிந்து கொல்லல், சடலங்களை குரூரமாகச் சிதைத்தல், மரங்களை வெட்டுதல், கட்டடங்களை இடித்தல் போன்ற கெடூரங்கள் நிகழ்ந்தன.

- சமூகத்தில் மதுவருந்தல், களவெடுத்தல், கொள்ளையடித்தல், பழிவாங்குதல், சூதாடுதல், விபசாரம் செய்தல் போன்றன மலிந்திருந்தன. இவை குற்றங்களாகக் கருதப்படவில்லை. பதிலாக கௌரவமாகக் கணிக்கப்பட்டன.

- மொழியாற்றல், சுதந்திர வேட்கை, வீரம், விருந்தோம்பல், வாக்குறுதி மீறாமை, எளிமை முதலிய நல்ல பண்புகளும் சமூகத்தில் காணப்பட்டன.

- ஒழுங்கான குடும்ப அமைப்பு காணப்படவில்லை. பெண்கள் இழிவாக நடத்தப்பட்டனர். அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தன. அழகும், செல்வமும், உயர் குலமுமுடைய பெண்களுக்கு சமூகத்தில் மதிப்பிருந்தது. விறகு பொறுக்குதல், நீர் கொண்டு வருதல்,

பால் கறத்தல், உணவு சமைத்தல், நூல் நூற்றல், வெண்ணெய் தயாரித்தல் போன்றவற்றை அவர்கள் செய்து வந்தனர். மணவுரிமை, மணவிலக்குரிமை, சொத்துரிமை, கல்வி பெறும் உரிமை போன்றன வழங்கப்படவில்லை.

- பல்வேறுபட்ட மணமுறைகள் இருந்தன. மேன்மக்கள் பின்பற்றிய ஒப்பந்த முறையிலான திருமணத்தை (நிகாஹ் அஸ்ஸஹீஹ்) தவிர, ஒழுங்கீனமான பல்வேறு மணமுறைகள் இருந்தன. ஆண் பிள்ளைகள் இல்லாதவர்கள் நல்ல சந்ததிக்காக தங்கள் மனைவியரை பிற ஆண்களிடம் அனுப்புதல், பத்துக்கு மேற்பட்ட ஆண்களுடன் தொடர்பு கொண்டு பிள்ளை பெற்றபின் தாய் தன் விருப்பின் பேரில் தந்தையைப் பிரகடனப்படுத்தல், ஒப்பான ஆணை தந்தையாகப் பிரகடனப்படுத்தல், மூத்தவரின் மனைவியை இளையோரும் அனுபவித்தல், மனைவியை மாற்றி அனுபவித்தல், பெண் மக்களை தந்தையர் மாற்றிக் கொண்டு மணத்தல், கோத்திர ஆணின் அழைப்பை புறக்கணிக்க முடியாமல் தொடர்புகொள்ளல், தந்தையின் மறு தாரத்தை அவர் இறந்த பின் மகன் மண முடித்தல் போன்றன அவற்றுள் சில.

- பெண் குழந்தை பிறந்தால் உயிருடன் புதைக்கும் வழக்கம் முழர், தமீம் குழாஆ கோத்திரங்களிடையே இருந்தது. எதிர்க் கோத்திரத்தின் தொல்லையிலிருந்து பாதுகாத்தல், போரில் அடிமைகளாக மாறுவதை தவிர்த்தல், அவர்களைச் சுமந்து கொண்டு அலையும் (நாடோடி வாழ்வு) சிரமத்திலிருந்து விடுபடல், வறுமை போன்றன இதற்கான காரணம் என்பர். எனினும் பெண்களை கௌரவிக்கும் மரபும் இருந்திருக்கிறது. உங்களுக்கு கண்ணியமான தாய்மார்களைப் பெற்றுத் தந்தோம் என பிள்ளைகளிடம் தெரிவித்தல், மலக்குகளை அல்லாஹ்வின் பெண் மக்களாக உருவகித்தல், சிலைகளை பெண் வடிவில் அமைத்தல் போன்றன இதனை எடுத்துக் காட்டுகின்றன.

- **பொருளாதாரம்**
  - அறேபியாவின் புவியியல் அதன் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. தென்னறேபியாவும், பாலைவனப் பசுந்தரைகளுமே பயிர் விளையும் பூமிகளாகக் காணப்பட்டன. வசந்த காலத்தில் வாதி எனப்படும் காட்டாறுகளில் புற்பூண்டுகள் வளர்ந்து மந்தைகளின் மேய்ச்சல் தரைகளாக மாறும். வட அறேபிய ஹிஜாஸில் பேரீந்தும், யமனில் கோதுமை- பார்ளியும், உம்மானில் நெல்லும் உற்பத்தியாகின. தாயிபில் மரக்கறிகளும், அப்பிள், மாதுளை, தோடை, திராட்சை, வாழை, அப்ரிகோட் முதலிய பழங்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

  - மக்கா புனித தலமாகவும், வணிகப் பாதைகள் சந்திக்கின்ற கேந்திர நிலையமாகவும் இருந்தமையால் குறிப்பாக மேட்டுக் குடியினர் வணிகத்தில் ஈடுபட்டனர். கஃபாவின் பரிபாலகரான குறைஷியர் சிறந்த வணிகர்களாக இருந்ததோடு வெளிநாட்டில் வணிகம் செய்வதற்கான பல சலுகைகளையும் பெற்றிருந்தனர். மாரியில் யமனுக்கும், கோடையில் ஷாமுக்கும் அறபு வணிகக் குழுக்கள் (கரவான்) சென்றன. கரவான்கள் 2500க்கு மேற்பட்ட ஒட்டகங்களையும் 300க்கு மேற்பட்ட வணிகர்களையும் கொண்டிருந்தன. உக்காள், மஜன்னா, துல் மஜாஸ் ஆகிய இடங்களில் ஆண்டுச் சந்தைகள் நடந்தன. பெண்களும் வணிக முயற்சிகளில் ஈடுபட்டனர். கரவான்களைப் பாதுகாத்தல், வழிகாட்டல், நீர் கொடுத்து உதவல் போன்ற உபதொழில்களிலும் பலர் ஈடுபட்டனர். மதுசாரம் தயாரித்தல், புடைவை நெய்தல், தோல் பதனிடல் போன்ற கைத்தொழில் முயற்சிகள் தாயிபில் இடம்பெற்றன. வட்டித் தொழில், பாலியல் தொழில், கொள்ளையடித்தல், மீன்பிடித்தல், கோழிப் பண்ணை தொழில்களிலும் ஒரு பகுதியார் ஈடுபட்டனர். நாட்டுப்புற அறபிகள் (பதவிக்கள்) பெரும்பாலும் ஆடு, ஒட்டகை மந்தைகளை மேய்த்து வந்தனர்.

- **அறபு மொழியும் இலக்கியமும்**
  - இக்கால கட்டத்தில் அறபு மொழி பெரும்பாலும் பேச்சு வழக்கிலேயே பயின்று வந்தது. எழுத்து வழக்கு அரிதாகவே இருந்தது. இதனால் இவர்கள் உம்மிய்யூன் எனப்பட்டனர். செய்யுள் இலக்கியம் (நழ்ம்) வளர்ந்த அளவு உரைநடை இலக்கியம் (நஸ்ர்) வளரவில்லை. எழுத்துச் சாதனங்களும் எழுத்தறிவும் இல்லாமலிருந்தமை இதற்கான காரணமாக இருக்கலாம். மனனமிடும் ஆற்றல் இருந்தமை செய்யுள் இலக்கியம் பாதுகாக்கப்படக் காரணமாக அமைந்தது.

  - எதுகை, மோனை கொண்ட வசன நடை புழக்கத்திலிருந்தது. பழமொழிகள் உரைநடையில் கலந்திருந்தன. அவை வரலாற்று நிகழ்வுகளை மையப்படுத்தித் தோன்றியிருந்தன. பிற்காலத்தில் அம்ஸாலுல் அறப் (முபழ்ழல் பின் ஸலாமா) மஜ்மஉல் அம்ஸால் முதலிய பழமொழித் தொகுப்புகளாக அவை கிடைத்தன. அத்தோடு பொன்மொழிகளும் வழக்கில் இருந்தன. குஸ் இப்னு ஸஇதா, அக்ஸம் பின் ஸைத் முதலிய சிறந்த பேச்சாளர்களும் இருந்தனர். இவர்களது குத்பாக்கள் பிரசித்தமானவை.

  - அறபுச் செய்யுள் இலக்கியம் எப்போது ஆரம்பித்தது எனக் குறிப்பிட முடியவில்லை. ஆனால், இக்கால கட்டத்தில் செய்யுள் இலக்கியம் வளர்ந்த நிலையில் இருந்தது. ஆரம்பத்தில் தனிக் கவிதைகள் தோன்றி அப்துல் முத்தலிபின் காலத்தில் கஸீதாக்கள் தோன்றுமளவு உயர்ந்தாகக் குறிப்பிடுவர்.

  - கவிதைகளின் முதற்கட்டமாக ஓசை நயத்துடைய உரைநடைப் பாங்கிலான கவிதைகள் தோற்றம் பெற்றன. இதனை ஸஜஉ என்பர். காஹின் எனப்பட்ட குறி சொல்வோர் இதனைக் கையாண்டனர்.

  - ஸஜஉவின் அடுத்த கட்ட வளர்ச்சி ரஜ்ஸ் எனப்பட்டது. இக்கவி வடிவங்களைக் கொண்ட கவிதைகள் பிற்காலத்தில் முஅல்லகாத், முபழ்ழலிய்யாத், ஹமாஸா எனும் பெயர்களில் தொகுக்கப்பட்டன. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முஹல்ஹில் என்பவரே ரஜஸ் இனக் கவிதைகளை அறிமுகப்படுத்தியதாகக் கூறுவர்.

  - கஸீதாக்கள் பரிசு பெறும் நோக்கத்தோடு பாடப்பட்டன. இவை 20-100 அடிகளைக் (அப்யாத்) கொண்டிருந்தன. அம்ர் இப்னு குல்ஸூம் பாடிய கஸீதா 1000 அடிகளைக் கொண்டிருந்தாலும் இன்று 100 அடிகளே காணப்படுகின்றன. கஸீதாக்கள் போர், காதல் முதலியவற்றைக் கருப் பொருளாகக் கொண்டு பாடப்பட்டன.

  - அறபு சமூக அமைப்பில் கவிஞன் முக்கியமான பாத்திரத்தை வகித்தான். சமூகத்தில் அவனுக்கு தனியான அந்தஸ்து இருந்தது. தெய்வீக ஆவி அவனில் குடியிருப்பதாக நம்பினர். கவிஞர்கள் தோன்றினால் அவனது கோத்திரம் அதனை விழாவெடுத்துக் கொண்டாடியது. மத்ஹ் (புகழ்பா), ஹிஜா (வசைப்பா) பாடுவதற்கு அவன் தேவைப்பட்டான். கவிஞன் பிரசாரகனாகச் செயற்பட்டான்.

  - கவித்துவத்தை வளர்ப்பதற்காக அந்தச் சமூகம் கவிஞர்களிடையே போட்டிகளை நடத்தியது. புனித யாத்திரைக் காலத்தை அண்மிய நாட்களில் உக்காள் முதலான சந்தைகளில் கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெறும் கவிஞர்கள் பாராட்டப்பட்டனர். உக்காளில் வெற்றி பெற்ற கவிதைகள் எகிப்திய பட்டில் தங்க எழுத்துகளால் (முதஹ்ஹபாத்) பதிக்கப்பட்டு க.்.பாவில் தொங்கவிடப்பட்டன. இக்கவிதைகளே முஅல்லகாத் என வழங்கப்பட்டன. பிற்காலத்தில் அவ்வாறு தொங்கவிடப்பட்ட கவிதைகள் ஸப்அ முஅல்லகாத் எனும் பெயரில் ஹம்மாத் அல் ராவியா (கி.பி. 772) என்பவரால் தொகுக்கப்பட்டன.

- இம்ரஉல் கைஸ் (கிந்தா கோத்) தரபா (பக்ர்) அம்ர் இப்னு குல்ஸூம் (தக்லிப்) அந்தரா (அபஸ்) ஸுஹைர் (முஜன்னா) லபீத் (ஜ.ஃபர்) ஸன்பரா (அஜீத்) என்போரே முஅல்லகாத்தின் ஆசிரியர்களாவர். இவை பெருமை, வீரம், காதல், புகழ், வசை, விவரணம், கையறுநிலை என்பவற்றைப் பிரதிபலித்தன.

- "குறைஷியருக்கு கவிதையால் பதிலடி கொடுங்கள்; ஏனெனில் அது அவர்களுக்கு ஈட்டியை விடக் கூர்மையானது" (முஸ்லிம்) என்ற நபி (ஸல்) அவர்களின் ஹதீஸும், "கவிதைகள் அறபு மக்களின் வாழ்க்கைப் பதிவேடுகள்" என்ற உமர் (ரழி) அவர்களின் கூற்றும் அன்று கவிதை பெற்ற செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றன.

- **சமயமும் ஒழுக்கமும்**
  - இக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள், அல்லாஹ்வை அறிந்திருந்தனர். (நபியே) அவர்களைப் படைத்தவன் யார் என்று கேட்பீராயின் அல்லாஹ்தான் என அவர்கள் பதில் கூறுவார்கள் (43:87). வானங்களையும் பூமியையும் படைத்து சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தியவன் யார் என்று கேட்பின் அல்லாஹ் என்று பதிலளிப்பர் என்பன போன்ற அல்குர்ஆன் வசனங்கள் இதனை எடுத்துக் காட்டுகின்றன. யமனில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் (கி.பி. 378, 465, 512) இதனை நிரூபிக்கின்றன. அக்கால கவிஞர்களின் கவிதைகளிலும் இக்கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. உங்கள் உள்ளத்திலுள்ள இரகசியங் களை அல்லாஹ்வுக்கு மறைக்க வேண்டாம் என்று கவிஞர் ஸுஹைர் பாடியுள்ளார். மக்களிடம் கேட்டது கிடைக்காது போகலாம். அல்லாஹ்விடம் கேட்டால் நிராகரிக்கப்படுவதில்லை என கவிஞர் உபைத் பாடியுள்ளார். பிஸ்மிகல்லாஹும்ம என்று ஆரம்பிக்கும் வழக்கம் அவர்களிடமிருந்திருக்கிறது. சிலைகள் எங்களை அல்லாஹ்வுக்கு சமீபமாக்கி வைக்குமென அவர்கள் கூறுவதாக அல்குர்ஆன் (39:3) சுட்டிக்காட்டுகிறது.

  - அன்று ஹுனபா எனப்பட்ட ஒரு தொகுதியினர் வாழ்ந்தனர். அவர்கள் இப்றாஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாகக் கூறினர். சிலை வணக்கத்திலிருந்து விலகி நின்றனர். செத்த - பலியிடப்பட்டவற்றின் இறைச்சியை உண்ணாதிருந்தனர். பெண் குழந்தைகள் உயிருடன் புதைக்கப்படுவதை எதிர்த்தனர். உபைதுல்லாஹ் பின் ஜஹ்ஷ், உஸ்மான் பின் அபீ ஹுவைரித், ஸைத் பின் அம்ர், வரகா பின் நவ்பல், குஸ்பின் ஸாஇதா முதலானோர் அவர்களில் குறிப்பிடத்தக்க சிலராவர். இவர்களில் முதல் நால்வரும் முஷ்ரிக்களின் வழிபாட்டிலிருந்து பிரிந்து தமக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டனர். தாங்கள் எந்த மார்க்கத்திலுமில்லை எனக் கூறி உண்மையான மார்க்கத்தைத் தேடி அலைந்தனர்.

  - கிரேக்க, உரோம நாகரிகங்களின் தாக்கத்துக்குட்பட்ட யூத மதம் அறபு நாட்டில் அறிமுகமாகியது. கி.பி. 44ல் உரோமப் பேரரசு பலஸ்தீனிலிருந்து யஹூதிய அரசை வீழ்த்தியபோது யூதர்கள் அறபு நாட்டில், கைபர், பிதக், யஸ்ரிப் பிரதேசங்களில் குடியேறினர். அவர்களுள் கைனுகா, நுழைர், குறைழா எனும் மூன்று கோத்திரங்களும் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

  - அறபு நாட்டின் எல்லையில் வாழ்ந்த லஹ்ம், ஜஹ்ம் போன்ற கோத்திரத்தவர்களும் நஜ்தின் தை கோத்திரத்தவரும் மக்காவில் அஸத் கோத்திரத்தவரும், தென்னரேபியாவில் நஜ்ரான் பிரதேசத்தவரும் கிறிஸ்தவராக வாழ்ந்தனர். வட ஆபிரிக்காவைக் கைப்பற்றிய உரோமப் பேரரசு அபீசீனியாவுக்கூடாக தென்னரேபியாவுக்குள் நுழைந்ததால் அங்கு கிறிஸ்தவ சமயம் வேரூன்றியது. ஷாம் பிரதேசத்தை அண்டிய அறபுப் பிரதேசம், பைசாந்திய கட்டுப்பாட்டில் இருந்தமையால் அங்கும் கிறிஸ்தவ சமயிகள் வாழ்ந்தனர்.

- பாரசீகத்தில் நிலவிய சொராஸ்தரிய மதத்தின் திருந்திய வடிவமான மஜூஸியம் அறபு நாட்டின் பாரசீக எல்லையில் காணப்பட்டது. பனூ தமீம்கள் இதனைக் கடைப்பிடித்தனர். இவர்கள் அக்கினி வழிபாட்டில் ஈடுபட்டனர்.

- இவர்களைத் தவிர அல்லாஹ்வை நம்பிய, ரிஸாலத்தை மறுத்த நட்சத்திரத்தை அடையாளச் சின்னமாக வைத்திருந்த சூரியன், புதன், வியாழன் முதலிய கிரகங்களை வணங்கிய ஸாபிஈன் எனப்பட்ட சமயிகள் தென்னறேபியாவில் வாழ்ந்தனர். 'நிச்சயமாக விசுவாசங் கொண்டார்களே அவர்களும், யூதர்களாக இருந்தார்களே அவர்களும், ஸாபியீன்களும் கிறிஸ்தவர்களும் மஜூஸிகளும், இணைவைத்துக் கொண்டிருந்தோரும் - நிச்சயமாக இவர்களிடையே அல்லாஹ் மறுமையில் தீர்ப்பளிப்பான். (22:17) என்ற ஆயத், மேற்குறிப்பிட்ட சமயங்களை சுட்டிக்காட்டுகின்றது.

- எனினும், அறபுகளுக்கு மத்தியில் சிலை வணக்கமே பிரபல்யமடைந்திருந்தது. முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த, மறுமையை முற்றாக மறுத்த க.்.பாவின் பரிபாலகராக இருந்த அம்ரிப்னு லுஹை அல்குஸாயீ என்பவனே மக்காவில் சிலை வணக்கத்தை அறிமுகப்படுத்தினான். ஷாமுக்கு வியாபாரத்துக்குச் சென்ற அவன், அங்கு நிகழும் சிலை வணக்கத்தைப் பார்த்து ஹுபல் எனும் சிலையைக் கொண்டு வந்து க.்.பாவில் வைத்தான். அவன் கொண்டு வந்த சிலையை வணங்க விரும்பாத ஏனைய கோத்திரத்தவர்கள் தத்தமக்கென தனித்தனி சிலைகளைக் கொண்டு வந்து வைத்தனர். இதனால் க.்.பாவைச் சுற்றி 360 சிலைகள் நின்றன. ஒவ்வொரு குலத்துக்கும் தனித்தனி குல தெய்வங்கள் உருவாக்கப்பட்டன.

| உதாரணமாக: | **சிலை** | **குலம்** | **இடம்** |
|---|---|---|---|
| | லாத் | ஸகீப் | தாயிப் |
| | உஸ்ஸா | குறைஷ் | மக்கா |
| | மனாத் | ஔஸ்-கஸ்ரஜ் | மதீனா |
| | வத் | கல்ப் | தூமாதுப் ஜந்தல் |
| | யாகூஸ் | மத்ஹஜ் | யமன் |

சிலைகளை மட்டுமன்றி கற்களுட்பட ஏனைய படைப்புகள், இவை ஒன்றுமில்லாதபோது உணவுப் பண்டங்களை கூட வணக்கத்துக்காக ஏற்றுக் கொண்டனர். அவர்கள் சிலைகளுக்கு வணக்கம் செலுத்தினர்; நேர்ச்சை வைத்தனர்; அவற்றுக்காக பலியிட்டனர்; அவற்றிடம் குறி கேட்டனர்.

- தவ்ஹீதின் மையமாக அமைந்த க.்.பா, இக்காலத்தில் சிலை வணக்கத்தின் மையமாக மாறியது. புனித யாத்திரைக் காலம் புனித மாதங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பல நாட்டு யாத்திரிகர்களும் அங்கு வந்தனர். ஆண்கள் பகலிலும் பெண்கள் இரவிலும் நிர்வாணமாக அதனை வலம் வந்தனர். அங்கிருந்த சிலைகளுக்கு பலி கொடுத்தனர்.

- அவர்கள் பல மூட நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். விலங்குகளதும், பறவைகளதும் ஓசைகளுக்கு கற்பனைக் கருத்துக்களை முன்வைத்தனர். ஒருவர் கொலை செய்யப்பட்டு அவருக்காக பழிவாங்கப்படவில்லையாயின் அவரது உயிர் ஆந்தை உருவெடுத்து அஸ்கினி (எனது தாகத்தைத் தீர்ப்பீராக) என்று கத்துவதாக நம்பினர். மழையில்லாத போது குதிரையின் வாலில் தீப்பந்தத்தைக் கட்டி மலை மீது துரத்தினர். தம் தேவைகளை நிறைவேற்ற நர, மிருக பலி கொடுத்தனர்.

- இவ்வாறான சமூக, கலாசார நிலை அக்கால கட்டத்தை ஜாஹிலிய்யாக் காலம் என வழங்க வைத்தது. ஜாஹில் என்பதன் கருத்து அறிவிலி என்பதாகும். சிலர் அது அறிவில்லாத காலம் அல்ல, பண்பு நெறி காணப்படாத காலம் என குறிப்பிடுவர். பொதுவாக, இஸ்லாமிய நம்பிக்கையும், வாழ்க்கைமுறையும் காணப் படாத காலமாக அது இருந்தது என்றும் அதனால்தான் ஜாஹிலிய்யாக் காலம் என வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடுவர்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம் அய்யாமுல் ஜாஹிலிய்யா என அழைக்கப்படுவதற்கான காரணங்களை சுருக்கமாக முன்வையுங்கள்.

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து
- (1) அறேபியாவின் புவியியல் வரலாறு
- (2) சமூக பொருளாதார நிலை
- (3) அறபுமொழியும் இலக்கியமும்
- (4) சமயமும் இலக்கியமும் எனும் தலைப்புக்களின் கீழ் தகவல் திரட்டச் செய்யுங்கள்.

**படி III** திரட்டப்பட்ட தகவல்களை வகுப்பறையில் முன்வைக்கச் செய்யுங்கள்.

**படி IV** அவற்றைக் குறை நிரப்புச் செய்து தொகுத்தெழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை


1. அமீன் எம்.ஐ.எம். (1999) *அறேபியர் வாழ்வியல்*, ஹெம்மாதகம, அல் ஹஸனாத் பதிப்பகம்.
2. அபூபக்ர் ஏ.எம். (1998), *இஸ்லாமிய வரலாறு - பாகம் 01*, சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்.

**தேர்ச்சி 7.0 : இஸ்லாத்துக்கு முந்திய காலகட்டத்தில் நிலவிய சமூக, கலாசார, அரசியல் நிலைகளை இனங்காண்பதனூடாக ஜாஹிலிய்யத்தை தவிர்ந்து நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2:** நுபுவ்வத் பெறுவதற்கு முன் நபி (ஸல்) அவர்களின் செம்மையான வாழ்க்கை நெறி முறையை விபரிப்பார்.

**காலம்** : 20 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள்** :

- நபி (ஸல்) அவர்களின் முதல் நாற்பது வருட வாழ்வை விளக்கிக் கூறுதல்.
- அக்காலகட்டம் நுபுவ்வத்துக்கான பயிற்சிக் கட்டம் என்பதை இனங்காணுதல்.
- அவர்களின் முன்மாதிரிகளைக் கடைப்பிடித்து வாழ்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**நபி (ஸல்) அவர்களின் பிறப்பு முதல் நுபுவ்வத் வரை**

- **நபி (ஸல்) அவர்களின் பரம்பரை**
  - பிஹ்ரி → காலிப் → லுவை → கஅப் → முர்ரத் → கிலாப் → குஸை அப்துல் மனாப் → ஹாஷிம் → அப்துல் முத்தலிப் → அப்துல்லாஹ் → முஹம்மத் (ஸல்) அவர்கள்.

  - இவர்களுள் பிஹ்ரி என்பவரே குறைஷ் எனப்பட்டார். இவரிலிருந்தே குறைஷ் குலம் தோன்றுகிறது. குஸை (398-480) என்பவர் மக்காவில் ஒரு நிருவாக அமைப்பை ஏற்படுத்தியவர். ஹாஷிம் குறைஷியர் வணிகம் செய்வதற்கான வசதிகளை செய்து கொடுத்தவர். அப்துல் முத்தலிப் தூர்ந்து மறைந்து போயிருந்த ஸம் ஸம் கிணற்றைக் கண்டுபிடித்து யாத்திரிகர்களுக்கு நீர் வசதி செய்து கொடுத்தவர். இவரது காலத்திலேயே அப்ரஹா என்ற யமன் நாட்டு அதிபதி க.ஃபாவை இடிப்பதற்காக யானைகளுடன் படையெடுத்து வந்தார். இது யானைப் படையெடுப்பு என அழைக்கப்படுகிறது. இப்படையெடுப்பு நிகழ்ந்த ஆண்டு 'ஆமுல் பீல்' எனப்படுகிறது. இவ்வாண்டிலேயே (கி.பி. 570/571) நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

  - ஆப்ரஹா, அபீசீனிய மன்னனின் பிரதிநிதியாக யமனை ஆண்டு வந்தான். யாத்திரீகர் மூலம் மக்கா பெற்று வரும் செல்வத்தையும், செல்வாக்கையும் கண்டு பொறாமைப்பட்டான். தனது நாட்டில் ஒரு கோயிலைக் கட்டி அங்கு வருமாறு மக்களை அழைத்தான். க.ஃபா இருக்கும் வரை யாத்திரீகர் அங்கு வரார் என தெரிந்து கொண்டபோது க.ஃபாவை இடிக்கத் தயாரானான். அவனது யானைப் படையை அபாபீல் என்ற பட்சிகள் மூலம் அல்லாஹ் அழித்துவிட்டான். ஸூறதுல் பீல் இதனை சுட்டிக் காட்டுகின்றது.

  - நபி (ஸல்) அவர்கள் பிறக்கு முன்பே தந்தை அப்துல்லாஹ் மரணமானார். பிறந்து ஆறு வயதில் தயார் மரணமானார். அறபியரின் வழக்கப்படி ஹலீமா எனும் பெண்ணால் பாலூட்டப்பட்டார். கிராமிய பௌதிக பண்பாட்டுச் சூழல் நபி அவர்களின் உடலாரோக்கியத்துக்கும், சொல் வன்மைக்கும் உரமிட்டது. தாயார் மரணித்தபோது பாட்டன் அப்துல் முத்தலிபினால் போசிக்கப்பட்டார். இக்காலத்தில் நபி (ஸல்)

அவர்களுக்கு பாட்டன் மூலம் தலைமைத்துவப் பயிற்சி கிடைத்தது. அவரிறக்க பெரிய தந்தை அபூதாலிபால் வளர்க்கப்பட்டார். அவர் ஏழையாக இருந்தாலும் கௌரவமானவராக இருந்தார். அவர் மூலமாக நபியவர்கள் தொழில் பயிற்சி பெற்றார்கள். மந்தை மேய்த்தார்கள். வியாபாரம் செய்தார்கள். அறபு நாட்டுக்கு வெளியே வணிகப் பயணங்களை மேற்கொண்டார்கள். இச்சந்தர்ப்பங்களில் எதிர்கால நபி என கிறிஸ்தவ குருமார்களால் இனம் காணப்பட்டார்கள்.

- இக்கால கட்டத்தில் நபி (ஸல்) அவர்கள் மூன்று முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
  1. கினானா-கைஸ் கோத்திரங்களுக்கிடையே நிகழ்ந்த ஹர்புல் புஜ்ஜார் எனும் போரில் நபி (ஸல்) அவர்கள் பிரசன்னமாக இருந்தார்கள். இங்கு அறாபிய போர் முறையை அனுபவ ரீதியாக அறிந்து கொண்டார்கள். எதிரிகள் எய்யும் அம்புகளைப் பொறுக்கிக் கொடுக்கும் பணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.
  2. யமனிலிருந்து வந்த ஸுபைத் என்ற வணிகரின் பொருள்களை கொள்வனவு செய்த அல் ஆஸ் பின் வாஇல் என்பவர் பணங் கொடுக்காது மறைந்து கொண்டார். யமன் வாசி, அபீ குபைஸ் மலையிலேறி முறையிட்டார். ஆத்திரமடைந்த சுபைர் பின் அப்துல் முத்தலிபுடன் நபி (ஸல்) அவர்களும் இணைந்து இப்னு ஜுத்ஆன் என்பவரின் வீட்டில் அவருக்கு உதவுவதற்காக பிரமுகர்களை ஒன்று கூட்டி இணக்க சபையொன்றை ஏற்படுத்தினர். இது ஹில்புல் புழூல் எனப்பட்டது. பீஜார் யுத்தத்தில் கண்ட கொடுமைகள் இனியும் நிகழக் கூடாது என்பதற்காக இவ்விணக்க சபை கூட்டப்பட்டதெனவும் சில வரலாற்றாசிரியர் கள் குறிப்பிடுவர். 'இன்று கூட அத்தகைய ஓர் ஒப்பந்தத்துக்காக அழைக்கப்பட்டால் நான் அதற்கு செல்லத் தயாராக உள்ளேன்' என பிற்காலத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
  3. ஹர்புல் புஜ்ஜாரில் தந்தையை இழந்த விதவை கதீஜா(ரழி) அவர்களுக்குத் தனது வியாபாரத்தைக் கொண்டு நடத்த முகவர் ஒருவர் தேவைப்பட்டார். அவ்வேளை 'அல் அமீன்' என மக்களால் பாராட்டப்பட்ட நபி (ஸல்) அவர்களை முகவராகத் தேர்ந்தெடுத்தார். பின்னர் நபி (ஸல்) அவர்களின் நற்குண நல்லொழுக்கங்களை அறிந்த கதீஜா (ரழி) அவர்கள், இரு பகுதியாரின் சம்மதத்துடன் நபி அவர்களை மணமுடித்துக் கொண்டார்கள். இத்திருமணம் நபி (ஸல்) அவர்களின் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் பல திருப்பங்களை ஏற்படுத்தியது.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் வரையிலான வாழ்க்கையைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

**படி II** மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து, நுபுவ்வத்துக்கு முந்திய நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை திட்டமிடப்பட்டதா, திட்டமிடப்படாததா என்பது பற்றி விவாதிக்க நெறிப்படுத்துங்கள்.

**படி III** ஒவ்வொரு குழுவிலிருந்தும் முன்வரும் ஐவரை விவாதிக்க விடுங்கள்.

**படி IV** முக்கிய தகவல்களைக் குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை


1. மார்ட்டின் லிங்கஸ் செய்யித் அபூபக்ர் சிராஜுதீன் (1989) *முஹம்மத் (ஸல்)*, தர்காநகர்,IIIT
2. ஸைபுர் ரஹ்மான் முபாரக் பூரி (1979) *அர்ரஹீக்*, சென்னை-01, தாருல் ஹுதா.
3. அபூபக்ர் ஏ.எம். *இஸ்லாமிய வரலாறு பாகம் 1*, சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்.
4. அமீன் எம்.ஐ.எம். முஹம்மதுர் (2002), *ரஸூலுல்லாஹ்*, ஹெம்மாதகம, அல் ஹஸனாத் பதிப்பகம்.

**தேர்ச்சி 8.0 : நபி (ஸல்) அவர்களது வருகையின் நோக்கத்தையும் அவர்களது பல்துறை சார்ந்த நடவடிக்கைகளையும் விளங்கி அவர்களைத் தொடர்ந்து வந்த குலபாஉர் ராஷிதூன்களின் காலத்தில் நிலவிய சமூக, அரசியல், செயற்பாடுகள் பற்றி யும் அறிந்து அவற்றை முன்மாதிரியாகக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1:** நபி (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த பின்னணியையும் அதன் பின்னர் அவர்கள் எதிர்நோக்கிய சவால்களையும் இனங் காண்பார்.

**காலம்** : 25 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**
- நபிமார்களின் அழைப்புப் பணி பற்றி விளக்கிக் கூறுதல்.
- அழைப்பாளர் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு எழுதுதல்.
- நபி (ஸல்) அவர்கள் முன்மாதிரியான அழைப்பாளர் என்பதை நிரூபித்துக் காட்டுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **நபி (ஸல்) அவர்களின் அழைப்புப் பணியும் எதிர்நோக்கிய சவால்கள்**
  - நபி (ஸல்) அவர்கள் 40 வயதை அண்டும் காலத்தில் அடிக்கடி ஹிராக் குகைக்குச் சென்று தனித்திருப்பதும், இறை சிந்தனையிலீடுபடுவதும் வழக்கமாக இருந்தது. ஜாஹிலிய்யத்திலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்ற ஆர்வமும் அவர்களுக்கிருந்தது. இக்காலகட்டத்தில் அவர்கள் உண்மைக் கனவுகளைக் கண்டார்கள். இந்தப் பின்புலத்தில்தான் அவர்களுக்கு முதல் வஹி கிடைத்தது. அச்சமடைந்த நபி (ஸல்) அவர்கள் மனைவி கதீஜா (ரழி) அவர்களின் ஆலோசனைக்கு இணங்க வரகா பின் நவ்பலைச் சந்தித்து தெளிவு பெற்றார்கள். அடுத்து அச்சமூட்டி எச்சரிக்கை செய்யுமாறு (74:2) வஹி இறங்கியது.

  - அவரது தூதை முதலில் மனைவி கதீஜா (ரழி) ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து அபூபக்ர் (ரழி), அலி (ரழி), ஸைத் (ரழி) முதலான நெருங்கிய நண்பர்களும் உறவினர் களும் ஏற்றுக் கொண்டனர். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அவரது பிரசாரம் இரகசியமாக இடம்பெற்றது. அவர்களது தூதை ஏற்றுக் கொண்ட விசுவாசிகள் ஸபா மலையடிவாரத்திலிருந்த தாருல் அர்கமில் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

  - பகிரங்கமாக தூதை எத்திவைக்குமாறு அல்லாஹ்வின் கட்டளை வந்தபோது ஸபா குன்றிலேறி மக்களுக்கு அறிவித்தல் கொடுத்தார்கள். மக்கள் ஒன்று கூடியபோது தான் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட நபி என்பதையும், தன்னைப் பின்பற்றுமாறும் அழைப்பு விடுத்தார்கள். அல்லாஹ்வின் வேதனை பற்றி எச்சரித்தார்கள். இவ்வேளை, பலரும் அமைதியாகக் கலைய, நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அபூலஹப் எதிர்ப்புத் தெரிவித்தார். பின்னர் உறவினரை விருந்துக்கழைத்து தனது தூதை எத்திவைத்தபோதும் அபூலஹபே எதிர்ப்புக் காட்டினார். அவ்வேளை நபி (ஸல்) அவர்களுக்கு ஆதரவளிப்பதாக அபூ தாலிப் உறுதியளித்தார்.

  - இதன் பின்னர் ஒரு சிலர் நபி (ஸல்) அவர்களின் தூதை ஏற்று, அவருக்கு உதவ முன்வந்தனர். மற்றும் சிலர் அவரது தூதை மறுத்து உபத்திரவம் செய்ய ஆரம்பித்தனர். முதலில் நபி (ஸல்) அவர்களை கவிஞன், சூனியக்காரன், பைத்தியக்காரன் என்று

கொச்சைப்படுத்தினர். பின்னர் அவர் நபியாக இருப்பதற்கு தகுதியற்றவர் என பல காரணங்களை முன்வைத்தனர். அவை பயன்படாதபோது, நபி (ஸல்) அவர்களை இம்சிக்க ஆரம்பித்தனர். அபூலஹபின் குடும்பம் அதற்குத் தலைமை தாங்கியது. சொல்லாலும் செயலாலும் நோவினைப்படுத்துவர். இறுதியில் அவரைக் கொலைசெய்து தலையைக் கொண்டு வருபவருக்கு பரிசளிப்பதாக பிரகடனப்படுத்தினர்.

- அபூதாலிபை அணுகி தமது எதிர் நடவடிக்கைகளுக்குத் தடையாக இருக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டனர். போராடப் போவதாக மிரட்டினர். இமாரத் பின் வலீத் என்ற இளைஞனைப் பெற்றுக் கொண்டு, நபி (ஸல்) அவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டனர். பின்னர் நபி (ஸல்) அவர்களுக்கு ஆசையூட்டி மடக்கப் பார்த்தனர். முடியாதபோது எச்சரித்தனர். தொடர்ந்து பேரம் பேசினர். அறிவு ரீதியாக மடக்கப் பார்த்தனர். ஒப்பந்தத்துக்குட்படுத்தவும் முயற்சித்தனர். இவை பலிக்காதபோது பனூ ஹாஷிம், பனூ முத்தலிப் கோத்திரங்களை சமூகப் பகிஷ்கரிப்புக்குட்படுத்தினர். அபூ தாலிபும், கதீஜா (ரழி) அவர்களும் மரணித்த பின்னர் இம்சைகளை அதிகரித்தனர்.

- இதேநேரத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களையும் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் குடும்ப உறுப்பினர்களால் துன்புறுத்தப்பட்டனர். (உதாரணம்: உஸ்மான், ஸஅத், முஸ்அப்) சில அடிமைகள் எஜமானர்களால் கொடுமைப்படுத்தப் பட்டனர். (உதாரணம்: பிலால், கப்பாப், யாஸிர், லுபானா) மற்றும் சிலர் பொதுவாக இம்சிக்கப்பட்டனர். (உதாரணம்: அபூதர், அபூபக்ர்) இவர்களைப் பொறுமையாக இருக்கும்படி நபி (ஸல்) அவர்கள் உபதேசித்தார்கள்.

- தொடர்ந்து இம்சைக்குட்பட்டவர்களை அபிசீனியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். தவறான தகவல் கிடைத்ததால் அவர்களில் ஒரு பகுதியார் மீண்டு வந்தனர். அங்கும் குறைஷியர் தூதர்களை அனுப்பி அவர்களை வெளியேற்றக் கோரினர். எனினும், அது வெற்றிபெறவில்லை. நஜ்ஜாஷி முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்தாலும் அங்கு ஒரு சிலரே நீண்ட காலம் தங்கினர். நுபுவ்வத் பத்தாம் ஆண்டின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பிரசாரம் செய்ய மற்றொரு களத்தைத் தேடினார்கள். தாயிபுக்குச் சென்ற நோக்கமும் இதுதான் மக்காவுக்கு வருகை தந்த யாத்திரிகர்களிடம் இஸ்லாத்தைப் போதித்து களம் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இவ்வேளை யஸ்ரிபைச் சேர்ந்த கஸ்ரஜ்கள் சிலரிடம் இஸ்லாத்தை எத்திவைத்தார்கள்.

- **அகபா உறுதிமொழியும் ஹிஜ்ரத்தும்**
  - நபி (ஸல்) அவர்கள் யத்ரிபிலிருந்து வந்த அறுவரை நுபுவ்வத் 10இல் அகபா என்ற இடத்தில் சந்தித்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தை எத்திவைத்தபோது -ஏற்கனவே யூதர்கள் மூலம் முன்னறிவைப் பெற்றிருந்ததால் அவர்கள் இஸ்லாத்தை உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். யத்ரிப் சென்று அவர்கள் பிரசாரம் செய்ததன் காரணமாக அடுத்த ஆண்டில் 12 பேர், நபி (ஸல்) அவர்களை அகபாவில் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுடன் ஓர் உறுதிமொழி (பைஅத்) செய்துகொள்ளப்பட்டது. அல்குர்ஆனின் 60:12ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுவது போன்ற ஆறு விடயங்களையும் ஏற்று அவர்கள் பைஅத் செய்தார்கள். அவர்களுடன் மதீனாவில் இஸ்லாத்தைப் போதிப்பதற்காக முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்கள் மதீனாவில் வாழ்ந்த பிரமுகர்களைச் சந்தித்து இஸ்லாத்தை அறிமுகப் படுத்தினார். இதன் விளைவாக அடுத்த ஆண்டு புனித யாத்திரைக் காலத்தில் 72 பேர் நபி (ஸல்) அவர்களை அகபாவில் சந்தித்தார்கள். நபி (ஸல்) அவர்களை மதீனாவுக்கு அழைத்து வர வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இவ்விரண்டாம் சந்திப்பின்போது மேலதிகமாக ஒரு சரத்து சேர்க்கப்பட்டது. அது

"தமது உயிரைப் பலிகொடுத்தேனும் நபியைப் பாதுகாப்போம்" என பைஅத் செய்தனர். இதன் பின்னர் அல்லாஹ்வின் அனுமதி கிடைத்ததும், நபி (ஸல்) அவர்கள் மதீனா வருவதாக வாக்குறுதியளித்தார்கள். அது முதல், சிறு சிறு குழுக்களாக முஹாஜிரீன்கள் குறைஷியர் கண்டுகொள்ள முடியாதவாறு மதீனாவுக்குப் போய் கொண்டிருந்தார்கள்.

- இவ்வாறு முஸ்லிம்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதை அறிந்த குறைஷியர் நபி (ஸல்) அவர்களும் அங்கு செல்லக் கூடும் என அஞ்சினார்கள். தாருந் நத்வாவில் கூடிக் கலந்தாலோசித்து அவர்களின் வீட்டைச் சூழநின்று வெளிவரும்போது கூட்டாகக் கொலை செய்வதெனத் தீர்மானித்தார்கள். இதனை அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்தான். நபி (ஸல்) அவர்கள் தமது படுக்கையில் அலி (ரழி) அவர்களை உறங்க வைத்துவிட்டு, வீட்டிலிருந்து வெளியேறி அபூபக்ர் (ரழி) அவர்களின் வீட்டை அடைந்தார்கள். அங்கு ஏற்கனவே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. முதலில் யமன் பக்கமாகப் போய் மூன்று நாள் தவ்ர் குகையில் தங்கி, பின்னர் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். ஹிஜ்ரத் என்பது திடீர் நிகழ்வு அல்ல; அது ஒரு திட்டமிட்ட செயற்பாடாகும்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் முதல் ஹிஜ்ரத் வரையிலான வாழ்வு முறையைக் கற்று வரச் செய்யுங்கள்.

**படி II** மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து அவர்கள் ரிஸாலத்தை முன்வைத்த போது எதிர்நோக்கிய பிரச்சினைகள், அப்பிரச்சினைகளை அவர்கள் அணுகிய முறையும் விளைவும் என்ற தலைப்புகளில் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.

**படி III** அவர்கள் கலந்துரையாடிய விடயங்களை முன்வைக்கச் செய்யுங்கள்.

**படி IV** அவற்றை குறைநிரப்புச் செய்து முக்கிய விடயங்களை குறிப்பெடுத்துக்கொள்ள அறிவுறுத்துங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை

1. மௌலானா அபூ ஸலீம் அப்துல் ஹை (1998), *அண்ணல் நபியின் அழகிய வரலாறு,* சென்னை 600012, லாமிய நிறுவனம் டிரஸ்ட்.
2. அமீன் எம்.ஐ.எம். (2002), *முஹம்மத் ரஸூலுல்லாஹ்,* ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
3. அபூபக்ர் ஏ.எம். (1998), *இஸ்லாமிய வரலாறு, பாகம் 1,* சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சிக்கழகம்.
4. மார்ட்டின் லிங்கஸ் செய்யித் அபூபக்ர் சிராஜுதீன் (1989) *முஹம்மத்(ஸல்),* தர்காநகர்,IIIT
5. சைபுர் ரஹ்மான் முபாரக் பூரி (1979) *அர்ரஹீக்,* சென்னை 01, தாருல் ஹுதா.

**தேர்ச்சி 8.0 : நபி (ஸல்) அவர்களது வருகையின் நோக்கத்தையும் அவர்களது பல்துறை சார்ந்த நடவடிக்கைகளையும் விளங்கி அவர்களைத் தொடர்ந்து வந்த குலபாஉர் ராஷிதூன்களின் காலத்தில் நிலவிய சமூக, அரசியல், செயற்பாடுகள் பற்றியும் அறிந்து அவற்றை முன்மாதிரியாகக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.2:** நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கைப் பகுதியில் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் நுட்பங்களையும் வெற்றிகளையும் விபரிப்பார்.

**காலம்** : 30 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- நபி (ஸல்) அவர்கள் மதினாவுக்கு ஹிஜ்ரத் சென்றமைக்கான காரணங்களை இனங்கண்டு எழுதுதல்.
- மதீனாவில் ஒரு சமூகம் உருவாக்கப்பட்ட முறையினை படிமுறையாக எடுத்துக்காட்டுதல்.
- சமூகத்தைப் பாதுகாப்பதில் ஆட்சியின் பங்கை விபரித்துக் கூறுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **மஸ்ஜிதுந் நபவி**
  - நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற பின்னர் மதீனாவில் மேற்கொள்ளப்பட்ட முதன்மையான பணிகளுள் மஸ்ஜித் நிர்மாணமும் ஒன்றாகும். மக்கா வாழ்க்கைப் பகுதியில் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுகளை நிறுவும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவேதான் ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து குபாவில் மஸ்ஜிதுத் தக்வாவும், மதீனாவில் மஸ்ஜிதுந் நபவியும் கட்டப்பட்டன. ஆரம்பத்தில் பேரீந்து மரக் குற்றிகளாலும், பேரீந்து ஓலைகளினாலும் எளிய முறையில் கட்டப்பட்டன.

  - மஸ்ஜிதுந் நபவி கட்டப்படுவதற்கு சமூகக் காரணியும் உண்டு எனலாம். நபி (ஸல்) அவர்கள், மக்காவில் கட்டியமைக்க வாய்ப்பு இல்லாமற் போன சமூகத்தை மதீனாவில் கட்டியெழுப்ப ஆயத்தமானார்கள். அதற்கு மஸ்ஜித் தேவையாக இருந்தது. மக்களை ஒன்று கூட்டும் அழைப்பாக 'அதான்' ஒலியும், ஒன்றுகூடுமிடமாக மஸ்ஜிதும் அமைந்தன. அதான் ஒலி கேட்டு மஸ்ஜிதுக்கு வந்தோர் ஜமாஅத் தொழுகையில் ஈடுபட்டனர். அத்தொழுகைக்கூடாக சமூக இணக்கத்துக்கும் இயக்கத்துக்குமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. தலைவரைத் தெரிவு செய்தல், தெரிவு செய்த தலைவருக்குக் கீழ்ப்படிதல், தலைவர் தவறுவிடும்போது சுட்டிக் காட்டல், தலைவர் இயலாமையின்போது விலகுதல், சமூக உறுப்பினர்கள் ஒன்றிணைதல், தலைவருக்கு வழிகாட்டல், சகோதரர்களோடு இணக்கமாக நடந்து கொள்ளல், உதவி செய்தல் போன்ற பயிற்சிகள் அந்தப் புதிய சமூகத்துக்கு ஜமாஅத் தொழுகையின் மூலம் வழங்கப்பட்டன.

  - நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதை ஆன்மீகச் செயற்பாடுக்கான களமாக மட்டுமன்றி உலகியல் விவகாரங்களுக்கான மத்திய தலமாகவும் பயன்படுத்தினார்கள். அங்கு கல்விப் போதனை இடம்பெற்றது. நிரந்தர மாணவர்களாக அஸ்ஹாபுஸ் ஸுஃப்பாக்கள் அமர்ந்திருந்தார்கள். குத்பாக்கள் நடத்தப்பட்டன. மக்களின் பிரச்சினைகள், தேவைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அதிதிகள்

வரவேற்கப்பட்டார்கள். பைத்துல் மால் இயங்கியது. சில சந்தர்ப்பங்களில் இராணுவப் பாசறையாகவும் பணிபுரிந்தது. தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அங்கேயே தங்கினார்கள். அவர்களைத் தேடி வருவோர் மஸ்ஜிதில் சந்திக்க வாய்ப்பு இருந்தது. உயர் குடியாகக் கணிக்கப்பட்ட குறைஷியர், மதீனாவின் சுதேசிகள், இஸ்லாத்தை ஏற்ற யூதர்கள், வெளிப் பிரதேசங்களில் இருந்து வந்த முஸ்லிம்கள் ஆகிய யாவரும் ஒரே கூரையின் கீழ் ஒன்றுபடும் சந்தர்ப்பத்தை மஸ்ஜிதுந் நபவி ஏற்படுத்திக் கொடுத்தது.

- **உடன்படிக்கை**
  - அறபிகள் மரபு ரீதியாக தமக்குள் உடன்படிக்கை செய்துகொண்டு நேசக் குழுமமாக வாழும் நிலை அன்று காணப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் அந்த மரபு முறையை தமது இலட்சிய நோக்கிற்காகப் பயன்படுத்தினார்கள். மதீனாவில் ஔஸ், கஸ்ரஜ் என்ற இரு கோத்திரத்தவர்களும் நீண்ட காலம் பரம்பரை எதிரிகளாகப் போரிட்ட நிலையில் வாழ்ந்து வந்தார்கள். மதீனாவுக்குச் சென்ற நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களை ஒன்றிணைத்தார்கள். இவ்வாறே மக்கா விலிருந்து வந்த முஹாஜிரீன்களையும் மதீனாவில் வாழ்ந்த அன்ஸாரீன்களையும் சகோதரர்களாகப் பிணைத்து வைத்தார்கள். இவற்றை விட முஸ்லிம்களையும் யூதர்களையும் பிணைத்த உடன்படிக்கை மிக முக்கியமாக அமைந்தது.

  - நபி (ஸல்) அவர்களை அன்ஸாரீன்கள் தமது வழிகாட்டி என்ற வகையில் வரவேற்றார்கள். யூதர்களோ வேறு நோக்கங்களோடு வரவேற்றார்கள். இரு நோக்கங்களோடு இரண்டு சமூகங்கள் வரவேற்றமை பின்னர் பிரச்சினைகளை உருவாக்குமென நபி (ஸல்) அவர்கள் உணர்ந்தார்கள். தமது இனத்தில் கடைசி நபி தோன்றவில்லை என்ற பொறாமை யூதர்களை குத்திக் கொண்டே இருந்தது. அது எப்போதேனும் வெடிக்கும் என்பதை நபி (ஸல்) அவர்கள் தெரிந்திருந்தார்கள். எனவே முன்னேற்பாடாக யூதர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன் அது “மதீனா சாசனம்” என்ற பெயரால் வழங்கப்பட்டது. இதன் மூலம், நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் பிரவேசித்த ஆரம்ப கட்டத்தை சுமுகமாக வழிநடத்த வாய்ப்புக் கிடைத்தது. பத்ரு யுத்தத்தின் பின்னர் சலசலப்புக்குள்ளான யூதர்கள் அகழி யுத்தத்தின் பின்னர் உடன்படிக்கையை முற்றாகவே முறித்துக் கொண்டனர்.

  - அடுத்து முக்கியமான உடன்படிக்கை ஹுதைபியா உடன்படிக்கையாகும். இது பத்ர், உஹுத், அஹ்ஸாப் போராட்டங்களின் பின்னர் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை யாகும். உயிரிழப்புக்களையும் பொருளிழப்புக்களையும் ஏற்க வேண்டிய நிலைக்குள்ளான குறைஷியர், சமாதானத்தை எதிர்பார்த்தனர். தன்மானத்தை இழக்கத் தயாராக இல்லாததால் அதற்கு முன்வரவில்லை. அதேநேத்தில் மூன்று பெரும் போர்களிலும் வெற்றி பெற்ற முஸ்லிம்கள், புதிய எதிரிகளாக யூதர்களை சந்திக்க வேண்டியேற்பட்டது. வடக்கில் கைபரிலிருந்து யூதர்களும், தெற்கில் மக்காவிலிருந்து குறைஷியரும் எதிர்த்தால் இரு முனைகளில் முஸ்லிம்கள் போரிட வேண்டியேற்படுமென நபி (ஸல்) அவர்கள் பயந்தார்கள். ஒரு முனையிலிருந்து வரும் தாக்கத்தை தடுக்கவே நபி (ஸல்) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கையை செய்தார்கள் என்று அப்துர் ரஹ்மான் மாவர்த்தி குறிப்பிடுகிறார்.

  - பிரதான நான்கு ஷரத்துக்களை உள்ளடக்கிய இவ்வுடன்படிக்கை மேலெழுந்த வாரியாக நோக்கும்போது குறைஷியருக்கு சாதகமாக இருந்தது. இதைக் கண்டு முஸ்லிம்கள் கூட கொதித்தெழுந்தார்கள். ஆனால், அதன் விளைவுகளைப் பார்க்கும்போது அது முஸ்லிம்களுக்கு சாதகமாக அமைந்தது. குறைஷியரே உடன்படிக்கையை முறித்தனர்.

- இவ்வுடன்படிக்கை மூலம் இஸ்லாம் விரிவடையும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. முஸ்லிம்கள் உம்றா செய்யும் சுதந்திரத்தைப் பெற்றார்கள். யூதர்களுடன் போராடி வெற்றி பெறும் வாய்ப்புக் கிட்டியது. அறபு நாட்டுக்கு வெளியே இருந்த சிற்றரசர்கள், பேரரசர்கள் முதலான ஆட்சியாளர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் கடிதங்களை அனுப்பும் தைரியத்தை ஏற்படுத்தியது. இதனால்தான் பகிரங்க வெற்றி என அல்குர்ஆன் இதனைக் குறித்துக் காட்டுகின்றது.

- **போராட்டங்கள்**
  - நபி (ஸல்) அவர்களும், முஹாஜிரீன்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றதன் பின்னால் குறைஷியர் அவர்களை பல்வேறு வகையில் துன்புறுத்த ஆரம்பித்தனர். மந்தைகளைக் கவர்தல், தோட்டங்களுக்குத் தீமூட்டல், உம்றா செய்ய வருபவர்களை இம்சித்தல், மதீனாவில் வாழ்ந்த முனாபிகூன்களைத் தூண்டி முஸ்லிம்களை அங்கிருந்து வெளியேற்ற முயற்சித்தல் போன்று பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பத்ர், உஹுத், அஹ்ஸாப் முதலிய பெரும் போர்களில் அவர்களீடுபட்டாலும் தோல்வி கண்டனர். குறைஷிகளின் தொல்லைகளைத் தடுப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் ஸரிய்யா எனப்படும் சிறிய படையணிகளைத் தயாரித்து மக்கா-மதீனா எல்லைப் பிரதேசங்களில் உலவவிட்டார்கள். இப்படையணிகள் எதிரிகளின் நடமாட்டத்தை அவதானிப்பதற்காகவே அனுப்பப்பட்டன. ஆனால், எதிர்பாராத நிலையில் அப்துல்லாஹ் இப்ன ஜஹ்ஷ் (ரழி) தலைமையில் மக்காவின் எல்லைக்கு அனுப்பப்பட்ட படையணி அம்ர் இப்னு ஹழ்ரமி தலைமையிலான எதிரணியை தாக்கியமை போராட்டத்தைத் தொடக்கி வைத்தது. அபூசுப்யான் தலைமையில் ஷாம் நோக்கிச் சென்று திரும்பிய வணிகக் கூட்டத்தை முஸ்லிம்கள் தாக்கப் போகிறார்கள் என்ற செய்தி மக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மிகைப்படுத்திக் கூறப்பட்டதன் காரணமாக அபூ ஜஹ்ல் தலைமையிலான குறைஷியர் முஸ்லிம்களை எதிர்க்க வந்து பத்ரில் தங்கினர். இதனால் முஸ்லிம்கள் அப்படையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு உட்பட்டார்கள். ஹிஜ்ரி 02ஆம் ஆண்டில் நிகழ்ந்த இப்போர் முஸ்லிம்களுக்கும் குறைஷிகளுக்கும் இடையில் நிகழ்ந்த முதற் போராக அமைந்தது. பத்ரில் தோல்வியுற்ற குறைஷியர் ஹி. 03 இல் உஹுதுக்குப் படையெடுத்து வந்தனர். அதில் முஸ்லிம்கள் தோல்வியுற்றாலும் குறைஷியர் முழுமையான வெற்றியைப் பெற முடியவில்லை. எனவே வேறு பல கோத்திரங்களையும், யூதர்களையும் இணைத்துக் கொண்டு ஹி. 05 இல் மதீனாவுக்கு வந்தனர். முஸ்லிம்கள் அகழி தோண்டி மதீனாவைக் காத்தனர். அதிலும் குறைஷியர் தோல்வியுற்று பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

  - குறைஷியர் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் ஒழிக்கும் நோக்கத்தோடு போராடினர். தமது தலைமைத்துவத்தைக் காத்துக் கொள்ள வேண்டுமென்பதும் அவர்களின் நோக்கமாக இருந்தது. இதற்காக படைப்பலத்தை அதிகரித்தனர். அதற்காக செலவிட்டனர். முஸ்லிம்களுடனான போரில் குறைஷியரின் படைப்பலம் எப்போதும் அதிகமாகவே இருந்தது. மறுபக்கமாக முஸ்லிம்கள் இஸ்லாத்தைக் காப்பதற்காகப் போரிட்டனர். அவர்களின் படைப்பலம் எப்போதும் குறைவாகவே இருந்தது. அவர்களது துணிவும், வீரமும், தெய்வீக உதவியும், நபி (ஸல்) அவர்களின் தலைமைத்துவமும் வழிகாட்டலும் முஸ்லிம்களின் வெற்றிக்கு துணை செய்தன. எனவேதான் அகழி அல்லது அஹ்ஸாப் போரின் பின்னர் குறைஷியர் போராட முன்வரவில்லை. மறுபக்கமாக முஸ்லிம்கள் அடுத்த ஆண்டில் உம்றாவுக்குச் சென்று ஹுதைபியா உடன்படிக்கையை செய்து கொண்டார்கள்.

  - இதன் பின்னர் முஸ்லிம்களுக்கும், யூத கிறிஸ்தவர்களுக்கும் இடையே போராட்டங்கள் நிகழ ஆரம்பித்தன. உஹுத், அகழி போர்களின்போது மதீனாவில் வாழ்ந்த யூதர்கள், ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறியதால் நாடு கடத்தப்பட்டார்கள்.

இவர்கள் மதீனாவிலிருந்து சுமார் 100 மைல் தொலைவிலுள்ள கைபரில் குடியேறினர். கைபர் யூதர்களின் கோட்டைகள் நிறைந்த பலமான பிரதேசமாக இருந்தது. அவர்கள் மதீனாவைத் தாக்க வருவதாக செய்திகள் கிடைத்தன. அவ்வேளை, நபி (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து கைபருக்குப் படை நடத்திச் சென்றார்கள். பல நாள் முற்றுகையின் பின்னர் அவர்களின் கோட்டைகள் வெற்றிகொள்ளப்பட்டன.

- இவ்வாறு ஹி. 07 இல் யூதர்கள் அடக்கப்பட்டபோது ஹி. 8 இல் பைசாந்திய கிறிஸ்தவர்களுக்கு எதிராக போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்த பின்னர், நபி (ஸல்) அவர்கள் பேரரசர்களுக்கு இஸ்லாமிய அழைப்புக் கடிதங்களை அனுப்பினார்கள். உரோம மன்னனுக்கு கடிதம் கொண்டு சென்ற ஹாரிஸ் பின் உமைரை ஷுரஹ்பீல் அல் கஸ்ஸானி கொலை செய்ததால் அதற்கு பழிவாங்கும் நோக்கோடு ஹி. 08 இல் மு∴தா எனும் இடத்துக்குப் படையனுப்பப்பட்டது. அதில் முஸ்லிம் தளபதிகள் மூவர் ஒருவர் பின் ஒருவராக ஷஹீதாகினர். நான்காவது தளபதியாக அமர்ந்த காலித் இப்னு வலீத் வெற்றியோடு மீண்டார்.

- **மக்கா வெற்றி**
  - ஹுதைபியா உடன்படிக்கை குறைஷிகளால் மீறப்பட்டது. எனவே நபி (ஸல்) அவர்கள் மக்காவை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான இரகசிய முயற்சியில் இறங்கினார்கள். "நான் குறைஷிகளின் ஊருக்கு அவர்களுக்குத் தெரியாமல் திடீரென நுழையும் வரை எந்தச் செய்தியும் அவர்களைச் சென்றடையாமல் பாதுகாப்பாயாக" என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். வெவ்வேறு திசைகளுக்கு படையணிகளை அனுப்பினார்கள். எனினும் ஹாத்திப் என்பார் மக்காவுக்கு ஒரு பெண் மூலமாக செய்தியனுப்பினார். அது உடனே கண்டு பிடிக்கப்பட்டது. செய்தி போகாமல் தடுக்கப்பட்டது. பத்தாயிரம் (10,000) பேருடன் சென்ற நபி (ஸல்) அவர்கள் மக்காவின் எல்லையில் மர்ருல் ழுஹ்ரான் எனுமிடத்தில் தங்கி மலை மீது அடுப்பு மூட்டச் செய்தார்கள். முஸ்லிம்களின் படையணி வந்ததைக்கண்டு பயந்த குறைஷித் தலைவர் அபூசுப்யான், நபி (ஸல்) அவர்களை சந்திக்க வந்தார். அவர் தங்க வைக்கப்பட்டு மனமாற்றத்துக்கு இடமளிக்கப்பட்டார். அடுத்த நாள் காலை அவர் இஸ்லாத்தை ஏற்று, மக்கா சென்று மக்களை தஞ்சமடையுமாறு கேட்டுக் கொண்டார். மறுபக்கமாக நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் படையை போராடாமல் நுழைவதற்கு திட்டமிட்டு அனுப்பினார். ஒரு பகுதியில் மாத்திரம் கைகலப்பு ஏற்பட்டது. முஸ்லிம் படை போராடாமலே க∴பாவை அடைந்தது. நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் பணிவோடு க∴பாவை தவாப் செய்தார்கள். மக்கா வாசிகள் அனைவரும் மன்னிக்கப்பட்டார்கள்.

  - இதன் மூலம் குறைஷிகளின் தலைமைத்துவம் வீழ்ந்தது. அறபு நாட்டில் இஸ்லாத்துக்கு எதிரிகள் இல்லாமற் போனார்கள். சுதந்திரமாக உம்றா, ஹஜ் வணக்கங்களை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அறபுக் கோத்திரங்கள் தாமாகவே வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டன. ஹி. 09 இல் முஸ்லிம்கள் ஹஜ் செய்தார்கள். ஹி. 10இல் நபி (ஸல்) அவர்களும் ஹஜ்ஜை நிறைவேற்றினார்கள். 124,000 ஸஹாபாக்களுக்கு மத்தியில் தனது பிரியாவிடைப் பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள். அவர்கள் செய்த த∴வாப் பணியை முஸ்லிம்களிடம் ஒப்படைத்துச் சென்றார்கள்.

- **மதீனா அரசும் பரிபாலன முறையும்**
  - நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்துக்கான காரணங்களை விளக்குபவர்கள், ஓர் அரசாங்கத்தை உருவாக்கும் நோக்கத்தோடு ஹிஜ்ரத் சென்றதாகக் குறிப்பிடுவர். ஏனெனில், இஸ்லாம் உலகம் அழியும் வரை செயல்பட வேண்டிய வாழ்க்கை முறையாக இருக்கின்றது. அதற்கான அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, குடும்ப, ஆன்மீக, ஒழுக்க விவகாரங்கள் பற்றிய வழிகாட்டல்களை யெல்லாம் காட்டிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு நபி (ஸல்) அவர்களுக்கு இருந்தது. தனி மனிதர் சார்ந்த இபாதத், இமாரத், கிலாபத் பொறுப்புக்களுக்கு வழிகாட்ட வேண்டிய தேவையும் இருந்தது. எனவேதான், அவர்கள் ஓர் அரசாங்கத்துக்கூடாக அதற்கான வழிமுறைகளைக் காண்பித்தார்கள்.

  - மனிதன் சேர்ந்து வாழும்போது பிரச்சினைகள் தோன்றுவது இயல்பானது. அப்பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டு வதற்கும் ஒரு நிறுவனம் தேவைப்படுகின்றது. அந்த நிறுவனமாக அரசாங்கம் செயல்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பு வதற்கும், அதனை மேற்பார்வை செய்வதற்கும் ஓர் அரசாங்கத்தை உருவாக்கினார்கள். குர்ஆனினால் நிறைவேற்ற முடியாததை அரசாங்கத்தினால் நிலைநாட்ட முடியும் என்ற கருத்து அரசாங்கத்தின் மேலாதிக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது. நபி (ஸல்) அவர்கள், ஒரு சமூகத் தலைவராக மட்டுமன்றி, ஓர் ஆட்சித் தலைவராகவும் இருந்தமையால்தான் இராணுவமொன்றை கட்டியெழுப்ப முடிந்தது; தமது தூதரை கஸ்ஸானிய சிற்றரசர் கொலை செய்ததற்கு பழிவாங்கும் வகையில் போராட முடிந்தது.

  - ஆதலால் அவர்கள் மதீனாவைத் தலைநகராகக் கொண்ட ஒரு நகர ஆட்சியை முதலில் தாபித்தார்கள். மஸ்ஜிதுந் நபவியை அரசாங்கத்தின் மையமாக அமைத்தார்கள். நிருவாக எல்லை விரிவடைந்தபோது நாஇப்களை நியமித்தார்கள். கடிதங்கள் உடன்படிக்கைகள் எழுதுவதற்கும் ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும் காதிப்களை அமர்த்தினார்கள். சிலபோது நிரந்தரமாகவும் சிலபோது தற்காலிகமாகவும் அவர்கள் பணியாற்றினர். சுமார் 46 காதிப்கள் 246 ஆவணங்களை எழுதியிருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. பிலால் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் பிரத்தியேக செயலாளராக பணியாற்றியுள்ளார்கள். பல நாடுகளுக்கும் தூது கொண்டு செல்வதற்காக ருஸுல் எனப்பட்டோர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஹுதைபியா உடன்படிக்கை நிகழுமுன் மூன்று ருஸுல்கள் குறைஷியரிடம் அனுப்பப்பட்டனர். இஸ்லாமிய அழைப்புக் கடிதங்களை ருஸுல்கள் மன்னர்களிடம் கொண்டு சென்றனர்.

  - ஹிஜ்ரி 6ஆம் ஆண்டுக்குப் பின்னர் தூர பிரதேசங்களை நிருவகிப்பதற்கு வாலி எனப்பட்டோர் அமர்த்தப்பட்டனர். முஆத் இப்னு ஜபல் (ரழி) யெமன் பிரதேச வாலியாக அமர்த்தப்பட்டிருந்தார். நிதி, நீதி, நிருவாகப் பொறுப்புக்கள் அவரிடம் வழங்கப்பட்டிருந்தன. உஸ்மான் பின் அபுல் ஆஸ் (தாயிப்), அதாபின் ஆஸிப் (மக்கா) ஆகியோரும் வாலியாக இருந்தனர். சுமார் 32 வாலிகள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கோத்திர அடிப்படையிலான அறபு சமூகத்தை பரிபாலிப்பதற்காக கோத்தரத் தலைவர்கள் நகீப், ருஆஸா எனும் பெயர்களில் அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் கோத்திரங்களை மத்திய அரசுடன் பிணைத்தனர். மத்திய அரசிலிருந்து வரி அறவிடுவோர் செல்லாதபோது இவர்களே கோத்திர வரிகளை அறவிட்டு மதீனாவுக்கு அனுப்பினர். நீதி பரிபாலனத்துக் காக காழிமார் அமர்த்தப்பட்டனர். உமர் (ரழி), அலி (ரழி) முஆத் (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி), அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி) முதலானோர் காழிகளாகப் பணியாற்றியுள்ளனர். சந்தையில் வியாபார நடவடிக்கைகளை

கண்காணிப்பதற்காக ஸாஹிபுஸ் ஸூக் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். மக்காவில் ஸஈத் இப்னு ஸஈத் அல் ஆஸ், மதீனாவில் உமர் (ரழி) ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். இவை நபி (ஸல்) அவர்கள் தனது ஆட்சியில் சிறந்த பரிபாலனத்துக்கான பல உதவியாளர்களை நியமித்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கைப் பகுதியிலிருந்து மதீனா வாழ்க்கைப் பகுதி வேறுபடுகின்றது என்ற கண்ணோட்டத்தில் தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.

**படி II** மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புகளில் கலந்துரையாட சந்தர்ப்பமளியுங்கள்.

மக்கா-மதீனா வாழ்க்கைப் பகுதியில்

(1) த.்.வா முறை
(2) தனிநபர்களும் சமூகமும்
(3) எதிரிகளை அணுகிய முறை

**படி III** கருத்துக்களை வகுப்பறையில் முன்வைக்கச் செய்யுங்கள்.

**படி IV** குறைநிரப்புச் செய்து தொகுத்தெழுதிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை


- அபூபக்ர் ஏ.எம். (1998), *இஸ்லாமிய வரலாறு I,* சாய்ந்தமருது, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்.
- சைபுர் ரஹ்மான் முபாரக் பூரி (1979), *அர்ரஹீக்,* சென்னை, தாருல் ஹுதா.
- எம்.எச்.எம். நாளிர் (1983) *இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்,* கொழும்பு 10, அஷ்ஷபாப் பதிப்பகம்.

**தேர்ச்சி 8.0 : நபி (ஸல்) அவர்களது வருகையின் நோக்கத்தையும் அவர்களது பல்துறை சார்ந்த நடவடிக்கைகளையும் விளங்கி அவர்களைத் தொடர்ந்து வந்த குலபாஉர் ராஷிதூன்களின் காலத்தில் நிலவிய சமூக, அரசியல், செயற்பாடுகள் பற்றியும் அறிந்து அவற்றை முன்மாதிரியாகக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.3:** இஸ்லாமிய கிலாபத் கோட்பாட்டை நடைமுறைப்படுத்திய பாங்கை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கண்டறிவார்.

**காலம்** : 20 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**
- கலீபாக்களின் ஆளுமைப் பண்புகளை இனங்கண்டு எழுதுதல்.
- ஆளுமைப் பண்புக்கும் நல்லாட்சிக்குமிடையிலான தொடர்பை தர்க்க ரீதியாக எடுத்துக்காட்டுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **கலீபாக்களின் ஆளுமைப் பண்புகள்**
  - நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்துக்கு தலைமை தாங்கியோர் கலீபாக்கள் எனப்பட்டனர். முதலாவது கலீபாவான அபூபக்ர் (ரழி) அவர்களை மக்கள் தலைவராக தெரிவு செய்தபோது அவர் தன்னை கலீபது ரஸூலுல்லாஹ் எனக் கூறிக் கொண்டார்கள். அவரைத் தொடர்ந்து வந்த உமர் (ரழி) அவர்கள் தம்மை கலீபா கலீபது ரஸூலுல்லாஹ் என அழைத்துக் கொண்டார்கள். இப்பெயரே பின்னர் கலீபா என்ற சுருக்கப் பெயரால் வழங்கப்பட்டது. கலீபது ரஸூலுல்லாஹ் என்பதன் பொருள், நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதி என்பதாகும். அதாவது நபி (ஸல்) அவர்கள் செய்த இமாமத் என்ற சமூகத்துக்கு தலைமை தாங்கும் பணியை அவரது பிரதிநிதியாக அமர்ந்து செயல்படுவது என்பதே இதன் கருத்தாகும். அபூபக்ர் (ரழி) அவர்களின் கிலாபத் பிரசங்கம் கிலாபத்துக்கான வரையறையை தெளிவாக எடுத்துக் காட்டியது.

  - கிலாபத் பணியை நிறைவேற்றக் கூடிய தகைமையுடையவர்களே கலீபாவாக பதவி அமர்த்தப்பட்டார்கள். இஸ்லாத்தின் மீது உறுதியான நம்பிக்கையும் தெளிவான அறிவுமுடைய, நபி (ஸல்) அவர்களுடன் நெருங்கி வாழ்ந்த ஸஹாபாக்களிலிருந்தே கலீபாக்கள் தெரிவானமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவர்கள் ஒவ்வொருவரும் தமது பணியை சிறப்பாகச் செய்து முடித்தார்கள் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

  - கலீபா அபூபக்ர் (ரழி) குறைஷிக் குலத்தின் தைம் கோத்திரத்தைச் சேர்ந்தவர். கி.பி. 572 இல் பிறந்த இவர், ஜாஹிலிய்யா பண்புகளிலிருந்து விடுபட்டிருந்தவராவார். அப்துல் க.ஃபா என்ற பெயரைக் கொண்டிருந்த அவர், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் அப்துல்லாஹ் என பெயர் மாற்றம் பெற்றார். எனினும், அபூபக்ர் என்ற குன்யத்துப் பெயரால் வழங்கப்பட்டார். ஸித்தீக், அதீக் என்ற பெயர்களும் அவருக்கு உண்டு. ஹி.11 முதல் 13 வரையிலான சுமார் இரண்டு வருட காலம் இவர் கலீபாவாகப் பதவியிலிருந்தார்.

- இரண்டாவது கலீபாவான உமர் (ரழி) அவர்கள் குறைஷிக் குலத்தின் அதீ கோத்திரத்தைச் சேர்ந்தவர். கி.பி. 583 இல் பிறந்த இவர் அபூ ஹப்ஸ், பாறூக் என்ற பெயர்களைப் பெற்றிருந்தார். ஹி.13 முதல் 23 வரை சுமார் 10 வருட காலம் பதவியிலிருந்தார். இவரை அடுத்து வந்த உஸ்மான் (ரழி) அவர்கள், குறைஷிக் குலத்தின் உமையாக் கோத்திரத்தில் கி.பி. 575 இல் பிறந்தவர். துன்னூரைன், ஜாமிஉல் குர்ஆன் எனும் சிறப்புப் பெயர்கள் இவருக்குண்டு. ஹி. 23 முதல் 35 வரை இவர் கலீபாவாக இருந்தார். நீண்ட காலம் கலீபாவாக இருந்த பெருமை இவருக்குண்டு. நான்காவது கலீபாவாக அமர்த்தப்பட்ட அலி (ரழி) அவர்கள் கி.பி. 599 இல் குறைஷிக் குல ஹாஷிம் கோத்திரத்தில் பிறந்தவர். அபூதுராப், ஹைதர் என்ற சிறப்புப் பெயர்களும் இவருக்குண்டு. ஹி. 36 முதல் 40 வரை ஐந்தாண்டுகள் கலீபாவாகப் பணியாற்றினார்.

- அபூபக்ர் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதலாவது ஆண் மகனாவார். அலி (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதல் சிறுவராவார். முதலாவதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பதின்மருள் உஸ்மான் (ரழி) அவர்கள் அடங்குவார்கள். உமர் (ரழி) அவர்கள் மட்டுமே முதலில் இஸ்லாத்தின் எதிரியாக இருந்து, நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனை மூலம் நுபுவ்வத் 5ஆம் ஆண்டில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவராவார். பொதுவாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இவர்கள் அனைவரும் முஷ்ரிக்களான உறவினர்களாலும், ஏனையோர்களாலும் துன்புறுத்தப்பட்டார்கள். எனினும், அவற்றை சகித்துக் கொண்டு இஸ்லாத்தில் உறுதியாக நின்றார்கள். இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும், பாதுகாப்புக்காகவும், பெரும்பங்காற்றியுள்ளார்கள். தமது உயிர், பொருள், சக்தி, காலம், செல்வாக்கு முதலிய அனைத்தையும் அர்ப்பணித்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு எப்போதும் பக்கபலமாக நின்றார்கள். நபி (ஸல்) அவர்களையும் இஸ்லாத்தையும் தம்மை விடப் பெரிதாகக் கருதி செயற்பட்டார்கள். எளிமையான பக்திபூர்வமான முன்மாதிரியான வாழ்வை அவர்கள் நடத்தினார்கள். நம்பிக்கை, உண்மை, நீதி, நேர்மை, பொறுமை, வள்ளன்மை, தக்வா, அமானத் போன்ற நற்குணங்கள் அவர்களில் மலிந்திருந்தன. அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் நலனில் அதிக அக்கறை செலுத்தினார்கள். உம்மிச் சமுதாயத்தில் தோன்றிய இவர்கள், எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாகவும், சமூக அந்தஸ்துடையவர்களாகவும் காணப்பட்டார்கள். முதலிரு கலீபாக்களும் தமது பெண்மக்கள் இருவரை - ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி) - நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தும் அடுத்து இரு கலீபாக்களும் நபி (ஸல்) அவர்களின் பெண் மக்களை - றுகையா (ரழி), உம்மு குல்தூம் (ரழி), பாத்திமா (ரழி) - மணமுடித்தும் தமது உறவைப் பலப்படுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

- **சமய, சமூகப் பணிகள்**
  - நபி (ஸல்) அவர்கள், நீண்ட காலகட்டத்துக்கான வாழ்க்கை முறையொன்றை உலகுக்கு அறிமுகப்படுத்தினார்கள். ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலத்தில் அது நிறைவுபடுத்தப் பட்டது. ஆனால், வளர்ந்து வரும் சமுதாயத்துக்கும், நாகரிக முன்னேற்றத்துக்கும் பொருத்தமான முறையில் அதனை வளர்த்துச் செல்லும் பணி சமூகத்திடம் ஒப்படைக் கப்பட்டது. இதனை நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜதுல் விதாவில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். ஆதலால் இமாமத் (சமூகத்துக்குத் தலைமை தாங்கும்) பணியை ஏற்ற கலீபாக்கள் ரிஸாலத் பணியின் தொடர்ச்சியையும் கண்காணிக்க வேண்டி யேற்பட்டது.

  - நபி (ஸல்) அவர்கள் வபாத்தானபோது அவர்கள் மீது பற்றுக் கொண்டவர்கள் அவர்கள் மரணிக்கவில்லை என்று கருதியும் சொல்லியும் வந்தார்கள். எல்லோரும் போல அவர்களும் இறக்கக் கூடியவரே என அபூபக்ர் (ரழி) அவர்கள் உறுதிப் படுத்தினார்கள்.

- அல்லாஹ்வின் தூதரது ஆளுமையில் உறுதிகொண்ட நாட்டுப்புற அறபிகள் அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், சுயநலங் கொண்ட கோத்திரத் தலைவர்கள் தாமும் நபி எனப் பிரகடனப்படுத்தியபோது, அறிவீனத்தால் அவர்களைச் சார்ந்து முர்தத்தானார்கள். இந்த முதநப்பிகளுக்கும், முர்தத்துகளுக்கும் எதிராக அபூபக்ர் (ரழி) அவர்கள் போர் தொடுத்தார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் ஸகாத் கொடுக்க மாட்டோம் என சில கோரத்திரத்தவர்கள் குரல் கொடுத்தபோது ஸகாத்திலிருந்து விதிவிலக்குக் கோரியபோது அபூபக்ர் (ரழி) அவர்கள் அதனை நிராகரித்து கடுமையாக நடந்துகொண்டார்கள்.

- அல்குர்ஆனை மனனம் செய்திருந்த ஹாபிழ்கள், யமாமா போரில் அதிகமாக ஷஹீதானபோது அதனாலேற்படும் பாதக விளைவை உணர்ந்த உமர் (ரழி) அவர்கள், அபூபக்ர் (ரழி) அவர்களை அணுகி முறையிட்டார்கள். அவ்வேளை அல்குர்ஆனை நூலுருவில் தொகுக்கும் பணிக்கு உத்தரவிட்டார்கள். முஸ்ஹப் எனும் பிரதியை எழுதிப் பாதுகாத்தார்கள். உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் குறைஷிகளின் மொழிவழக்கில் அல்குர்ஆன் பிரதிகள் எழுதப்பட்டபோது அபூபக்ர் (ரழி) அவர்கள் காலப் பிரதியே பயன்படுத்தப்பட்டது.

- சமூகத் தலைவர் என்ற வகையில் சமூகப் பிரச்சினைகள் கொண்டு வரப்பட்டபோது அப்பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவது, அவற்றுக்கான தீர்வை எவ்வாறு வழங்குவது என்பதற்கு அபூபக்ர் (ரழி) அவர்கள் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். ஸஹாபாக்கள் ஒன்றுகூடி அல்குர்ஆன் ஸுன்னாவின் அடிப்படையில் தீர்வு வழங்கினார்கள். பின்னர் உமர் (ரழி) அவர்கள் இப்பணிக்கென குறிப்பிட்ட ஸஹாபாக்களை நியமித்தார்கள். இதன் வளர்ச்சிக் கட்டமாகவே இஜ்திஹாத் காணும் முறை பரிணாமம் பெற்றது.

- பத்ருக் கைதிகள் மூலம் நபி (ஸல்) அவர்கள் சிறுவர்களுக்கு எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுத்த நடைமுறை, உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் சிறுவர் பாடசாலையாக மலர்ந்து, அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அறபிகள் மட்டுமன்றி அஜமிகளும் (கைதிகள் உட்பட) கற்கக் கூடிய நிலைக்கு வளர்ச்சியடைந்தது.

- நீதித் துறையை கண்டிப்பாக வழிநடத்திய உமர் (ரழி) அவர்கள், மக்கள் சட்டத்துறை சார்ந்த அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தினார்கள். சந்தை விபரங்களை கற்றுக் கொண்ட பின்பே வியாபாரிகள் சந்தைக்குப் போக வெண்டுமெனப் பணித்தார்கள். முஹ்தஸிப் எனப்பட்ட கண்காணிப்பாளர்களையும் அமர்த்தினார்கள். குற்றம் நிகழாத சூழலை உருவாக்கிய பின்னர், குற்றங்களுக்காக (விசாரித்து) தண்டனை வழங்குவதை அமுல்நடத்தினார்கள்.

- உஸ்மான் (ரழி), அலி (ரழி) ஆகியோர் முன்னைய கலீபாக்களின் வழியில் தமது காலத்தில் தோன்றிய பிரச்சினைகளை நிதானமாகவும், நுணுக்கமாகவும் அணுகி இஸ்லாத்தின் யதார்த்தத்தைப் பாதுகாத்தார்கள். சமூக தேவைகளை நிவர்த்தித்தார்கள்.

- கலீபாக்களின் சமூகப் பணிகளில் மிக முக்கியமானது சமூகத்தை ஒன்றுபடுத்தியமையாகும். நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் ஸகீபா பனீஸாஇதாவில் கூடிய முஹாஜிரீன்களுக்கும் அன்ஸாரீன்களுக்கும் இடையில் ஏற்பட்ட தலைமைத் துவத்துக்கான வாதாட்டம் சமூகத்தைப் பிளவுபடுத்தக் கூடிய நிலைக்குச் சென்றபோது அபூபக்ர் (ரழி) அவர்கள் இரு பகுதியாரையும் சாந்தப்படுத்தி சுமூக நிலைக்குக் கொண்டு வந்தார்கள்.

- அல்குர்ஆன் குறைஷியரின் வழக்கு மொழியில் அருளப்பட்டாலும், அவரவர்களின் வழக்கு மொழிகளில் ஓதுவதற்கும், எழுதுவதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள். பின்னர் இவ்வாறு வெவ்வேறு வழக்கு மொழிகளில் ஓதியோர் மாகாணங்களுக்குச் சென்று அல்குர்ஆனைக் கற்றுக் கொடுத்ததால் வெவ்வேறு பிரதேசத்தவர்கள் வெவ்வேறு முறைகளில் ஓதினார்கள். இதனை ஹுதைபா (ரழி) அவர்கள் நேரில் அவதானித்து பின்விளைவைக் கருதி கலீபாவிடம் முறையிட்டார்கள். எனவேதான் கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் குறைஷியரின் வழக்கு மொழியில் ஓதவும் எழுதவும் ஏற்பாடு செய்தார்கள். இதுவும் சமூகம் பிளவுபடாமல் பாதுகாத்த ஒரு நிகழ்ச்சியாகும்.

- உமர் (ரழி) காலத்தில் இஸ்லாம் விரிவடைந்தபோது அஜமிகளின் தொகை பெருகியது. அறபிகளுக்கும் அஜமிகளுக்கும் இடையில் முரண்பாடு தோன்றாமலிருப்பதில் உமர் (ரழி) அவர்கள் மிகக் கவனமாக செயல்பட்டார்கள். திம்மிகள் விடயத்தில் அவர்கள் காட்டிய ஆர்வம் இதனை எடுத்துக் காட்டுகின்றது.

- நான்கு கலீபாக்களும் சமூக நலனில் குறிப்பாக சமூகத்தில் நலிவுற்றோர் நலனில் அதிக கவனம் செலுத்தினார்கள். உங்களில் பலவான் என்னிடத்தில் பலவீனன் ஆவான் என்று அபூபக்ர் (ரழி) அவர்கள் கிலாபத் பிரசங்கத்தில் இதனையே சுட்டிக் காட்டியுள்ளார்கள் எனலாம். ஏழைகள், அநாதைகள், விதவைகள், நோயாளர், வயோதிபர் முதலிய நலிவுற்றோரை பைத்துல் மாலின் பங்காளர்களாகக் கருதினார்கள். தனிப்பட்ட முறையிலும், கலீபா என்ற வகையிலும் அவர்கள் எல்லோரும் பரிவோடு நடந்து கொண்டார்கள்.

- உமர் (ரழி) அவர்கள் பைத்துல் மாலில் நலிவுற்றோரின் பங்கை சரியாக வழங்கியதோடு அவர்களின் தேவைகளைக் கண்டறிய பல்வேறு உத்திகளைக் கையாண்டார்கள். தஜ்லா நதிக்கரையில் ஆட்டுக் குட்டியொன்று துன்பத்துக்குள்ளானாலும் அதற்கு நான் பதில் கூற வேண்டுமென்ற உச்சநிலையிலான கவனம் அவர்களிடமிருந்தது.

- உஸ்மான் (ரழி) அவர்கள் பெருஞ் செல்வந்தராக இருந்தமையால் கலீபாவாவதற்கு முன்பே சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். மதீனாவில் 'பி.ஃரு ரூமா' எனப்படும் பொதுக் கிணறை வாங்கி வக்பு செய்த நிகழ்வு இதனை எடுத்துக் காட்டுகிறது. கலீபாவாக இருந்த காலத்தில் இரு ஹரம்களையும் விரிவுபடுத்தினார்கள். அதற்காக நிலங்களை வாங்கினார்கள். மஸ்ஜித்களைப் புனரமைத்தார்கள்.

- உமர் (ரழி) காலத்தில் வீதிகள் அமைக்கப்பட்டமை, பாலங்கள் கட்டப்பட்டமை, நிழல் மரங்கள் நட்டப்பட்டமை, இடைத்தங்கல் நிலையங்கள் அமைக்கப்பட்டமை, கிணறுகள் தோண்டப்பட்டமை, கால்வாய்கள் வெட்டப்பட்டமை போன்றனவும் சமூகநலன் சார்ந்தனவாகும்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** கலீபாக்களாக வருபவர்கள் எவ்வாறான தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைச் சுருக்கமாக எடுத்துக் கூறுங்கள்.

**படி II** நான்கு கலீபாக்களதும் ஆளுமைப் பண்புகளை குழுநிலையில் (நான்கு குழு) கலந்துரையாட வாய்ப்பளியுங்கள்.

**படி III** குழுக்களின் உறுப்பினர்களை மாற்றியமைத்து அவர்களின் ஆளுமைப் பண்புகள், அவர்களின் ஆட்சியில் பாதிப்பை ஏற்படுத்தினவா என்பது பற்றி கலந்துரையாடச் செய்யுங்கள்.

**படி IV** இண்டாவது முறையாகக் கலந்துரையாடப்பட்ட கருத்துக்களை வகுப்பறையில் முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.

**படி V** குறைநிரப்புச் செய்து கருத்துக்களை தொகுத்தெழுத வழிப்படுத்துங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை


- முஹம்மத் தம்பி: அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி), அலி (ரழி),
- அபூபக்ர் ஏ.எம்., (1998), *இஸ்லாமிய வரலாறு பாகம் 1*, சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்
- இப்றாஹீம் செய்யித், *நாற்பெரும் கலீபாக்கள்* (1963) சென்னை, வளர்மதிப் பதிப்பகம்.
- அமீன் எம்.ஐ.எம்., *அபூபக்கர் (ரழி)* (2004), ஹெம்மாதக, அல்ஹஸனாத் பதிப்பகம்

**தேர்ச்சி 8.0 : நபி (ஸல்) அவர்களது வருகையின் நோக்கத்தையும் அவர்களது பல்துறை சார்ந்த நடவடிக்கைகளையும் விளங்கி அவர்களைத் தொடர்ந்து வந்த குலபாஉர் ராஷிதூன்களின் காலத்தில் நிலவிய சமூக, அரசியல், செயற்பாடுகள் பற்றியும் அறிந்து அவற்றை முன்மாதிரியாகக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.4:** கிலாபத்தின் விரிவையும் பரிபாலன முறையையும் கால கட்டங்களாக வகுத்து மதிப்பீடு செய்வார்.

**காலம்** : 20 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- கிலாபத் உருவான முறையினை கலந்துரையாடி வெளிப் படுத்துதல்.
- கிலாபத் விரிவுக்கான காரணங்களை இனங்கண்டு கூறுதல்.
- குலபாஉர் ராஷிதின்கால மன்னர் ஆட்சி முறையின் சிறப்பை ஒப்பிட்டு எழுதுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **ஆட்சி விஸ்தரிப்பு**
  - நபி (ஸல்) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பின்னர், அறபு நாட்டைச் சூழவிருந்த சிற்றரசர்களுக்கும் பேரரசர்களுக்கும் அனுப்பிய அழைப்புக் கடிதங்கள் ஒரு வகையில் ஆட்சி விஸ்தரிப்புக்குக் காரணமாக அமைந்தன. பைசாந்திய மன்னனிடம் சென்ற தூதுவர் கஸ்ஸானிய சிற்றரசரால் கொலை செய்யப்பட்டபோது எதிர்நடவடிக்கை யாக ஹி.8 இல் மு.ஃ.தாப் போர் இடம்பெற்றது. ஹி.9 இல் தபூக் நோக்கிச் சென்றார்கள். ஹி.11 இல் உஸாமா (ரழி) தலைமையில் படையணி ஒன்றைத் தயாரித்தார்கள். அது புறப்படுமுன்பே நபி (ஸல்) அவர்கள் வபாத்தானார்கள்.

  - அபூபக்ர் (ரழி) அவர்கள் உஸாமா (ரழி) தலைமையிலான படையை அனுப்பி வைத்தார்கள். அது மீண்ட பின்னர், பைசாந்தியர், முர்தத்களுக்கு உதவுவதன் மூலம் கிலாபத்தில் தலையிட ஆரம்பித்தார்கள். அவ்வேளை கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் யஸீத் பின் அபூசுப்யான், சுரஹ்பீல் பின் ஹஸனா, அம்ர் இப்னுல் ஆஸ், அபூ உபைதா ஆகிய ஸஹாபாக்களின் தலைமையில் நான்கு படையணிகளை பைசாந்திய கட்டுப்பாட்டிலிருந்த ஷாம் பிரதேசத்துக்கு அனுப்பி வைத்தார்கள். பைசாந்திய மன்னன் அவர்களை எதிர்க்க நான்கு லட்சம் வீரர்களைக் கொண்ட படையை அனுப்பியபோது, நான்கு தளபதிகளும் இணைந்து போராடத் தீர்மானித்து கலீபாவுக்கும் அறிவித்தார்கள். கலீபா அனுமதி வழங்கியதோடு பாரசீகப் பிரதேசத்தில் போராடிக்கொண்டிருந்த காலித் (ரழி) அவர்களை ஷாமுக்குச் செல்லுமாறு பணித்தார்கள். அவர் நான்கு தளபதிகளையும் சந்தித்ததோடு கள நிலவரங்களையும் ஆராய்ந்தார். பின்னர் யர்மூக் எனுமிடத்தில் காலித் (ரழி) தலைமையில் போர் நிகழ்ந்தது. முஸ்லிம் படை வெற்றி பெற்றபோது எதிர்ப் படை பிஹில் எனுமிடத்தில் போரிட்டது. இதனைத் தொடர்ந்து ஹி.14 இல் டமஸ்கஸ் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. தொடர்ந்து அஜ்னாதைன், மர்ஜ்ராஹித், ஹிம்மஸ், கின்ஸரீன், கைஸாரியா முதலியன முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

- ஷாம், முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தபோது முஸ்லிம்களை எகிப்திலிருந்தும் தாக்கினர். ஹி. 19 இல் அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) எகிப்தை பைசாந்தியரிடமிருந்து மீட்டார். சுதேச மன்னன் முகௌகஸ் சமாதானம் செய்து கொண்டான். எகிப்தை இழந்த பைசாந்தியர் அலக்சாந்திரியாவிலிருந்து முஸ்லிம்களைத் தாக்கினர். கடற் படையின்மையால் முஸ்லிம்கள் சமரசம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் கடற்படை அமைக்கப்பட்டதால் அலக்சாந்திரியா முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. ஹி.28 இல் மத்திய தரைக்கடல் தீவான சைப்பிரஸ் கிலாபத்தின் கட்டுப்பாட்டில் வந்தது.

- பாரசீகத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தைக் கிழித்தெறிந்த மன்னன் நபி (ஸல்) அவர்களைக் கைது செய்யுமாறு யமன் அதிகாரிக்குக் கட்டளையிட்டான். நபி (ஸல்) அவர்களைக் கைதுசெய்ய அங்கிருந்து இருவர் வந்தனர். மன்னன் கொலை செய்யப்பட்டுள்ள செய்தியை உங்கள் அதிகாரியிடம் கூறுங்கள் என நபி (ஸல்) அவர்கள் இருவரிடமும் கூறியபோது, அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேறினார்கள். பாரசீக அரச பீடத்தில் நிலவிய கருத்து முரண்பாடு காரணமாக மன்னன் அவனது மகனால் கொலை செய்யப்பட்டான். இதனால் அரச குடும்பத்தில் அமைதி குன்றியது. நபி (ஸல்) அவர்களின் கடிதம் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அபூபக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாக வந்தபோது அரச குடும்பத்தில் சுமுகநிலை தோன்றியதால் முஸ்லிம்கள் மீது பழிவாங்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நின்றனர்.

- அபூபக்ர் (ரழி) அவர்களின் காலத்தில் முர்தத்துகளின் கிளர்ச்சியை பாரசீகர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஸஜாஹ் என்ற பெண் முதநப்பி மதீனாவைத் தாக்க ஆயத்தம் செய்தபோது, தக்லப் கோத்திர கிறிஸ்தவர்கள் உதவி செய்தனர்; பாரசீக படையுதவியைப் பெற்றுக் கொடுத்தனர்.

- கிலாபத் எல்லையிலிருந்த பஹ்ரைனில் கைஸ், பக்ர் எனும் இரு கோத்திரங்கள் வாழ்ந்தனர். அவர்கள் முதலில் எதிரிகளாக இருந்து, இஸ்லாத்தை ஏற்ற பின்னர் நண்பர்களாயினர். ரித்தத் போர் நிகழ்ந்த காலத்தில் பக்ர்கள் முர்தத்துகளாக மாறி கைஸ்களை தாக்கினர். இவ்வேளை பக்ர்களுக்குப் பின்னணியில் பாரசீகர் நின்றனர். தாக்குப் பிடிக்க முடியாத கைஸ்கள் கலீபாவுக்கு அறிவித்தபோது, கலீபா காலித் (ரழி) தலைமையில் பஹ்ரைனுக்கு படையுதவியளித்தார்கள். பக்ர்-கைஸ் போராட்டம் கிலாபத்துக்கும், பாரசீகத்துக்கும் இடையிலான போராட்டமாக திசை திரும்பியது. முஸ்லிம்கள் (ஹி.12) ஹிரா நகரைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தபோது கலீபாவின் உத்தரவுக்கிணங்க காலித் (ரழி) ஷாமுக்குச் செல்ல, முஸன்னா (ரழி) தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவர் படையுதவி கோரியபோதும் கலீபாவின் பதில் கிடைக்காமையால் படையை எல்லையில் நிறுத்தி விட்டு மதீனாவுக்கு வந்தார். அப்போது கலீபா மரணமடைந்திருப்பதும் உமர் (ரழி) கலீபாவாக நியமிக்கப்பட்டிருப்பதும் அவருக்குத் தெரிந்தது. பின்னர் உமர் (ரழி) அவர்கள் அபூ உபைத் என்பாரின் தலைமையில் ஒரு துணைப் படையை அனுப்பினார். அவர்கள் யூப்பிரடீஸ் நதியைத் தாண்டிச் சென்று போரிட்டனர். பாரசீக யானைகளைக் கண்டு அறாபிய குதிரைகளும் ஒட்டகைகளும் மிரண்டன. அடுத்த போரில் தந்திரமாகப் பாரசீக யானைகளைப் பயமுறுத்தினர். பாரசீகர் தோற்கடிக்கப்பட யூப்பிரடீஸ் நதிப் பிரதேசங்கள் (ஹி.14) முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

- இதைத் தொடர்ந்து முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக பாரசீகர் எல்லா நகர்களிலும் படைகளைக் குவித்தனர். இது கலீபாவுக்கு அறிவிக்கப்பட்டபோது கலீபாவே தலைமை தாங்கி வர விரும்பினார். எனினும், ஸஹாபாக்களின் வேண்டுகோளை ஏற்று ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரழி) அவர்களை தளபதியாக அனுப்பி போரை நடத்தினார். 30,000 பேரைக் கொண்ட படை ஒரு லட்சம் வீரர்களைக் கொண்ட படையோடு காதிஸிய்யா என்ற இடத்தில் மோதியது. தொடர்ந்து மூன்று நாட்கள் போர் நிகழ்ந்தது. முஸ்லிம்களுக்கு வெற்றி கிட்டியது.

- தோல்வியடைந்த பாரசீகர் படிப்படியாக மதாஇன் (ஹிஜ்ரி 16), ஜெலூலா, ஜெஸீரா, அஹ்வாஸ், நிஹாவந்த் (ஹிஜ்ரி 21) நகர்களுக்குப் பெயர்ந்து சென்று குழப்பங்களைத் தூண்டினர். அங்கெல்லாம் சென்ற முஸ்லிம்கள் குழப்பங்களை அடக்கி வெற்றி கொண்டனர். நிஹாவந்த் போர், பத்ஹுல் புதூஹ் (வெற்றிகளின் வெற்றி) என பாராட்டப்படுகின்றது. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் இஸ்பஹான், அஸர்பைஜான் (ஹிஜ்ரி 22), ஜுர்ஜான், தபரிஸ்தான், ஆர்மீனியா, கிர்மான், ஸிஜிஸ்தான் முதலிய மத்தியாசிய பிரதேசங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

- முஸ்லிம்கள், நாடு பிடிக்கும் ஆசையுடனோ, செல்வங்களைச் சுரண்டும் நோக்கத்துடனோ, மக்களை அடிமைப்படுத்தும் ஆர்வத்துடனோ போராடவில்லை. போருக்காக வலிந்து அழைக்கப்பட்ட நிலையில் -போராடுவது தவிர்க்க முடியாத நிலையில்- போரிட்டார்கள். பாரசீகரும், பைசாந்தியரும் கிலாபத்தை எதிர்த்ததற்கு பல காரணங்கள் இருந்தன.

- **முஸ்லிம்களின் வெற்றிக்கான காரணங்கள்**
  - தலைமைத்துவ கட்டுப்பாடும், ஒழுக்கமும்
  - பைச்சாந்திய, பாரசீக ஆட்சியில் காணப்பட்ட குறைபாடுகள்
  - முஸ்லிம்களிடம் காணப்பட்ட நலன்களும், பண்புகளும்

- **உள்நாட்டுப் பிரச்சினைகளும் விளைவும்**
  - நபி (ஸல்) அவர்கள் உயிர்வாழும்போதே முதநப்பிகள் தோன்றினார்கள். நான் நபித்துவத்தில் உங்களுடன் பங்காளியாக இருக்கிறேன். உலகில் ஒரு பாதி உங்களுக்கும் மறுபாதி எனக்கும் உரியதென முஸைலமா, நபி (ஸல்) அவர்களுக்குக் கடிதம் அனுப்பினான். அவர்களின் கருத்து பிழையானது என்பதை நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்கள் மூலம் அறிவித்தார்கள். அப்போது அமைதியடைந்த அவர்கள், நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் மீண்டும் தலையெடுத்தார்கள்.

  - நபி (ஸல்) அவர்கள் வபாத்தானதும் உள்நாட்டு பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன. இப்பிரச்சினைகளுக்கு இஸ்லாம் பற்றிய அறிவின்மை, எதிரிகளின் சூழ்ச்சி ஆகிய இரண்டும் காரணங்களாக அமைந்தன எனலாம். இதனால்தான் மதீனாவுக்கு வெளியே பிரச்சினைகள் தோன்றியும், வளர்ந்தும் வந்திருக்கின்றன. நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து வாழ்ந்த ஸஹாபாக்கள் மதீனாவில் இருந்தமையும் அவர்கள் இஸ்லாத்தை தெளிவாக அறிந்திருந்தமையும் குழப்பங்கள் தோன்றாமைக்குக் காரணமாகும்.

  - கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களின் காலத்தில் ஹிஜாஸுக்கு வெளியேதான் முதநப்பிகள் தோன்றினார்கள். அவர்களை ஆதரித்த முர்தத்துகளும் நாட்டுப் புறத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். அதிகாரம் பெறுவதற்கும், செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்கும் நபித்துவத்தை வாய்ப்பான ஒரு சாதனமாக அவர்கள் கருதினர். நபி (ஸல்) அவர்களுக்கு அத்தனை செல்வாக்கும் கிடைப்பதற்கு அவர் தன்னை நபி எனப் பிரகடனப்படுத்தியமையே காரணம் என அவர்கள் எண்ணினர். இதற்காக

இஸ்லாத்தை அரைகுறையாக விளங்கிக் கொண்ட தமது கோத்திரத்தவர்களையும், தம்மோடு உடன்படிக்கை செய்து கொண்ட கோத்திரத்தவர்களையும் பிணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு இஸ்லாமிய அறிவும், பயிற்சியும் குறைவாக இருந்தமையே இதற்கு காரணாகும்.

- கலீபா அபூபக்கர் (ரழி) கால முதநப்பிகள்
  பனூ ஹனீப் கோத்திரத்தைச் சேர்ந்த முஸைலமா பின் ஹபீப் (யமாமா)
  பனூ தக்லிப் கோத்திரத்தைச் சேர்ந்த ஸஜாஹ் பிந்தி ஹாரிதா (யமாமா)
  பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த துலைஹா பின் குவைலித் (நஜ்த்)
  பனூ அன்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த அஸ்வத் (யமன்)
  பனூ தமீம் கோத்திரத்தைச் சேர்ந்த மாலிக் பின் துவைரா போன்றோர் அவர்களுள் முக்கியமானவர்களாவர்.

- இவர்களுக்கெதிராக கலீபா பதினொரு தளபதிகளின் கீழ் படையனுப்பினார்கள்.
  1. காலித் இப்னு வலீத் (ரழி) - துலைஹா, மாலிக் பின் நுவைராக்கெதிராக
  2. இக்ரிமா பின் அபூ ஹஜ்ல் - முஸைலமாவுக்கெதிராக
  3. ஷுரஹ்பீல் பின் ஹஸ்னா - இக்ரிமாவுக்கு துணையாக (ஹளரமவ்த்)
  4. காலித் பின் ஸஈத் - சிரியா, மஷாரி
  5. அம்ர் இப்னுல் ஆஸ் - குழாஆக் கோத்திரத்துக்கெதிராக
  6. ஹுதைபா பின் முஹ்ஸின் - அஹ்லுல் வபா (உம்மான்)
  7. அர்பஜா பின் ஹர்தமா - அஹ்லுல் மிஹ்ரா
  8. தர்கா பின் ஹாஜிப் - ஸுலைம், ஹவாஸின்
  9. ஸுவைத் பின் முகர்ரின் - யமன், திஹாமா
  10. ஆலா பின் ஹழ்ரமி - பஹ்ரைன் (ஹுதைம் கோத்திரம்)
  11. முஹாஜிர் பின் அபீ உமையா- அப்னா, அன்ஸ் கோத்திரத்துக்கெதிராக.

  (பிரதான முதநப்பிகளுள் முஸைலமா, அஸ்வத் இருவரும் கொலை செய்யப்பட்டனர். துலைஹா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஸஜாஹ் பஸராவில் மரணித்தார்.)

- அபூபக்ர் (ரழி) கால நிலையை, 'குளிர் காலத்தில் மழை பொழிந்து கொண்டிருக்கும் ஓரிரவில் இடையனின்றி வெளியே திரியும் ஆட்டு மந்தை போல மதமாற்றத்தின் போது முஸ்லிம்களின் நிலையிருந்தது' என இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் உவமித்துக் காட்டியுள்ளார்கள்.

- அபூபக்ர் (ரழி) அவர்களின் கால உள்நாட்டுப் பிரச்சினைகளில் ஸகாத்திலிருந்து விதிவிலக்குக் கோரலும் ஒன்றாகும். நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஸகாத்தை ஒழுங்காக் கொடுத்து வந்த கத்பான், சுலைம் போன்ற கோத்திரங்கள் ஸகாத்திலிருந்து விதிவிலக்குக் கோரினர். கஷ்டப்பட்டு உழைத்ததை மற்றவர்களுக்குக் அவர்கள் கொடுக்க விரும்பவில்லை. ஆனால், கலீபாவோ நபி (ஸல்) அவர்களின் காலத்தில் கொடுக்கப்பட்ட ஓர் ஆட்டுக் குட்டியையேனும் தருவதற்கு மறுத்தால் அதற்கெதிராகப் போராடுவேன் என எச்சரித்தார்கள். இதனால் மனம் மாறிய அவர்கள் தமது ஸகாத்தை ஒப்படைத்தார்கள்.

- கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமையால் உள்நாட்டுக் குழப்பங்கள் பரவுவதற்கான சூழ்நிலைகள் தோன்றின. உமர் (ரழி) அவர்களின் காலத்தில் பைசாந்திய, பாரசீக பேரரசின் பெரும் பகுதிகள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தமையால் பகைமையும், பொறாமையும் கொண்டோர் கிலாபத்தை அழிப்பதற்குத் திட்டமிட்டனர். அதன் முதல் நடவடிக்கையாகவே உமர் (ரழி) அவர்களின் கொலை அமைந்தது.

- அடுத்த கட்டமாக முஸ்லிம்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. யமனிலிருந்து வந்த அப்துல்லாஹ் இப்னு ஸபா என்ற யூதன், உஸ்மான் (ரழி) அவர்களுக்கெதிராகவும் அலி (ரழி) அவர்களுக்கு ஆதரவாகவும் மறைமுகமாக பிரசாரம் செய்ய ஆரம்பித்தான். அலி (ரழி) அவர்களுக்குரிய ஆட்சிப் பொறுப்பை உஸ்மான் (ரழி) அவர்கள் அபகரித்துள்ளார்கள் என குற்றம் சுமத்தினான். பின்னர் கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைத் தனது ஆதரவாளர்கள் வாயிலாக முன்வைத்தான். ஹிஜாஸுக்கு வெளியே கூபா, பஸரா, புஸ்தாத் நகர்களில் வாழ்ந்த மக்கள் அவனது பிரசாரத்தில் மயங்கினர்.

- உமர் (ரழி) அவர்கள் கடைப்பிடித்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை, இஸ்லாத்தில் விளக்கம் பெறாத மவாலிகளின் தொகை பெருகியமை, சமூகத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வு காணப்பட்டமை, கலீபாவின் இளகிய உள்ளம் காரணமாக எதிரிகளை அணுகிய முறை, சில அதிகாரிகளின் தவறான போக்குகள் போன்றன குழப்பங்களுக்கு வாய்ப்பாக அமைந்தன. இப்னு ஸபா சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டான். குழப்பத்தின் உச்ச கட்டமாக, கிளர்ச்சிக் குழுவினரால் கலீபா கொலை செய்யப்பட்டார். கிலாபத்தின் தலைநகரான மதீனா கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் வந்தது.

- இந்நிலையில் ஸஹாபாக்கள் அலி (ரழி) அவர்களை கலீபாவாகத் தேர்ந்தெடுத்தாலும் உஸ்மான் (ரழி) அவர்களின் கொலை கலீபாவுக்குத் தலையிடியாக அமைந்தது. அது குழப்பத்தின் அடுத்த கட்டத்துக்கு கிலாபத்தைக் கொண்டு சென்றது. கிளர்ச்சிக் காரர்களை மதீனாவிலிருந்து வெளியேற்றல், கொலையாளிகளைக் கண்டுபிடித்தல் என்ற இரண்டு பிரச்சினைகளும் சிக்கல்களை உருவாக்கின. கிளர்ச்சிக்காரரை வெளி யேற்றும் வகையில் கவர்னர்களைப் புதிதாக நியமனம் செய்தார். தானும் மதீனாவிலிருந்து கூபாவுக்குச் சென்றார். எனினும், கலீபாவின் அதிகாரத்தில் மூன்றாந் தரப்பினர் தலையிட்டதால் -கொலைக்குப் பழிவாங்க முன்வந்ததால் பிரச்சினை முற்ற ஆரம்பித்தது. கொலையோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் அவர்கள் நூற்றுக்கணக்கா னோரைக் கொலை செய்தனர். அன்னை ஆயிஷா (ரழி) அவர்களைத் தலைவராக்கி கலீபாவுக்கெதிராக போராட ஆரம்பித்தனர். இந்தப் போரை (ஜமல் போர்) கலீபா தந்திர மாக தணித்துவிட்டார். எனினும், ஆயிரக்கணக்னோர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டது.

- உஸ்மான் (ரழி) அவர்களின் கோத்திரத்தவர்களான உமையாக்கள், டமஸ்கஸில் ஒன்றுகூடி கலீபாவுக்கெதிராக கிளர்ச்சி செய்தனர். கலீபா அவர்களை அடக்குவதற்காக ஷாமுக்குப் புறப்பட்டார். ஹி.37 இல் முஆவியா (ரழி) தலைமையிலான படையை ஸிப்பீனில் சந்தித்தார். சுமார் அரையாண்டு காலப் பேச்சுவார்த்தை இப்னு ஸபா குழுவின் செயலால் தோல்வியுற்றது. இரு பகுதியாருக்குமிடையில் போர் நிகழும்போது தோல்வியைத் தழுவ நேர்ந்த முஆவியா (ரழி) அவர்கள், குர்ஆன் பிரதிகளை உயர்த்திக் காட்டிய தந்திரமான செயல்பாட்டின் மூலம் போரை நிறுத்தினார். தீர்ப்புக் கூறுவதற்காக ஒரு சமரச சபை ஏற்படுத்தப்பட்டபோதும் அது உரிய பரிகாரத்தை வழங்கவில்லை. போர் நிறுத்தம் செய்ததையும் சமரச சபை ஏற்படுத்தப்பட்டதையும் ஆட்சேபித்த ஒரு பிரிவினர் அலி (ரழி) அவர்களின் படையணியிலிருந்து விலகிச் சென்றனர். இவர்களே கவாரிஜ் என அழைக்கப்படுகின்றனர். தம்மைத் தவிர ஏனைய அனைவரும் வழி தவறியவர்கள் என்று தீர்மானித்த அவர்கள், அத்தன்மையரைக் கொலை செய்வது கடமை எனக் கூறி தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- அமைதியை நிலைநாட்டக் கடமைப்பட்ட கலீபா, நஹ்ர்வான் (ஹி.38) என்ற இடத்தில் அவர்களுடன் போரிட்டார். பாரிய உயிரிழப்பை பெற்ற கவாரிஜ்கள் சிதறிச் சென்றதொடு கலீபா அலி (ரழி), முஆவியா (ரழி), அம்ர் இப்னு ஆஸ் (ரழி) ஆகிய மூவரையும்

ஒரே நேரத்தில் கொலை செய்யத் தீர்மானித்தனர். தீர்மானித்தவாறே இப்னு முல்ஜம் என்ற காரிஜ் கலீபாவைக் கொலை செய்தான். ஏனையோர் தப்பினர். ஹி.40 இல் நிகழ்ந்த இக்கொலையின் பின்னர் ஷாமியர் முஆவியா (ரழி) தலைமையிலும், ஈராக்கியர் ஹஸன் (ரழி) தலைமையிலும் தனித்தனியாக இயங்க ஆரம்பித்தனர். பின்னர் ஹஸன் (ரழி) அவர்கள் விட்டுக் கொடுத்ததன் காரணமாக கிலாபதுர் ராஷிதா முற்றுப் பெறுகின்றது.

- **பரிபாலன முறை**
  - நபி (ஸல்) அவர்கள் மதீனா நகர ஆட்சியில் ஒரு பரிபாலன முறையை அறிமுகப் படுத்தியிருந்தார்கள். அறபு நாட்டுக்குள் மாத்திரம் ஆட்சி இருந்தபோது அது போதுமானதாக இருந்தது. எனவேதான் அபூபக்ர் (ரழி) அவர்கள் அதே பரிபாலன முறையை தொடர்ந்து பின்பற்றினார்கள்.

  - கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் கிலாபத் விரிவடைந்ததால் புதியதொரு பரிபாலன முறையை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையிருந்தது. எனவே நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய பரிபாலன முறையைத் தழுவி விரிவான அடிப்படையில் ஒரு பரிபாலன முறையை ஏற்படுத்தினார்கள்.

  - கலீபா மதீனாவிலிருந்தார். அது தலைநகரமாக அமைந்தது. ஏனைய பிரதேசங்கள் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. ஹிஜாஸ், யமன், தாயிப், ஷாம், கூபா, பஸரா. எகிப்து, ஹிம்மஸ் என மகாணங்கள் அமைந்தன. தேவைக்கேற்ப மாகாணங்கள் கூடியும், குறைந்தும் காணப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்துக்கும் நிருவாக அதிகாரியாக ‘வலி’ நியமிக்கப்பட்டார். நிதி நிருவாகம் ஆமில் என்பவரின் கையிலும் இராணுவ விவகாரம் அமீர் பொறுப்பிலும் நீதி காழியின் கட்டுப்பாட்டிலும் அமைந்தன.

  - கலீபாவுக்கு ஆலோசனை கூறுவதற்காக மஜ்லிஸுஷ் ஷூறா என்ற ஆலோசனை சபை உருவாக்கப்பட்டது. தக்வாவும், சட்ட அறிவும், உடல் உளத் தகைமைமுயுடை யோர் அதில் அங்கம் வகித்தனர். நிரந்தர உறுப்பினர் சமயா சமய உறுப்பினர் என இரண்டு வகையான உறுப்பினர்கள் அதில் அங்கம் வகித்தனர். உஸ்மான் (ரழி), அலி (ரழி) அப்துர் ரஹ்மான் (ரழி), அப்பாஸ் (ரழி), உபை இப்னு கஅப் (ரழி), முஆத் இப்னு ஜபல் (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி) போன்ற தகுதிவாய்ந்த ஸஹாபாக்கள் அதில் நிரந்தர உறுப்பினர்களாக இருந்தனர். சமயா சமய உறுப்பினர்கள் கலந்தாலோசிக்கும் விடயத்தில் தேர்ச்சியும் அனுபவமுடையோரிலிருந்து தெரிவு செய்யப்படுவர். இச்சபையின் சிபாரிசுக்கிணங்கவே மாகாண, மத்திய அரசின் அதிகாரிகள் நியமிக்கப்படுவர். அவர்களது உடமைகளையும் உரிமைகளையும் வாழ்க்கைப் படியையும் ஏனைய வசதிகளையும் இச்சபையே தீர்மானிக்கும். அதிகாரிகள் பதவியேற்கும்போது தமது சொத்து விவரங்களை இச்சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். நிருவாகிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் இச்சபையே மேற்கொள்ளும்.

  - ஆரம்பத்தில் தொண்டர் படைகளே போர்களில் கலந்துகொண்டன. பைசாந்திய, பாரசீக களங்களில் போரிடுவதற்குப் பயிற்சி பெற்ற இராணுவ வீரர்கள் தேவைப்பட்டனர். எனவே அவர்களை தீவானுல் ஜுந்த் என்ற இராணுவத் திணைக்களத்துக்கூடாக பதிவு செய்து பயிற்சியளித்தும் பக்குவப்படுத்தியும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

  - இதனைத் தொடர்ந்து நிருவாகத் தேவைக்காக தீவானுல் பரீத் என்ற அஞ்சல் திணைக்களம் உருவாக்கப்பட்டது. தீவானுஷ் ஷுர்த்தா (பொலிஸ் திணைக்களம்) தீவானுல் அஹ்தாப் (ஒழுக்காற்றுத் திணைக்களம்) என்பனவும் ஏற்படுத்தப்பட்டன.

சில தேவைகளை நிவர்த்திப்பதற்காக தனிநபர்களும் அமர்த்தப்பட்டிருந்தனர். உதாரணமாக நில அளவையாளராக உஸ்மான் பின் ஹுனைப் (ரழி) குறை கேள் அதிகாரி (ஒம்பூட்ஸமன்) ஆக முஹம்மத் பின் மஸ்லமா (ரழி) ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிடலாம். நிருவாகத்தை இலகுபடுத்துவதற்காகவே ஹிஜ்ரி ஆண்டுக் கணிப்பும் நாணய வெளியீடும் இடம்பெற்றன.

- கிலாபத்தின் நிதிநிலை மந்தமாக இருந்தமையால் ஆரம்ப கட்டத்தில் பைத்துல் மால் ஸ்தாபன ரீதியாக செயல்படவில்லை. மாகாண ஆட்சி முறை தோன்றியபோது பஹ்ரைனிலிருந்து கிடைத்த பெருந்தொகைப் பணத்தை என்ன செய்வதென மஜ்லிஸுஷ் ஷூறாவில் கலந்தாலோசனை செய்தபோது, வலீத் பின் ஹிஷாம் என்பாரின் கருத்தை ஏற்ற கலீபா உமர் (ரழி), பைத்துல் மால் என்ற நிதி நிறுவனத்தை உருவாக்கினார். இது ஸாஹிபு பைத்துல் மால் என்பாரின் பொறுப்பில் இருந்தது. ஸகாத், ஸதகா, ஜிஸ்யா, கராஜ், கனீமா. உஷ்ர். அல்பைஉ முதலிய வழிகள் மூலம் வருமானம் கிடைத்தது. அரச, நிருவாக, இராணுவ செலவினங்களுக்கும் பொது நல சேவைக்கும் மானியம் வழங்குவதற்கும் அவை பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திலும் தனித்தனி பைத்துல்மால்கள் இருந்தன. அம்மாகாணச் செலவினங்கள் கவனிக்கப்பட்டு மீதியிருப்பின் அவை மத்திய (மதீனா) பைத்துல் மாலுக்கு அனுப்பி வைக்கப்படும். வருமானம் குறைந்த மாகாணங்களுக்கு மத்திய பைத்துல் மால் தேவையின்போது உதவும்.

### உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** குலபாஉர் ராஷிதூன்களின் ஆட்சி பற்றித் தகவல் திரட்டி வர வழிப்படுத்துங்கள்.

**படி II** அவர்களின் ஆட்சி சிறப்படைய பின்வருவன காரணமாக அமைந்ததா என்பதை குழுநிலையில் கலந்துரையாட சந்தர்ப்பமளியுங்கள்.

(அ) நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள்
(ஆ) ஆட்சிப் பரவல்
(இ) பரிபாலன முறை

**படி III** குழுக்கள் திரட்டிய கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.

**படி IV** குறைநிரப்புச் செய்து குறிப்பெழுத நெறிப்படுத்துங்கள்.

### மேலதிக வாசிப்புக்குரியவை


- அபூபக்ர் ஏ.எம்., (1998), *இஸ்லாமிய வரலாறு, பாகம் 1*, சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்.
- இப்றாஹீம் செய்யித், (1963), *நாற்பெரும் கலீபாக்கள்*, சென்னை, வளர்மதிப் பதிப்பகம்

**தேர்ச்சி 9.0 : உமையா அப்பாஸிய ஆட்சிக் காலங்களிலும் அதன் பின்னரும் நிலவிய அரசியல், சமூக, கல்வி, கலாசார முன்னேற்றங்களை விமர்சன ரீதியாக விளங்கி நயப்பார்.**

**தேர்ச்சி மட்டம்9.1:** உமையா ஆட்சியின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள் பற்றி விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆராய்வார்.

**காலம்** : 35 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- உமையாக்களின் எழுச்சிக்கான காரணங்களை வரலாற்று ரீதியாக எடுத்துக்காட்டுதல்.
- உமையாக்களின் சாதனைகளை இனங்கண்டு எழுதுதல்.
- உமையாக்களின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆய்வு ரீதியாக முன்வைத்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- குலபாஉர் ராஷிதூன்களுக்குப் பின்னர் தோன்றிய ஆட்சி உமையா ஆட்சி எனப்படுகிறது. உமையா வம்ச ஆட்சியாளர்கள் தொடராக ஆண்டு வந்ததால் இவ்வாட்சி உமையா (வம்ச) ஆட்சி எனப்படுகின்றது.

- அது மட்டுமன்றி குலபாஉர் ராஷிதூன்கள் தனித்துவமான அமைப்பில் (தெரிவு, நியமனம், நியமனத்தில் தெரிவு என்றவாறு) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் அலி (ரழி) அவர்களின் கொலையை அடுத்து ஈராக்கியர் ஹஸன் (ரழி) அவர்களையும் ஷாமியர் முஆவியா (ரழி) அவர்களையும் கலீபாவாகத் தேர்ந்தெடுத்தனர். பின்னர் முஆவியா (ரழி) அவர்கள் ஈராக்கை நோக்கி பெரும் படையுடன் வந்தபோது முஸ்லிம்கள், முஸ்லிம்களால் கொலையுறுவதை விரும்பாத ஹஸன் (ரழி) அவர்கள் ஆட்சியை விட்டுக் கொடுத்தார்கள். இதனால் ஹி.41 இல் முஆவியா (ரழி) அவர்கள் ஏக கலீபாவாக மாறினார்கள்.

- முன்னைய கலீபாக்களின் தேர்விலிருந்து வித்தியாசமாக -தாமே கலீபாப் பதவிக்கு உரிமை கோரி கலீபாவாக வந்தமையாலும் உமையாக் கோத்திரத்தைச் சார்ந்தவர்களே வாரிசு அடிப்படையில் கலீபாவாக வந்தமையாலும் இவ்வாட்சி உமையா ஆட்சி என்ற பெயரைப் பெற்றது. குலபாஉர் ராஷிதீன்களின் முறையிலிருந்து வேறுபட்டிருந்தமையும் இதற்குக் காரணம் எனலாம்.

- ஜாஹிலிய்யாக் காலத்தில் க.்.பாவைப் பரிபாலிப்பதில் உமையாக்களும் பங்கேற்றனர். மக்கா, முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தபோது குறைஷியருக்குத் தலைமை தாங்கியவர் முஆவியா (ரழி) அவர்களின் தந்தை அபூசுப்யான் ஆவார். எனவே கலீபாவாக வருவதற்கு தாமும் தகுதியானவர் என அவர் கருதியிருக்கலாம். உஸ்மான் (ரழி) அவர்களின் கொலைக்குப் பழிவாங்கப்படவில்லை என்பது முஆவியா (ரழி) தலைமையிலான உமையாக்களின் பிரதான குற்றச்சாட்டாக இருந்தது. கலீபா அலி (ரழி) அவர்களை பைஅத் செய்யாமை, கொலையுண்ட கலீபாவின் அங்கியை காட்சிப்படுத்தி உணர்வுகளைத் தூண்டியமை, ஸிப்பீனில் போராடியமை, எகிப்தைப் படையெடுத்தமை முதலியன தலைமைத்துவத்துக்கான முன்னெடுப்புகளாகவே தெரிகின்றன.

- இருபது வருடங்களாக ஷாமின் கவர்னராகப் பணியாற்றி மக்கள் அபிமானத்தைப் பெற்றமை, அங்கு உமையாக்களை குடியமர்த்தியமை, எல்லை மாகாணமாக அமைந்த ஷாமைப் பாதுகாத்தமை போன்ற சாதகமான சூழ்நிலை முஆவியா (ரழி) அவர்களுக்குக் கிடைத்தது. மறுபக்கமாக அடிக்கடி மாறுந் தன்மையடைய ஈராக்கியர், பதவியேற்றது முதல் முஸ்லிம்களுடனேயே போராடிக் களைத்தமை, கிளர்ச்சிக்காரர்களின் தொல்லைகள், கவாரிஜ்களின் கெடுபிடிகள் போன்றவற்றால் அலி (ரழி) அவர்கள் பலவீனப்பட்டார்கள்.

- முஆவியா (ரழி) அவர்கள் பதவியேற்றதால் (41-60) கலீபா, கிலாபத் என்பதன் யதார்த்தம் கருத்தற்றுப் போனது. தலைநகர் மதீனாவிலிருந்து டமஸ்கஸுக்கு (திமிஷ்கு) மாறியது. உமையா-ஹாஷிமி என்ற கோத்திர வேறுபாடு வளர ஆரம்பித்தது. அரசியலில் ஸஹாபாக்களின் செல்வாக்கு படிப்படியாகக் குறைந்து பைசாந்திய செல்வாக்கினாலான புதிய மரபுகள் வளர ஆரம்பித்தன. பைத்துல் மாலின் செயற்பாடு சமூகப் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து விலகி நின்றது.

- எனினும் இவ்வம்ச ஆட்சியின் தாபகர் என்ற வகையில் முஆவியா (ரழி) அவர்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். நீண்டகால நிருவாக அனுபவமும் அவரிடம் காணப்பட்ட இயல்பான பண்புகளும் (இராச தந்திரம், மக்களைத் கவர்தல், செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்) அவருக்குக் கிடைத்த தளபதிகளின் பங்களிப்பும் அதற்குத் துணை செய்தன.

- அவர் கிலாபத்தை ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபடுத்தினார். பைசாந்திய ஒழுங்கமைப்பில் இராணுவ, நிருவாகப் பணிகளை மாற்றியமைத்தார். உமர் (ரழி) அவர்களின் காலத்தில் அமைக்கப்பட்ட தீவான்களை விரிவுபடுத்தினார். தீவானுல் காதம் போன்ற துணைத் திணைக்களங்களை உருவாக்கினார். உள்நாட்டுக் குழப்பம் காரணமாக ஹிஜ்ரி 30க்குப் பின்னர் வெளிநாட்டு எதிரிகள் பற்றிக் கவனம் செலுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நிலைமையைப் பயன்படுத்தி பைசாந்தியர் வடஆபிரிக்கப் பிரதேசங்களை மீட்டிக் கொண்டதோடு சுதேசிகளை இம்சைப்படுத்தவும் ஆரம்பித்தனர். மக்கள் கலீபாவிடம் முறையிட உக்பா பின் நாபிஉ தலைமையில் வட ஆபிரிக்காவுக்கு படையனுப்பப்பட்டது.

- ஹிஜ்ரி 50 இல் கைரவான் நகர் நிர்மாணிக்கப்பட்டு அங்கு நிரந்தரப் படை வைக்கப்பட்டது. அத்திலாந்திக் கடல் வரையிலான வடஆபிரிக்கப் பிரதேசங்களை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். கிழக்கு ஆப்கானிஸ்தான் (ஹிஜ்ரி 51), பல்கு (ஹிஜ்ரி 53), புகாரா (ஹிஜ்ரி 54), சமர்கந்து (ஹிஜ்ரி 55) பிரதேசங்கள் உமையாக்களின் கட்டுப்பாட்டில் வந்தன. ஹிஜ்ரி 48 முதல் 50 வரை கொன்ஸ்தாந்திநோபிளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் படையெடுப்புகள் நிகழ்ந்தன. சைப்பிரஸ், ரோட்டஸ் தீவுகளும் உமையா ஆட்சியின் கீழ் வந்தன. ஷாதியா, ஸாபியா எனும் பெயர்களில் குளிர்கால, வெப்ப கால படையணிகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

- உமர் (ரழி) அவர்களுக்குப் பின்னர் சிறந்த ஆட்சியாளராகப் பாராட்டப்படும் முஆவியா (ரழி) அவர்கள், ஆட்சியை உறுதிப்படுத்திய பின்னர், வம்ச ஆட்சியைத் தொடர்வதற்கான வழிகளை மேற்கொண்டார். முகீரதிப்னு சுஅபா (ரழி) அவர்களின் ஆலோசனைக்கு இணங்க மகன் யஸீதை வாரிசாக நியமித்தார். யஸீதுக்காக மக்களிடம் பைஅத் வாங்கினார். இது புதியதொரு நடைமுறையாக அமைந்தது. ஒரு கலீபா உயிருடனிருக்கும்போதே அடுத்த கலீபாவை நியமிப்பது, அவருக்காக மக்களிடம் பைஅத் பெற்றுக் கொள்வது என்ற நடைமுறையை ஆரம்பித்து வைத்தார். இந்த நடைமுறையை பல ஸஹாபக்கள் எதிர்த்தனர். பயமுறுத்தியும் பரிசளித்தும் பைஅத்

வாங்கப்பட்டது. எனினும், அன்றைய சூழ்நிலைக்கேற்ற முஆவியா (ரழி) அவர்களின் இஜ்திஹாத் என இதனை அங்கீகரிப்பவர்களும் உண்டு. அலி (ரழி) அவர்களின் ஆதரவாளர்களாக இருந்த ஈராக்கியர் இதனை அங்கீகரிக்காமல் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் ஸைத் பின் அபீஹ் என்ற தளபதி மூலம் அடக்கப்பட்டனர். ஹிஜாஸிலும் எதிர்ப்புகள் தோன்றின.

- யஸீதை வாரிசாக நியமித்ததன் மூலம் முஆவியா (ரழி) பெரும்பாலான மக்களின் அதிருப்திக்கு உள்ளானார். அவரது மரணத்துக்குப் பின்னர் கர்பலா (ஹி.61)விலும், ஹர்ரா (ஹி.63)விலும் இடம்பெற்ற போர்கள் இதனை எடுத்துக் காட்டுகின்றன. மக்கள் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழி) அவர்களைக் கலீபாவாக்கி ஆட்சிக்குள் ஆட்சி நடத்தும் மரபைத் தோற்றுவித்தனர். யஸீத் இறக்க அடுத்தடுத்துப் பதவியேற்ற அவரது இரு மக்களும் பதவி துறந்தனர். உமையாப் பிரமுகர்கள் மர்வான் இப்னு ஹகமை கலீபாவாகத் தெரிவு செய்தனர். இவ்வேளை, இப்னு ஸுபைர் டமஸ்கஸைச் சுற்றியுள்ள வட்டாரங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். இருவருக்குமிடையில் நிகழ்ந்த மர்ஜ் ராஹித் போரில் மர்வானுக்கு வெற்றி கிட்டியது. எனினும், அவரால் நீண்ட காலம் ஆள முடியவில்லை.

- மர்வானுக்குப் பின்னர் அவர் மகன் அப்துல் மலிக் (65-86) கலீபாவானார். இவர் உமையா வம்ச ஆட்சியின் இரண்டாவது நிர்மாணி என அழைக்கப்படுகிறார். கலீபா மர்வான் கொலை செய்யப்பட்டதும் அரச குடும்பத்தில் குழப்பங்கள் நிகழ்ந்தன. மர்வான் தனக்குப் பின்னர் யஸீதின் மகன் காலித்துக்குப் பதவியை வழங்குவதாகக் கூறியே பதவிக்கு வந்தார். ஆனால், பின்னர் தனது மகன் அப்துல் மலிக்கை வாரிசாக நியமித்தார். மர்வான் காலிதின் தாயை மறுமணம் செய்திருந்தார். தனது மகன் காலிதுக்கு பதவி வழங்காமையால் கோபமுற்ற மனைவியே கணவனைக் கொன்றதாகக் கூறுவர். மர்வானின் குடும்பமும் காலிதின் குடும்பமும் பகைமை கொண்டன. காலித் அப்துல் மலிக்கின் எதிரியானார்.

- அதேநேரத்தில் ஈராக்கில் தவ்வாபீன்கள் (ஹுஸைன் (ரழி) அவர்களுக்கு கர்பலாவில் உதவ முடியாமற் போனதற்காக மன்னிப்புக் கோருவோர்) பலம் பெற்று உமையாக்களை எதிர்க்கத் தயாராகினர். அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழி) மீண்டும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டார். மெசபடோமியாவில் கவாரிஜ்கள் பலம் பெற்றனர். வட ஆபிரிக்கப் பிரதேசங்களை பைசாந்தியர் மீட்டிக் கொண்டிருந்தனர். இவ்வாறு காலித், தவ்வாபீன், இப்னு ஸுபைர், கவாரிஜ், பைசாந்தியர் என்ற ஐந்து எதிரிகளை முறியடிக்க வேண்டிய நிலைக்கு அப்துல் மலிக் உள்ளானார். எனினும் தைரியத்தோடு எதிர்கொண்டார்.

- காலிதுக்கு துணையாக நின்ற அவரது தளபதி அம்ரை கொலை செய்ததன் மூலம் காலிதைப் பலவீனப்படுத்தினார். முக்தார் பின் உபைத் தலைமையில் தவ்வாபீன்கள் ஈராக்கில் எழுச்சி பெற்றிருப்பதை அடக்குவதற்காக உபைதுல்லாஹ் பின் ஸியாத் தலைமையிலான படை போரிட்டது. தவ்வாபீன்கள் உபைதுல்லாவைக் கொலை செய்து தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர். இவ்வேளை, முஸ்அப் இப்னு ஸுபைர் தலைமையிலான இப்னு ஸுபைரின் படை தவ்வாபீன்களை முறியடித்து ஈராக்கை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. பின்னர் அப்படை மெசபடோமியாவுக்குச் சென்று கவாரிஜ்களை அடக்கும் பணியிலீடுபட்டது. இப்னு ஸுபைரின் படை மூன்றாகப் பிரிந்திருந்த சந்தர்ப்பத்தைப் பார்த்து அப்துல் மலிக், ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் தலைமையில் ஒரு படையை மக்காவுக்கு அனுப்பி வைத்தார். இப்னு ஸுபைர் தோற்கடிக்கப்பட்டு ஹஜ்ஜாஜினால் கொலை செய்யப்பட்டார் (ஹிஜ்ரி 73).

ஹஜ்ஜாஜின் படை ஈராக்கிற்குச் சென்றபோது அவர்களும் சரணடைந்தனர். முஹல்லப் என்பாரின் தலைமையில் சென்ற படை மெசபடோமியாவை அப்துல் மலிக்கின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது.

- இவ்வாறு உள்நாட்டு எதிரிகளை அடக்கிய பின்னர், பைசாந்தியருக்கெதிரான போராட்டத்தில் இறங்கினார். தளபதி ஸுஹைரின் தலைமையில் கைரவானுக்கு படையனுப்பினார். தளபதி ஸுஹைர் கொலை செய்யப்பட ஹஸன் பின் நு.'.மான் தலைமையில் சென்ற படை கைரவானை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. இவ்வாறு கலீபா அப்துல் மலிக் தாம் இழந்த பிரதேசங்களை மீட்டிக் கொண்டார். உமையா ஆள்புலம் விரிவடைந்தது. இதன் பின்னர் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர்.

- கலீபா அப்துல் மலிக் அறபு மொழியை அரச மொழியாகப் பிரகடனப்படுத்தினார். இதனால் அறபியல்லாதவர்களும் அறபு மொழியைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. வெவ்வேறு மொழிகளிலிருந்த ஆவணங்கள் அறபு மொழியில் பெயர்க்கப்பட்டன. மொழி விருத்திக்காக இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. ஜாஹிலிய்யாக் கால இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன. பிற்காலத்தில் மொழி பெயர்ப்புக் கலை வளர்வதற்கும், விஞ்ஞானக் கருத்துக்களை முன்வைப்பதற்குமான மொழி வளத்துக்கு வழிவகுக்கப்பட்டது. 50க்கு மேற்பட்ட நாடுகள் அறபு நாடுகளாகப் பெயர் பெற்றன.

- அதேநேரத்தில் அப்துல் மலிக் நாணய சாலையை நிறுவி அறபு நாணயங்களை வெளியிட்டார். அதுவரை புழக்கத்திலிருந்த லத்தீன், பஹ்லவி நாணயங்களைத் தடைசெய்தார். உரோமர் தமது நாணயங்களைப் பயன்படுத்த வேண்டாமென தடையுத்தரவு பிறப்பித்ததற்கு மாற்றீடாக இவ்வாறு செய்தார் எனவும் கூறுவர்.

- உமர் (ரழி), முஆவியா (ரழி) ஆகியோர் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட தபால் முறையை இவர் விஸ்தரித்தார். குதிரைகளையும், புறாக்களையும் இதற்காகப் பயிற்றுவித்துப் பயன்படுத்தினார். நீதித்துறையைச் சீர்படுத்துவதற்காக நீதிமன்றத் தீர்ப்புகளை பதிவுசெய்யுமாறு உத்தரவிட்டார். சட்டத் தீர்ப்புகள் ஆவணப்படுத்தப்படாத கால கட்டத்தில் இவ்வாறு செய்தமை பாராட்டப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையாகும்.

- உள்நாட்டுக் குழப்பங்களை அடக்குவதற்காக இராணுவத்தை விஸ்தரித்த கலீபா, அமைதியேற்பட்ட பின்னர் மேலதிக படைகளைக் கலைத்துவிட்டார். இதனால் அரச நிதி பாதுகாக்கப்பட்டதோடு, கலைக்கப்பட்ட வீரர்கள் கிராமங்களுக்குச் சென்று விவசாய நடவடிக்கைகளில் இறங்கினர். மேலும் இவரது காலத்திலேயே உமையா ஆட்சியின் கலை இலக்கிய முயற்சிகளும் ஆரம்பமாயின.

- அப்துல் மலிக்கிற்குப் பின்னர் அவர் மகன் வலீத் கலீபாவானார் (86-96). உமையா கலீபாக்களில் குழப்பமின்றி பதவியேற்ற முதல் கலீபா இவரேயாவார். அப்துல் மலிக் எதிரிகளை அடக்கி வைத்தமையும், நிருவாகத்தை ஒழுங்குபடுத்தியமையும் இதற்குக் காரணம் எனலாம். அதுவரை உமையாக்களுக்கு ஈராக்கியர், ஹிஜாஸியர், கவாரிஜ் என்போரே தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். இவரை அவர்கள் எதிர்க்கவில்லை. உள்நாட்டில் அமைதி நிலவியமையால் கலீபா வெளிநாட்டில் கவனம் செலுத்தினார். அப்துல் மலிக்கின் ஆலோசனைக்கிணங்க ஹஜ்ஜாஜை உயர் நிலையில் வைத்திருந்ததால் கீழ்நாட்டை அவர் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்.

- இவரது காலத்தில் சிந்து, ஸ்பானியா ஆகிய இரு பிரதேசங்களும் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன. தளபதி குதைபா மத்தியாசிய பிரதேசங்களில் உமையா ஆட்சியை விரிவுபடுத்தினார். குவாரிஸ்ம், சமர்க்கந்த் பிரதேசங்களுக்கூடாக சீனாவின் எல்லை வரை ஆட்சி பரவியது. மூஸா பின் நுஸைர், வட ஆபிரிக்க பிரதேசங்களை மட்டுமன்றி மத்திய தரைக் கடல் தீவுகளையும் உமையாக்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இவரால் அனுப்பி வைக்கப்பட்ட தளபதி தாரிக் பின் ஸியாத் என்ற இளைஞனே ஸ்பானியாவை முஸ்லிம் ஆட்சிக்குட்படுத்தினார். ஆர்மீனியா, கஸ்பியன் கடல் பிரதேசங்கள் தளபதி மஸ்லமாவினால் கட்டுப்படுத்தப்பட்டன. இஸ்லாமிய ஒழுங்கை விரும்பிய ஹிஜாஸுக்கு உமர் இப்னு அப்துல் அஸீஸ் கவர்னராக நியமிக்கப்பட்டமை அங்கிருந்து வந்த எதிர்ப்புக்களைத் தணித்தன.

- நாட்டில் அமைதி நிலவியமை, எல்லை விரிவடைந்தமை முதலான காரணங்களால் அரசாங்க வருமானம் அதிகரித்தது. எனவே முன்னைய கலீபாக்களின் காலத்தில் இடம்பெறாத பொதுநல சேவைகள் இவர் காலத்தில் அதிகரித்தன. பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. வைத்தியசாலைகளும், மருத்துவமனைகளும் தாபிக்கப்பட்டன. அநாதை நிலையங்கள், நோயாளர் விடுதிகள் கட்டப்பட்டன. தெருக்கள் விஸ்தரிக் கப்பட்டன. பொதுக் கிணறுகள் தோண்டப்பட்டன. பாலங்கள் அமைக்கப்பட்டன. உணவு விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டன. ஏழைகளும், நோயாளர்களும் சகாயநிதி பெற்றனர். மஸ்ஜிதுந் நபவி புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. கட்டடக் கலையம்சங்கள் பொருந்திய டமஸ்கஸ் ஜாமிஆ மஸ்ஜித் உருவானது. கோட்டைகள் கட்டப்பட்டன.

- இவருக்குப் பின்னர் சகோதரர் சுலைமான் கலீபாவானார். இவரது ஆட்சி மூன்றாண்டுகள் நிலைத்தது. அடுத்து கலீபாவான உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களை இவரே நியமித்தார்.

- உமர் இப்னு அப்துல் அஸீஸ் (99-101) தனித்துவமான ஒரு கலீபாவாக கணிக்கப்படுகிறார். இரண்டு ஆண்டுகளே ஆட்சி நடத்தினாலும் கூட இரண்டாவது உமர், ஐந்தாவது கலீபா, கலீபதுஸ் ஸாலிஹ் என்று பாராட்டப்படுமளவுக்கு இவரது பணிகளும் சாதனைகளும் அமைந்தன. கலீபா உமர் (ரழி) அவர்களின் குடும்பத் தொடர்பு, மதீனாவில் கல்வி கற்றமை ஆகிய இரண்டும் இவரது ஆட்சிக்கு வழிகாட்டின. உமையா வம்ச ஆட்சியில் இடம்பெற்ற தவறுகளை நன்கறிந்திருந்த இவர், அவற்றைக் களைவதில் அதிக கவனம் செலுத்தினார். கலீபா வலீதின் காலத்தில் ஹிஜாஸின் கவர்னராக நியமிக்கப்பட்டபோது சுதந்திரமாகச் செயல்படுவதற்கான அனுமதியைப் பெற்றதன் பின்னரே பதவியேற்றார். அங்கு மஜ்லிஸுஷ் ஷூறா ஒன்றை நிறுவி, அதற்கூடாக நிருவாகத்தை நடத்தினார். இதனால் ஹஜ்ஜாஜின் கொடுமையிலிருந்து விடுபட விரும்பியவர்கள் ஹிஜாஸில் குடியேற ஆரம்பித்தனர். ஹிஜாஸில் அவர் பெற்ற பயிற்சி கிலாபத்தை நிருவகிக்கத் துணை செய்தது.

- மக்களின் கருத்துப் பெறப்படாமல் தன்னை கலீபாவாக நியமித்ததை அவர் ஆட்சேபித்தார். மக்கள் ஏகமனதாக கேட்டுக் கொண்டதற்கிணங்க பதவியை ஏற்றுக் கொண்டார். முன்னைய கலீபாக்களால் இடம்பெற்ற அநியாயங்களைக் களைவது தனது முதற் பணி எனக் கருதினார். உமையாக்களுக்கு வழங்கப்பட்ட தனியான சலுகைகளை இரத்துச் செய்தார். (உதாரணம்: பைத்துல் மாலிலிருந்து மானியம் வழங்குதல், நீதிமன்றத்தில் தனியிடம் ஒதுக்குதல்) நிருவாக ஊழல்களைக் களைய முற்பட்டார். (உ-ம்: அரச வருமானத் துறைக்கு தனித்தனி பதிவேடுகளைப் பயன்படுத்தல், வருமானத்தைப் பெருக்குவதற்காக மவாலிகள் மீது விதிக்கப்பட்ட மேலதிக வரிகளைத் தடைசெய்தல், திம்மிகளுக்கான மத சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்) மக்கள்

இஸ்லாத்தைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார். ஹதீஸ்களை தொகுப்பதற்கு அரச மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டார். பாடசாலைகளை ஆரம்பித்து மாணவருக்கு உபகார நிதியும், ஆசிரியர்களுக்கு வாழ்க்கைப் படியும் வழங்கினார். மஸ்ஜிதுகளைக் கல்விச் சாலைகளாக உயிர்ப்பித்தார். (உ-ம்: குர்ஆன், ஹதீஸ் வகுப்புகளை நடத்தல், ஆலிம்களைப் பயிற்றுவித்தல்) பகிரங்கமாக நிகழும் பாவங்களுக்குத் தடை விதித்தார். (உ-ம்: பொதுக் கிணறுகளில் நிர்வாணமாகக் குளித்தல், மதுபானப் பாவனை) படையெடுப்புகளை நிறுத்தினார். பயிற்றுவிக்கப்பட்ட குழுக்களுக்கூடாக இஸ்லாத்தைப் பிரசாரம் செய்தார். இதனால் மக்கள் நலம் பெற்றனர். உமையாக்கள் வெறுப்படைந்தனர். இறுதியில் நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டார்.

- இவரது ஆட்சியின் மாட்சி, உமையா வம்ச ஆட்சி மீது மக்களுக்கு வெறுப்பை உண்டாக்கியது. அடுத்து பதவியேற்ற இரண்டாவது யஸீத் முதலாவது யஸீதைப் பின்பற்றினார். மக்கள் வெறுப்படைந்தனர். எல்லாப் பிரதேசங்களிலும் முழரியர் ஹிம்யாரியர் மோதல்கள் இடம்பெற்றன. இச் சந்தர்ப்பத்தை அப்பாஸியர் பயன்படுத்தினர். அஹ்லு பைத்களுக்கே ஆட்சியுரிமையுடையது என்ற கருத்தை துறவிகளாகவும் வியாபாரிகளாகவும் நடித்துப் பிரசாரம் செய்தனர். தொடர்ந்து வந்த உமையா கலீபாக்கள் பலவீனமான நிலையில் இருந்ததால் கலீபா ஹிஷாமின் காலத்தில் அப்பாஸியர் தமது பிரசாரத்தைப் பகிரங்கமாகவே நடத்தினர். இரண்டாம் மர்வானின் காலத்தில் போராட்டத்தை ஆரம்பித்தனர். முதலில் கூபாவைத் தமதாக்கினர். எதிர்க்க வந்த படையைத் தோல்வியுறச் செய்தனர். கலீபா மர்வானைக் கொலை செய்ததோடு உமையா ஆட்சி முற்றுப் பெற்றது.

- ஹிட்டி என்ற கீழைத்தேய ஆய்வாளர் உமையாக்களின் காலத்தை அடைகாத்தற் காலம் என்கிறார். ஏனெனில் பின்னர் அப்பாஸியர் காலத்தில் நிகழ்ந்த அறிவு கலாசாரத் துறை வளர்ச்சிக்கு உமையாக்களே அத்திவாரமிட்டனர். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று விஞ்ஞானக் கருத்துக்களை முன்வைக்கக் கூடிய தகுதியை அறபு மொழி பெற்றுக் கொண்டது. அறபு மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத கூபா, பஸரா பிரதேச மக்கள் போட்டியிட்ட நிலையில் அறபு மொழியைக் கற்றனர். கூபா இலக்கணவாதிகள், பஸரா இலக்கணவாதிகள் என பெயர் குறித்துக் கூறக் கூடிய அளவு அவர்களது முயற்சிகள் அமைந்தன. அபுல் அஸ்வத் அத்துஅலி, ஷீபவைஹி முதலான பஸரா அறிஞர்களும், அல் கிஸாயி, அல் பர்ரா முதலான கூபா அறிஞர்களும் இலக்கண நூல்களையும் அகராதிகளையும் உருவாக்கினர்.

- இளம் ஸஹாபாக்களும் தாபியீன்களும் ஹதீஸ், பிக்ஹு, தப்ஸீர் துறைகளில் கவனம் செலுத்தினர். முஹம்மத் இப்னு ஹஸ்ம், ஷிஹபுத்தீன் ஸுஹ்ரி போன்றோர் ஹதீஸ் துறையில் பங்காற்றினர். அரசியலிலிருந்து ஒதுங்கிய நிபுணத்துவமுடைய ஸஹாபாக்களும், தாபிஈன்களும் அறிவுத் துறையில் தமது கவனத்தைச் செலுத்தினர். மக்கா, மதீனா, கூபா, பஸரா, எகிப்து முதலிய நகர்களின் மஸ்ஜித்கள், அவற்றை அண்மித்திருந்த மத்ரஸாக்கள் கல்வியைப் போதித்துக் கொண்டிருந்தன. நகர் விட்டு நகர் சென்று மக்கள் கற்றனர். இப்னு ஜுரைஹ், ஸுப்யான் பின் உயைனா, ஸுப்யானுஸ் ஸவ்ரி, ஹம்மாத், லைஸ், இப்னு முபாரக், ஔஸாயி முதலான அறிஞர்கள் ஹதீஸ் துறையில் பங்காற்றினர்.

- இக்காலத்தில் பிக்ஹுப் பிரச்சினைகள் அதிகரித்திருந்தமையால் ஒவ்வொரு நகரிலும் பிக்ஹுத் துறை அறிஞர்கள் தனியாகவும் கூட்டாகவும் பணியாற்றினர். மக்காவில் அதா இப்னு அபீ ரபாஹ், அம்ர் இப்னு தீனார், தாவூத் பின் கைஸான் முதலானோரும்,

மதீனாவில் ஸஈத் இப்னு முஸய்யப், உர்வா பின் ஸுபைர், அல் காஸிம் பின் முஹம்மத் முதலானோரும், கூபாவில் இப்றாஹீம் நுகஈ, சஅபி, ஹம்மாத் முதலானோரும், பஸராவில் ஹஸன் அல் பஸ்ரி, முஹம்மத் இப்னு ஸீறின், முஸ்லிம் பின் யஸார் முதலானோரும், டமஸ்கஸில் மக்ஹூல், ஔஸாயி முதலானோரும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அல்கமா, முஜாஹித், இக்ரிமா முதலானோர் தப்ஸீர் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். கிறாஅத் கலையை உருவாக்கிய ஏழு இமாம்களும் உமையாக் காலத்தில் வாழ்ந்தவர்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

- அல்குர்ஆனை மையமாகக் கொண்டெழுந்த இக்கலைகளே இல்முந் நக்லிய்யா எனப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து உருவான கலைகளை இல்முல் அக்லிய்யா என்பர். உமையாக் காலத்திலேற்பட்ட இல்முந் நக்லிய்யாவின் வளர்ச்சியே அப்பாஸிய ஆட்சியில் இல்முல் அக்லிய்யா தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. கலீபா யஸீதின் மகன் காலித் அளவையியல், இரசாயனம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு கிரேக்க, கிப்திய மொழிகளிலிருந்த இரசாயன நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார்.

- இவை போன்றே உமையாக் காலத்தில் அழகியற் கலைகளும் வளர்ச்சியடைந்தன. பைசாந்திய செல்வாக்குக்குட்பட்ட பிரதேசங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தமையால் இசை, நடனம் போன்ற இஸ்லாம் கடிந்த கலைகளில் மட்டுமன்றி கட்டடக்கலை போன்ற இஸ்லாம் ஆதரித்த கலைகளிலும் ஈடுபட்டனர். கலீபா வலீதின் காலத்தில் கலையம்சங்கள் பொருந்திய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. மஸ்ஜிதின் கூறுகளான குப்பா, மினாரா, மிஹ்ராப், மிம்பர், வில்வளைவு போன்றன கலைத்துவம் பெற்றன. குப்பதுல் கழ்ராஉ (ஹஜ்ஜாஜ்), முவக்கர் (யஸீத்-2), கஸ்ர் (வலீத்-2) முதலிய கிராமிய மாளிகைகள், திமிஷ்க் ஜாமிஆ மஸ்ஜித், குப்பதுஸ் ஸக்ரா (வலீத்-1) என்பனவும் குறிப்பிடத்தக்க கட்டடங்களாகத் திகழ்ந்தன.

- உமையாக்களின் சாதனைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்
  - பரந்த பேரரசொன்றை உருவாக்கி ஆண்டமை
  - அறபு மொழியையும் அறபித்துவத்தையும் பாதுகாத்தமை
  - கலை இலக்கிய முயற்சிகளை ஆரம்பித்து வைத்தமை
  - அறிஞர்களை சுதந்திரமாக இயங்க இடமளித்து இல்முந்நக்லியாவை வளர்த்துவிட்டமை.
  - எதிரிகளிலிருந்து கிலாபத்தைப் பாதுகாத்தமை
  - அரசியல், பொருளாதார, சமூக விருத்திக்கு உதவியமை

- உமையாக்களின் வீழ்ச்சிக்கான காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
  - இஸ்லாமிய வழிகாட்டல் பேணப்படாமை.
  - கோத்திர உணர்வு
  - வாரிசு ஒழுங்கின்மை
  - பிற்பட்ட கலீபாக்களின் பலவீனம்
  - பைத்துல்மால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை
  - கொள்கை முரண்பட்ட ஷீஆக்களும் கவாரிஜ்களும்
  - மவாலிகளும் திம்மிகளும் கொண்டிருந்த வெறுப்பு
  - அப்பாஸியரின் எழுச்சி

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** உமையா காலம் பற்றி சுருக்கமாக விளக்கமளியுங்கள்.
**படி II** கற்றல் துணைகளுக்கூடாக தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.
**படி III** பின்வரும் தலைப்பில் விவாதிக்க வழிகாட்டுங்கள்.
(அ) உமையாக்கள் காலம் ஒரு சிறந்த காலம்
(ஆ) உமையாக்கள் காலம் ஒரு சிறந்த காலம் அல்ல.
**படி IV** விவாதத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை நலனாய்வு செய்யுங்கள்
**படி V** கருத்துக்களை எழுதிக்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை


- இப்றாஹீம் செய்யித், *உமையாக்கள்*, சென்னை, வளர்மதிப் பதிப்பகம்
- அபூபக்ர் ஏ.எம்., *இஸ்லாமிய வரலாறு II*, (1998), சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்
- கைரபாதி மாயில், *உமர் இப்னு அப்துல் அஸீஸ்*, சென்னை

**தேர்ச்சி 9.0 : உமையா அப்பாஸிய ஆட்சிக் காலங்களிலும் அதன் பின்னரும் நிலவிய அரசியல், சமூக, கல்வி, கலாசார முன்னேற்றங்களை விமர்சன ரீதியாக விளங்கி நயப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 9.2:** அப்பாஸிய ஆட்சியின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள் பற்றிப் பகுப்பாய்வு செய்வார்.

**காலம்** : 35 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- அப்பாஸிகளின் எழுச்சிக்கான காரணங்களை இனங்காணுதல்.
- அப்பாஸிகளின் சாதனைகளை உமையாக்களுடன் ஒப்பிட்டு விமர்சித்தல்.
- அப்பாஸிகளின் ஆட்சிக்காலம் நீண்டகாலம் இடம்பெற்றதற்கான அரசியல், சமூகக் காரணங்களை தர்க்க ரீதியாக முன்வைத்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- உமையாக்களுக்குப் பின்னர் தோன்றிய வம்ச ஆட்சி, அப்பாஸிய ஆட்சி எனப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அப்பாஸ் (ரழி) அவர்களின் சந்ததியினர் ஆட்சியாளர்களாக இருந்தமையால் இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

## முதற் கட்ட கலீபாக்கள்



- உமையா கலீபா இரண்டாம் மர்வான் ஹி.132 (கி.பி. 750)ல் கொலை செய்யப்பட்டதோடு அப்பாஸியர் காலம் ஆரம்பமாகின்றது. அது ஹிஜ்ரி 656 கி.பி. 1257 வரை சுமார் 5 நூற்றாண்டுகள் நீடித்தது. வரலாற்று ஆசிரியர்கள் அப்பாஸிய ஆட்சியை ஐந்து கால கட்டங்களாக வகுப்பர்.
  1. அப்பாஸியரின் முதற் காலப்பிரிவு (ஹிஜ்ரி 132 - 232 / கி.பி. 750 - 847)
  2. துருக்கியர், மம்லூக்கியர் செல்வாக்குற்ற காலப்பிரிவு (ஹிஜ்ரி 232 - 334 / கி.பி. 847 - 945)
  3. பனூ புவைஹ் காலப்பிரிவு (ஹிஜ்ரி 334 - 447 / கி.பி. 945 - 1075)
  4. செல்ஜுக்கியர் காலப்பிரிவு (ஹிஜ்ரி 447 - 530 / கி.பி. 1075 - 1136)
  5. வீழ்ச்சிக்காலம் (ஹிஜ்ரி 530 - 656 / கி.பி. 1136 - 1258)

- இதில் முதலாவது கால கட்டமே சிறப்பான காலமாக அமைந்தது. பலம் வாய்ந்த கலீபாக்கள் இக்காலத்தில் ஆட்சி நடத்தினர்; குறிப்பிடத்தக்க சாதனைகளையும் நிலைநாட்டினர். இக்கால கட்டத்தில் 9 கலீபாக்கள் பணியாற்றியுள்ளனர்.

- அப்பாஸியரின் எழுச்சிக்கு பாரசீகர் பெரும்பங்காற்றினர். ஏற்கனவே பாரசீகத்தில் கண்ணியமாக வாழ்ந்த பாரசீகர் (இஸ்லாத்தை ஏற்றிருந்த மவாலிகள்) உமையா ஆட்சியில் இரண்டாந் தரப் பிரசையாக நடத்தப்பட்டதாலும் உமையா ஆட்சியில் கடுமையாகத் தாக்கப்பட்டதாலும் பெரும் மனத்தாக்கத்திற்கு உட்பட்டனர். எனவே உமையாக்களை ஒழிப்பதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர். இரண்டாவது யஸீத் பதிவியேற்றபோது அப்பாஸியர் அஹ்லுல் பைத்களுக்கு ஆட்சியுரிமையுடையது எனப் பிரசாரம் செய்தனர். முஹம்மத் பின் அலி பிரசாரத்தை ஆரம்பித்த காலத்திலிருந்து பாரசீகர்களான காலித் பர்மகி, அபூ முஸ்லிம் குராஸானி முதலானோர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். இதனால் பாரசீக பிரதேசத்தில் அப்பாஸியர்களுக்கு முழுமையான ஆதரவு கிடைத்தது. அஹ்லுல் பைத்களுக்கு ஆட்சியுரிமையுடையது என்ற அவர்களின் கோஷம், தெய்வீக உரிமைக் கோட்பாட்டை ஆதரித்த பாரசீகர்களுக்கு நெருக்கமான கோட்பாடாகவும் இருந்தது. பாரசீக பிரதேசத்திலிருந்த கூபாவே அப்பாஸியரால் முதலில் வெற்றிகொள்ளப்பட்டது.

- இவ்வாறான நிலையில் கிலாபத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.
  - ஒரு வம்ச ஆட்சி நீங்கி மற்றொரு வம்ச ஆட்சி தோன்றியது.
  - கிலாபத்தின் தலைநகர் மேற்கிலிருந்து (டமஸ்கஸ்) கிழக்கிற்கு (பக்தாத்) மாறியது.
  - பக்தாத், கோர்டோவா என்ற இரு நகரங்களைத் தலைநகராகக் கொண்ட இரண்டு அரசாங்கங்கள் தோன்றின.
  - ஆட்சியில் பாரசீகச் செல்வாக்கு அதிகரித்தது.
  - சமூக அரசியல் துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.
  - சிற்றரசுகள் தோன்றின.
  - கலை, இலக்கிய, அறிவியல் துறைகளில் விருத்தியேற்பட்டது.

- அப்பாஸியரின் முதல் கலீபாவாக அபுல் அப்பாஸ் ஹி. 132 இல் பதவியேற்றார். அவர் எதிரிகளை முறியடிப்பதிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். உமையா அரச பரம்பரையை முற்றாக அழிப்பது அவரது நோக்கமாக இருந்தது. உயிருடனிருந்த வர்களைக் கொலை செய்ததோடு நின்றுவிடாது, இறந்து அடக்கம் செய்யப்பட்டவர்களின் சடலங்களுக்கும் தண்டனை வழங்கினார். தப்பியோடிய அப்துர் ரஹ்மான் என்ற இளைஞன் மாத்திரம் சிறிது காலத்துக்குப் பின்னர் ஸ்பானியாவில் உமையா ஆட்சியை உறுதிப்படுத்தினார். கலீபா தன்னை இரத்த தாகமுடையவர் என்று பொருள்படும் அஸ்ஸப்பாஹ் என்ற பெயரைச் சூடிக் கொண்டார்.

- அடுத்து பதவியேற்ற கலீபா ஜ.்.பர் அல் மன்ஸூர், அப்பாஸிகளின் உண்மையான தாபகர் எனக் கொள்ளப்படுகிறார். அவர் அலவியரின் செல்வாக்குக்குட்பட்ட கூபாவை விடுத்து பக்தாதைத் தலைநகராக்கினார். தானே திட்டமிட்டு பொருத்தமான இடத்தில் பொருத்தமான அமைப்பில் அந்நகரை நிர்மாணித்தார். ஹி.145 முதல் 150 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் காலித் பர்மகியின் மேற்பார்வையில் அது முழுமை பெற்றது. வட்ட வடிவமாக, உள்கோட்டை, வெளிக்கோட்டைகளை உடையதாக, மத்தியில் ஜாமிஆ மஸ்ஜிதையும் 180 அடி உயரமான பச்சைத் தூபியையும் அது கொண்டிருந்தது. கடல் வழியாகவும், தரை வழியாகவும் பொருள்கள் வந்து சேரும் வகையில் பாதைகள் அகலமாக அமைக்கப்பட்டிருந்தன. அது மதீனதுஸ் ஸலாம் அல்லது மதீனதுல் மன்ஸூர் எனப்பட்டது.

- மீண்டும் உமையாக்கள் எழுச்சி பெற முடியாத வகையில், அபுல் அப்பாஸ், உமையாக்களை ஒழித்துக் கட்டினார். எனினும் கலீபா மன்ஸூருக்கு அலவியர், பாரசீகர் பற்றிய பயம் இருந்தது. ஆதலால் அப்துல்லா பின் அலி (அறபுத் தளபதி) அபூ முஸ்லிம் குராஸானி (பாரசீகத் தளபதி) முஹம்மத் அந்நப்ஸுஸ் ஸகிய்யா (அலவிகளின் தலைவர்) ஆகிய மூவரையும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து தந்திரமாக கொலை செய்தார். இதனால் அவருக்கு எதிரிகள் இல்லாமற் போயினர்.

- அடுத்து நிருவாக ஒழுங்கொன்றை ஏற்படுத்தினார். உமையாக்களைப் போன்றே மாகாண கவர்னரை நியமித்தாலும் வஸீர் (அமைச்சர்) ஹாஜிப் (காவலர்) என்ற புதிய பதவிகளையும் ஏற்படுத்தினார். வஸீர்கள் அமர்த்தப்பட்டாலும் கலீபா மன்ஸூர் அதிகாரங்களை வழங்காமையால் அவர்கள் பதவி துறந்தனர். ஹாஜிப் என்பவர் வாயில் பாதுகாவலர் என்ற நிலையில் இருந்தாலும் அவர் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றினார். இவர்களோடு அணுக்கச் செயலாளர் ஒருவரையும் நியமித்திருந்தார். நிருவாகத்திலும் இராணுவத்திலும் அறபு, பாரசீக சமநிலையைப் பாதுகாத்தார்.

- இவரை அடுத்து மகன் மஹ்தியும், தொடர்ந்து ஹாதியும் பதவியேற்றனர். கலீபா மஹ்தியின் காலத்தில் அதிகமான சமூக நலப் பணிகள் இடம்பெற்றன. இதனால் அப்பாஸிகள் பற்றிய நல்லெண்ணத்தை மக்கள் மத்தியில் பதிக்கக் கூடியதாக இருந்தது. இவர் அமைச்சர்களுக்கு அதிகாரங்களை வழங்கியதால் அவர்களின் ஒத்துழைப்பும் கிடைத்தது. வெளிநாட்டுறவுகளும் ஏற்பட்டன.

- அடுத்து வந்த கலீபா ஹாரூன், அப்பாஸிய கலீபாக்களில் முக்கியமான ஒருவராவார். இவரது காலத்தை அப்பாஸிய ஆட்சியின் உச்ச காலம் என வழங்குவர். தந்தையின் காலத்திலேயே போர்ப் பயிற்சியையும், (தளபதியாக) நிருவாக அனுபவத்தையும் (கவர்னராக) பெற்றுக் கொண்ட இவர், ஆட்சியை சிறப்பாக நடத்தினார். இவரிடம் அறிவும், ஆன்மீகப் பக்குவமும் காணப்பட்டன. அல்லாஹ்வுடனான நெருக்கத்திலும், மக்களுக்கு தர்மம் செய்வதிலும் அறிஞர்களிடம் உபதேசம் பெறுவதிலும் முன்மாதிரியாக இருந்தார். மாறுவேடம் பூண்டு மக்கள் குறைநிறைகளை அறிவதிலும் ஈடுபட்டார்.

- இவரது காலத்தில் காலித் பர்மகியின் பரம்பரையில் வந்த பர்மகி குடும்பம் கலீபாவுக்கு பக்கபலமாக அமைந்தது. யஹ்யா பர்மகி கலீபாவின் ஆசிரியராக அமர்ந்தவர்; ஹாரூன் பதவியேற்பதற்கு துணை செய்தவர். இதனால் இவரது மக்களான பழ்ல், ஜ.்.பர், மூஸா ஆகியோர் ஆட்சியில் உயர் பதவி வகித்தனர். அவர்கள் ஆடம்பர மாளிகைகளை அமைத்தனர். பன்னாட்டு அறிஞர்களையும் நூல்களையும் பக்தாதுக்கு வரவழைத்தனர். நன்கொடைகள் வழங்கினர். இதனால் பக்தாத் அறிவுத் துறையில் உயர்வடைந்தது. விடுதிகளும், மருத்துவமனைகளும், மஸ்ஜிதுகளும் பெருகின. இவ்வாறு பர்மகிகள் செல்வாக்குப் பெறுவதை முதலமைச்சர் பஸ்ல் பின் ரபீஆ விரும்பவில்லை. பர்மகிகள்

ஷீஆக்களாக இருந்தமையால் ஆட்சி அலவியர் வசம் போய்விடுமென்று கலீபாவைப் பயமுறுத்தினார். இதனால் பர்மகிகளின் செல்வாக்கை ஒழிக்கும் முயற்சியில் கலீபா ஈடுபட்டார். அவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது ஒருவகையில் கிலாபத்துக்குப் பாதகமாகவும் அமைந்தது.

- இவரது காலத்தில் தாருல் ஹிக்மா என்ற நூலகம் அமைக்கப்பட்டது. அஸ்மஈ, (இலக்கணம்), ஜிப்ரீல் (மருத்துவம்), இப்றாஹீம் மவ்ஸலி (இசை), அபூ யூசுப் (பிக்ஹ்) போன்ற அறிஞர்களும் வாழ்ந்தனர். கதை நூல்களும் தத்துவ நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டன. அபூ யஹ்யா பின் பத்ரீக், யஹ்யா பின் முஆவியா முதலான மொழிபெயர்ப்பாளர்கள் பணியாற்றினர்.

- அரசியல் சிறப்பாக அமைந்ததால் வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரித்தன. அவை அரசியல், வியாபாரம், கல்வி தொடர்பானவைகளாக அமைந்தன. உரோமர்களுடன் போராடிப் பெறப்பட்ட பிரதேசங்கள், ஒப்பந்தத்தை மீறி திறை செலுத்த மறுத்தபோது, இதன் விளைவை கண்கள் காணுமேயன்றி காதுகள் கேட்கா என கடுமையாக எச்சரித்தார். இந்திய, சீன, பிராங்திய மன்னர்கள் நேசத் தொடர்பு கொண்டனர். இவரது காலத்தில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் அதிக வருமானம் கிடைத்தது. "மேகமே நீ எங்கு சென்றாயினும் மழையைப் பொழிந்து விடு. எனக்கு அங்கிருந்து வரி கிடைக்குமென" அவர் மழை மேகத்தைப் பார்த்துக் கூறுவார். இவரது கால நாணயங்கள் ஐரோப்பா கண்டத்திலும், ஆசிய, ஆபிரிக்க கண்டங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- இவரது காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டு குழப்பங்களை அடக்குவதற்காக பர்மகிகள் புதிய உத்தியைக் கையாண்டனர். அவர்களுக்கு எதிராகப் போராடுவதற்குப் பதிலாக சமரசம் செய்து அவர்களைச் சுதந்திரமாக ஆளவிட்டு திறை பெறும் முறையை ஏற்படுத்தினர். இது பிற்காலத்தில் சிற்றரசுகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது என்பர். இத்ரீஸிகளும் அக்லபிகளும் இதனை ஆரம்பித்தனர்.

- இவருக்குப் பின்னர் கலீபா மாமூன் பதவியேற்றார். ஆட்சி செய்வதை விட அறிவாராய்ச்சி யில் ஈடுபடுவது இவருக்கு விருப்பமாக இருந்தது. அமீன் கொலை செய்யப்படும்போது இவர் மெர்வ் நகரில் இருந்தார். கலீபாவான போதும் அவர் பக்தாதுக்குச் செல்லவில்லை. பஸ்ல் பின் ஸஹ்ல் என்ற முதலமைச்சரும், தளபதியுமே பக்தாதில் இருந்து நிருவாகத்தை நடத்தினர். எனினும், அவர்களது நிருவாகம் பக்க சார்பானதாகவும் மக்களின் அதிருப்தி யைப் பெற்றதாகவும் அமைந்தது. ஷாமில் உமையாக்களும் ஹிஜாஸில் அலவியரும் கிளர்ச்சி செய்தனர். பக்தாதில் முதலமைச்சருக்கு எதிரான கிளர்ச்சிகள் வெடித்தன. எனினும், அவை கலீபாவுக்கு அறிவிக்கப்படவில்லை.

- இந்நிலையில் கலீபா தனது மகளை ஷீஆக்களின் இமாமான அலி ரிழாவுக்கு மண முடித்துக் கொடுத்தார். அடுத்த வாரிசாகவும் அவரை நியமித்தார். இது, 'அலவிகளுக்கு ஆட்சியை ஒப்படைக்கப் போகிறார்' என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. இவ்வேளை பக்தாத் நிலைமையை மருமகன் மூலம் அறிந்து பக்தாதுக்குச் செல்ல ஆயத்தமானார். கலீபா பச்சை அங்கியோடு சென்றமை மக்களின் சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. உடனே அப்பாஸியரின் உடையான கறுப்பு அங்கியை அணிந்து கொண்டார். அதிர்ஷ்டவசமாக கலீபாவுக்கு முன்னரே அலி ரிழா மரணமானார்.

- பக்தாதுக்கு வந்தபோது முதலமைச்சர்களின் திருகுதாளங்களை விளங்கிக் கொண்டார். பின்னர் அவர்கள் பதவி இழந்தனர். பக்தாதில் யூத கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய ஷூறா சபையொன்றை அமைத்தார்.

- கலீபா ஹாரூனினால் அமைக்கப்பட்ட தாருல் ஹிக்மாவை விரிவுபடுத்தினார். நூலகமாக மட்டும் பணியாற்றிய அது, பைத்துல் ஹிக்மாவாக விரிவுபடுத்தப்பட்டது. அங்கு பிற மொழியிலான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள் வர்ராக் எனப்பட்ட எழுத்தர்களால் பிரதிபண்ணப்பட்டன. அவை நூலாகக் கட்டப்பட்டு நூலகத்தில் வைக்கப்பட்டன. மொழிபெயர்ப்பாளர்களுக்கு நூலின் பாரத்தினளவு பரிசு வழங்கப்பட்டது. மேற்கிலிருந்து ஐந்து ஒட்டகைகள் சுமக்குமளவு நூல்கள் வரவழைக்கப்பட்டன. ஹுனைன் பின் இஸ்ஹாக் நூலகத்துக்குப் பொறுப்பாக இருந்தார். பைத்துல் ஹிக்மாவின் ஆய்வுப் பிரிவுக்கு தத்துவ அறிஞர் கிந்தி பொறுப்பாக இருந்தார். அல்குவாரிஸ்மி, ஷாக்கிர் குடும்பத்தைச் சேர்ந்த முஹம்மத், அஹ்மத், ஹஸன் என்போர் வானாராய்ச்சிக் கூடத்தில் பணியாற்றினர். பைத்துல் ஹிக்மாவுக்கு வெளியேயும் பல ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டன.

- மறுபக்கமாக செவ்வாய் கிழமைகள் தோறும் நிகழும் தாருல் முனாழரா என்ற விவாத மன்றத்தில் கலீபாவும் கலந்து கொண்டார். சுமார் 40 அறிஞர்கள் கலந்து கொண்ட அம்மன்றத்தில் மு.ஃ.தஸிலாக்கள் காத்திரமான கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருந்தனர். இதனால் கலீபாவுக்கு அவர்கள் மீது கவர்ச்சி ஏற்பட்டது. காலப் போக்கில் கலீபாவும் மு.ஃ.தஸிலாவாக மாறியதோடு, மு.ஃ.தஸிலாக் கோட்பாட்டை அரச கோட்பாடாகவும் பிரகடனப்படுத்தினார். இதனால் உலமாக்களின் எதிர்ப்புக்குள்ளா னார். அதனை எதிர்த்த உலமாக்களைத் தண்டித்தார்; சிறையிலிட்டார். இந்நிலையில் இவர் மரணித்தாலும் தொடர்ந்து வந்த மு.ஃ.தஸிமும் இதே கொள்கையைப் பின்தொடர்ந்தார். கலீபா முதவக்கில் பதவியேற்றபோதுதான் மு.ஃ.தஸிலாக் கோட்பாடு தடைசெய்யப்பட்டது.

- **பிற்பட்ட காலம்**
  - அப்பாஸியர் பதவியேற்று ஒரு நூற்றாண்டு காலத்துக்குள்ளேயே அவர்களின் செல்வாக்கு மங்க ஆரம்பித்தது. அதற்கு அரசியல், சமூகக் காரணிகள் பல காரணமாகின. கலீபா மு.ஃ.தஸிமுக்குப் பின்னர் பதவியேற்ற கலீபாக்கள், கிலாபத்தின் செழுமைக்கேற்ப அரசாட்சியைக் கொண்டு நடத்தும் தகைமையை இழந்திருந்தார்கள். அடிக்கடி அலவியர் போன்ற எதிர்க் குழுக்களால் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டபோது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தனரே தவிர, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. கலீபாக்கள் தமது சுகபோகத்திற்காக ஆட்சியை வைத்துக் கொண்டார் களே தவிர, மக்கள் நலனில் கவனம் செலுத்துவதைக் குறைத்துக் கொண்டார்கள். நிருவாக செயல்பாடுகளில் ஈடுபட்ட அமைச்சர்கள் தளபதிகள், கவர்னர்கள் கலீபாவைப் பெயரளவில் மாத்திரம் வைத்துக் கொண்டு தாங்கள் சுயமாக ஆட்சி நடத்த ஆரம்பித்தனர்.

  - கலீபா மு.ஃ.தஸிம் ஒரு சிறந்த வீரர். அவர் துருக்கிய வீரர்களால் கவரப்பட்டார். பாரசீகப் படையின் கொட்டத்தை அடக்குவதற்காக துருக்கியப் படைப் பிரிவொன்றை உருவாக்கினார். அவர்கள் பக்தாதில் குரூரமாக நடந்துகொண்டனர். எனவே அவர்களுக்காக ஸாமர்ரா நகரை நிர்மாணித்து அவர்களை அங்கு அமர்த்தினார். குறிப்பிட்ட காலம் அது தலைநகராகவும் இருந்தது. துருக்கியர் கலீபாவிடம் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றனர்.

  - கலீபா முதவக்கிலை துருக்கிய படை கொலை செய்தது. தொடர்ந்து வந்த கலீபாக்கள் பலவீனர்களாக இருந்தமையால் ஸ்பானியா, அல்ஜீரியா, தூனீஷியா, எகிப்து, மொரோக்கோ முதலிய பிரதேசங்களில் சுதந்திர ஆட்சிகள் தோன்றின. கலீபாக்களின் பலவீனத்தை அறிந்த அதிகாரிகள் துருக்கியரை அடக்கித் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டனர். அவர்கள் அமீருல் உமரா எனப்பட்டனர்.

- அமீருல் உமராப் பட்டம் பெற்றவர்கள் கிலாபத் நிருவாகத்தைக் கொண்டு நடத்தும் அதிகாரத்தைப் பெற்றனர். இக்காலகட்டத்தில்தான் இதுவரை அமீர் என்ற பெயரிலிருந்த ஸ்பானிய (அந்தலூஸ்) ஆட்சியாளர் தன்னை அமீருல் மு.ஃமினீன் எனப் பிரகடனப்படுத்தினார். எகிப்திய மஹ்தியாவைத் தலைமையகமாகக் கொண்டு பாத்திமிய ஆட்சி இடம்பெற்றது. இக்காலத்தின் பிற்பகுதியில் ஷீஆக்களான புவைஹித்கள் அதிகாரம் பெற ஆரம்பித்தனர். கி.பி. 945ல் அஹ்மத் புவைஹித் அமீருல் உமராவாகப் பதவியேற்றார்.

- இவரது காலம் முதல் புவைஹித்களின் கால கட்டம் ஆரம்பிக்கின்றது. இக்காலத்தில் 8 கலீபாக்கள் ஆண்டனர். ஷீஆக்களான இவர்களுக்கும் எகிப்திய பாத்திமிகளுக்கும் தொடர்பிருந்தது. இதனால் ஷீஆ-ஸுன்னி மோதல்கள் மீண்டும் ஆரம்பித்தன. கலீபா, புவைஹித்களுடன் முரண்பட ஆரம்பித்தார். இச்சந்தர்ப்பத்தில் துருக்கியரான ஸல்ஜுக்கியர் படிப்படியாக கிலாபத்தில் இடம்பிடித்தனர். கலீபா மு.ஃதத்தின் காலத்தில் செல்ஜுக்கியர் தனியாக ஆளும் வன்மையைப் பெற்றனர். இதனால் செல்ஜுக்கியர் காலகட்டம் தோன்றியது.

- செல்ஜுக்கியர் காலத்தில் 12 கலீபாக்கள் ஆண்டனர். இக்காலத்திலேயே முஸ்லிம் களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான சிலுவைப் போர்கள் ஆரம்பித்தன. செல்ஜுக்கியர் பலஸ்தீனைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தபோது, அங்கு வருகின்ற கிறிஸ்தவ யாத்திரீகர்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்தனர். இதனால் கோபமுற்ற கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவத்துக்கு ஆபத்து என மேற்கு நாடுகளில் பிரசாரம் செய்தனர். பாப்பரசர்களும், மேற்கில் காணப்பட்ட அரச தலைவர்களும் அவர்களுக்கு ஆதரவளித்தனர். இதனால் முஸ்லிம்கள் மேற்கத்திய அரசுகளுடன் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறான போராட்டங்கள் முஸ்லிம்களை இராணுவத் துறையில் பலவீனப்படுத்தின.

- இதே நேரத்தில் கிலாபத்தில் தோன்றி வளர்ந்த சிற்றரசுகள் தமக்குள் போட்டியிட்டுக் கொண்டன. ஒன்று மற்றொன்றை விழுங்கப் பார்த்தது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த வெளி அரசுகளுக்கு இது வாய்ப்பாக அமைந்தது. சிற்றரசுகளுக்கு உதவும் வேடத்தில் கிலாபத்துக்குள் நுழைந்தன. வளர்ந்து வந்த மங்கோலியப் பேரரசு முஸ்லிம்களின் ஆள்புலத்தில் தலையிட்டது. 1257 இல் பெரு வெள்ளமாக பக்தாதில் நுழைந்த மங்கோலியர் (தாத்தாரியர்) அப்பாஸிய ஆட்சியை இரத்த வெள்ளத்துக்கு மத்தியில் ஒழித்துக் கட்டினர். ஷாமிலிருந்த முஸ்லிம்கள் மங்கோலியரின் தாக்குதலிலிருந்து தப்பியதால் அவர்கள் மூலம் பின்னர் உஸ்மானிய கிலாபத் உருவாக வழி கிடைத்தது.

- அப்பாஸிய கிலாபத்தின் வீழ்ச்சிக்கு பின்வருவன காரணங்களாக அமைந்தன.
  - பின்வந்த கலீபாக்களின் தகுதியீனம்
  - கலீபாக்களிடம் ஏற்பட்ட பதவிப் போட்டி
  - பொருத்தமற்ற பொழுதுபோக்குகள்
  - துருக்கியரின் செல்வாக்கு
  - சிற்றரசுகளின் தோற்றமும் போட்டியும்
  - நிருவாக ஒழுங்கீனமும் இராணுவப் புறக்கணிப்பும்
  - சிலுவை யுத்தங்கள்
  - பொருளாதாரச் சீர்கேடு
  - மங்கோலியப் படையெடுப்பு

- அப்பாஸியர் காலத்தில் காணப்பட்ட சில சிற்றரசுகள்

| பெயர் | தாபகர் | நாடு | காலம் (ஹிஜ்ரி) |
|---|---|---|---|
| அக்லபி | இப்றாஹிம் பின் அக்லப் | தூனேஷியா | 184 - 296 |
| ஸியாதி | முஹம்மத் பின் ஸியாத் | யமன் | 203 - 402 |
| தாஹிரி | தாஹிர் பின் ஹுஸைன் | குராஸான் | 205 - 225 |
| ஸப்பாரி | ய.ஃகூப் பின் லைஸ் ஸப்பார் | ஈரான் | 259 - 299 |
| அலவிய்யா | ஸைதி அலவி | தபரிஸ்தான் | 250 - 316 |
| பாத்திமி | உபைதுல்லா உபைதி | தூனீஷியா | 296 - 567 |
| ஹம்தானி | அல்துல்லாஹ் பின் ஹம்தான் | மவ்ஸில் | 289 - 389 |
| கஸ்னவி | முஹம்மத் கஸ்னவி | ஆப்கானிஸ்தான் | 351 - 552 |
| ஐயூபி | ஐயூப் | எகிப்து | 564 - 700 |

- **கல்வி கலாசார முன்னேற்றம்**
    - உமையா காலத்தில் அடித்தளமிட்ட கல்வி கலாசார முயற்சிகள் அப்பாஸியர் காலத்தில் பெரு வளர்ச்சி கண்டன. குறிப்பாக பாரசீகருடனான தொடர்பு இதற்குப் பிரதான காரணமாக அமைந்திருக்க முடியும். ஆட்சியில் தமக்குக் கொடுக்கப்பட்ட இடம் அவர்கள் இத்துறையில் ஒத்துழைக்க உந்து சக்தியாக அமைந்தன. அறபு மொழியின் உரைநடை செய்யுள் நடை இரண்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

    - உமையா காலத்தில் மேல்மட்டத்தவர்களுக்கான அல்லது அவர்களைப் பின்னணியாகக் கொண்ட இலக்கியங்களே தோன்றின. ஆனால் அப்பாஸியர் காலத்தில் பொது மக்களுக்காக இலக்கியம் படைக்கப்பட்டது. அபூ நுவாஸ் இதனை ஆரம்பித்து வைத்தார். இப்னு குதைபா தொடர்ந்தார். அறபு மொழியில் வழங்கி வந்த நீண்ட வசனங்களுக்குப் பதிலாக பாரசீக மொழியைத் தழுவி குறுகிய வசனங்கள் இடம்பெற்றன. இப்னு முகப்பஆ, முஹம்மத் பின் யஸார் முதலான இரு மொழிப் பண்டிதர்கள் தமது நூல்களில் இவ்வாறான மொழி நடையைக் கையாண்டனர். (உ-ம்: அதபுஸ் ஸகீர், அதபுல் கபீர், கலீலாவதிம்னா) பாரசீக மொழி தழுவிய கதை நூல்கள் மகாமாத் எனும் பெயரில் தோற்றம் பெற்றன. (மகாமா ஹரீரி) கலீபா மன்ஸூரின் காலத்தில் முத்இம் பின் இயாழ், ஹாரூனின் காலத்தில் அப்பாஸ் பின் அ.ஃழும் போன்ற கவிஞர்கள் அறபு இலக்கியத்தை வளப்படுத்தினர். அபூ நுவாஸ் கம்ரிய்யா, ஹிஜா கவிதைகளில் புதிய உத்திகளைக் கையாண்டார்.

    - பக்தாத், ஸமர்க்கந்து நகர்களில் கடதாசி உற்பத்தி செய்யப்பட்டதால் அதிகமான நூல்கள் தோன்றின. பழமொழிகள், குத்பாக்கள், உபதேசங்கள் எழுத்தில் அமைந்தன. உமையா காலத்தில் ஹதீஸ் தொகுப்பு முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அப்பாஸியர் காலத்தில்தான் அது உச்ச நிலையை அடைந்தது. ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டு பதிவு செய்தல் (முஸ்னத்) என்ற நிலைக்கு அப்பால், ஹதீஸ்களைத் திறனாய்ந்து நூல்களை எழுதும் நிலை வளர்ந்தது. அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் கலைகள் தோன்றின.

    - இவ்வாறே பிக்ஹூம் இக்காலத்தில் தனிக் கலையாக வளர்ந்தது. பிரதான நகர்களிலிருந்த பிக்ஹு வகுப்புக்கள், பிக்ஹு நூல்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தன. பிக்ஹு, மத்ஹப் என்ற நிறுவனத்துக்கூடாக உறுதி பெற்றது. அஇம்மதுல் முஜ்தஹிதீன் எனப்பட்ட பிக்ஹுடைய உலமாக்கள் தோன்றினார்கள். அவர்களுடைய மாணவர்கள் தொடர்ந்து

பிக்ஹை வளர்த்தார்கள். இதில் கலீபாக்களின் பங்களிப்புகளும் காணப்பட்டன. (அரச மதுஹபாகப் பிரகடனப்படுத்தல்) மத்ஹபுகளுக்கேற்ப தனித்தனி மத்ரஸாக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

- தப்ஸீர் தனிக் கலையாக வளர்ந்ததோடு தப்ஸீர் மஃஸூரை விட அதிகமாக தப்ஸீர் மஃகூல்கள் தோன்றின. வெவ்வேறு அறிவியல்துறை சார்ந்த தப்ஸீரும் தப்ஸீரில் இஸ்ராயிலிய்யத்தின் திணிப்பும் இக்காலத்திலேயே ஏற்பட்டன. தஸவ்வுப் இக்காலத்தில் பிரபலமடைந்தது. ஸூபிகள் எனப்பட்ட ஆத்ம ஞானிகள் தோன்றினர். தஸவ்வுப் துறையில் நுழைய விரும்புவோருக்கான பயிற்சிகளும் முறைமையாக அமைந்த தரீக்காக்களும் இக்காலத்திலேயே தோற்றம் பெற்றன.

- அக்லிய்யாக் கலைகளின் விருத்தி இக்காலத்தில் மிக முக்கியமான ஒரு சாதனையாகும். பைத்துல் ஹிக்மாவின் தோற்றம், மொழிபெயர்ப்பு, ஆய்வு முயற்சிகள் மத்திய கால முஸ்லிம்களை அறிவுத் துறையில் உச்ச நிலைக்கு கொண்டு வந்து வைத்தன. முஸ்லிம்களின் ஆய்வுகளும், ஆக்கங்களுமே நவீன காலத்தின் தோற்றத்துக்கு வழிகாட்டின.

- பாரசீகச் செல்வாக்கின் காரணமாக ஓவியம், சிற்பம் போன்ற துறைகள் வளர்ந்தன. அறபு எழுத்தணியில் புதிய எழுத்து வடிவங்கள் தோன்றின. அவை வெவ்வேறு பொருள்களில் (கடதாசி, கம்பளம், சுவரோடு, கட்டடங்கள், உலோகப் பொருள்) பதிவாகின. அறபெஸ்க் எனப்படும் தனியான அலங்கார முறை அறிமுகமானது. பக்தாத் நகரைத் தொடர்ந்து மஹ்திய்யா, ஸாமர்ரா, முஸ்தன்ஸிரிய்யா, முஇஸ்ஸிய்யா முதலான நகர்கள் திட்டமிட்ட முறையில் அழகிய கட்டிடங்கள், வடிவமைப்புகள் தோன்றி வளர்ச்சியுற்றன. சமகாலத்தில் இத்துறையில் பக்தாதுக்கும் கோர்டோவாவுக்கும் விருத்திக்கும் உந்துசக்தியாக அமைந்தது. உமையா காலத்தில் அறபிகள் மட்டுமென்ற நிலை மாறி, எல்லாச் சமூகங்களினதும் பங்களிப்பாக இஸ்லாமிய நாகரிகம் உச்சநிலையை அடைந்தது.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** அப்பாஸிய ஆட்சி பற்றி சுருக்கமாக விளக்கமளியுங்கள்.

**படி II** அவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்ட சந்தர்ப்பமளியுங்கள்.

**படி III** அப்பாஸிய கலீபாக்களில் பின்வருபவர்கள் பற்றிக் கலந்துரையாட மூன்று குழுக்களை அமையுங்கள்.
(1) கலீபா மன்ஸூர்
(2) கலீபா ஹாரூன்
(3) கலீபா மஃமூன்

**படி IV** குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பமளித்து குறைநிரப்புச் செய்யுங்கள்.

**பாடி V** நான் விரும்பிய அப்பாஸிய கலீபா என்ற தலைப்பில் வகுப்பு மன்றத்தில் சொற்பொழிவாற்ற சந்தர்ப்பமளியுங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை**


- செய்யித் இப்றாஹீம், *அப்பாஸிகள் - பாகம் I, II* , சென்னை, வளர்மதி பதிப்பகம்
- அபூபக்ர் ஏ.எம்., (1998), *இஸ்லாமிய வரலாறு, பாகம் 4,* சாய்ந்தமருது, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்

**தேர்ச்சி 9.0 : உமையா அப்பாஸிய ஆட்சிக் காலங்களிலும் அதன் பின்னரும் நிலவிய அரசியல், சமூக, கல்வி, கலாசார முன்னேற்றங்களை விமர்சன ரீதியாக விளங்கி நயப்பார்.**

**தேர்ச்சி மட்டம்9.3:** ஐரோப்பாவில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை அறிந்து விளங்குவார்.

**காலம்** : 35 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- ஐரோப்பாவில் இஸ்லாம் பரவிய பின்னணியை எடுத்துக் கூறுதல்.
- ஸ்பானிய, உஸ்மானிய முஸ்லிம் ஆட்சியின் சாதனைகளை இனங்கண்டு கூறுதல்.
- ஐரோப்பிய எழுச்சியில் இவ்வாட்சிகளின் பங்கை ஆதரத்துடன் நிரூபித்துக் காட்டுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **ஸ்பானியாவில் முஸ்லிம் ஆட்சி**
  - இஸ்லாம் உதயமாகி ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களில் தன் ஒளிக்கதிர்களைப் பாய்ச்சி 90 வருடங்களாகிவிட்டன. அது சர்வதேச நாகரிகம் என்ற வகையில் ஐரோப்பாக் கண்டத்துக்கும் தனது ஒளிக் கதிர்களைப் பாய்ச்ச வேண்டிய தேவையிருந்தது. இதனை நிவர்த்திக்கும் ஆண்டாக ஹிஜ்ரி 92ஆம் ஆண்டு அமைகின்றது. அது ஐரோப்பாவில் இஸ்லாம் அடிவைத்த ஆண்டாகும்.
  - முஸ்லிம்களின் ஆட்சியில் வட ஆபிரிக்கா அமைதியும் வளமும் பெற்று விளங்கியது. வட ஆபிரிக்காவை அண்மித்திருந்த ஸ்பானியாவில் அராஜகம் நிலவி வந்தது. விதிசா என்ற மன்னனை புரட்சி ஒன்றின் மூலம் கொலை செய்வித்த குருமார் கொத் (Goths) இனத்தைச் சேர்ந்த ரோட்ரிக் என்பானைப் பதவியிலமர்த்தினர். அவனது அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகள் குருமாரையும் நிலப் பிரபுக்களையும் தவிர ஏனையோரைப் பாதித்தன.
  - வட ஆபிரிக்க முனையிலிருந்த ஸியூதா என்ற மாகாணம் ஸ்பானியாவின் ஆட்சிக்குட் பட்டிருந்தது. அது ஜூலியன் என்னும் சிற்றரசனால் ஆளப்பட்டது. அவன் கொலை செய்யப்பட்ட விதிசா மன்னனின் மகளை மணந்திருந்தான். இதனால் மாமனது கொலைக்குப் பழிவாங்கும் எண்ணம் அவனுக்கிருந்தது.
  - அதேநேரத்தில் அரச மாளிகையில் தங்கிநின்று படித்துவந்த அவனது மகள், ரொட்ரிக்கினால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாள். ரொட்ரிகை பழிவாங்க வேண்டிய மற்றொரு நிகழ்வாக அது அமைந்தது. மொரோக்கோவில் வட ஆபிரிக்க கவர்னர் மூஸா பின் நுஸைரை சந்தித்த ஜூலியன், ஸ்பானியா மீது படையெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தான்.
  - அதுபோக, மன்னனும் மதகுருமாரும் யூதர்களை வெறுத்தனர். அவர்களைக் கத்தோலிக்கர்களாக மதம் மாறுமாறு வற்புறுத்தி வந்தனர். விரும்பாதோர் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தப்பியோடியோர் பிடிக்கப்பட்டு நிலப் பிரபுக்களின் அடிமைகளாக ஒப்படைக்கப்பட்டனர். இதனைச் சகிக்க முடியா யூதர் பேபர்களுடனிணைந்து புரட்சி செய்ய ஆயத்தமாகினர். சதி முயற்சி வெளியானதால் வட ஆபிரிக்காவுக்குத் தப்பி ஓடினர்.

- ரொட்ரிகின் ஆட்சியில் மத்திய வகுப்பார் கொடுமைப்படுத்தப்பட்டனர். அவர்கள் மீது நியாயமற்ற வரிகள் விதிக்கப்பட்டன. அவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டன. கூலியின்றி வேலை வாங்கப்பட்டனர். இவற்றைச் சகிக்க முடியாதோரும் வடஆபிரிக்காவுக்கு ஓடினர். யூதர், மத்திய வகுப்பார், ஜூலியன் என்போரின் வற்புறுத்தலால் கவர்னர் மூஸா தூண்டப்பட்டார். கலீபாவின் அனுமதியோடு தாரீக் பின் ஸியாத் என்ற இளந் தளபதியை ஜூலியனின் துணைப் படையோடு ஸ்பானியாவுக்கு அனுப்பி வைத்தார்.

- தாரீக் படை ஜிப்ரோல்டர் (ஜபல் அல் தாரிக் என்பதன் மருவிய வடிவம்) நீரிணையைத் தாண்டி ஸ்பானியாவை அடைந்தது. ரொட்ரிக் வடக்கே போராடிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் பார்த்து படையை நகர்த்தினார். ஜஸீரா மாகாணம் அவர் கையில் சிக்கியது. தெலதோ, கோர்டோவா நகர்கள் சரணடைந்தன. கவர்னர் மூஸாவும் மறுபக்கமாக வந்து செவிலியை அடக்கினார். போர்த்துக்கலும் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. இதனை "இளம் பிறைக்கு முன்னே சிலுவை செயலற்று நின்றதாக" வரலாற்றாசிரியர் கிரான்ட் குறிப்பிடுகின்றார்.

- ஸ்பானியா ஹிஜ்ரி 92 முதல் 132 வரை உமையா பேரரசின் ஒரு மாகாணமாகவும் 138 முதல் உமையாக்களின் தனி (இமாரத்) ஆட்சிப் பிரதேசமாகவும் இருந்தது. 317ல் உமையா ஆட்சியாளர் தன்னை அமீருல் மு.ஃமினாகப் பிரகடனப்படுத்தினார். 422ல் அவ்வாட்சி வீழ்ச்சியடைய 898 வரை (கி.பி.1492) சிற்றரசுகள் ஆண்டு வந்தன.

- இமாரத் ஆட்சி நிகழ்ந்த காலத்தில் புதிய சூழலில் புதிய ஆட்சியாளர் எதிர்கொள்ளும் சவால்களை அந்தலூஸ் ஆட்சியாளர்களும் எதிர்கொண்டனர். ஹிஷாம், ஹகம் ஆகியோர் காலங்களில் அறபு மொழிப் போதனையில் கவனம் செலுத்தப்பட்டது. மாலிகி மத்ஹப் சார்ந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இரண்டாவது அப்துர் ரஹ்மானின் தீவிர கிறிஸ்தவ எதிர்ப்புகளை எதிர்கொண்டனர். எனினும், அறிவுத் துறைக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் கோர்டோவா, பக்தாதுக்கு நிகரான நகராக வளர்ச்சியடைந்தது. அது தலைநகராகவும் கலை நகராகவும் காட்சி தந்தது.

- கிலாபத் யுகம் ஆரம்பித்தபோது அது மேலும் வளர்ந்தது. அப்பாஸிய கலீபா பலவீனமுற்று புவைஹித்களிடம் அதிகாரத்தை நகர்த்தியபோது, பாத்திமிகள் எகிப்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தபோது மூன்றாவது அப்துர் ரஹ்மான் தன்னை அமீருல் மு.ஃமினாகப் பிரகடனப்படுத்தினார். இக்காலகட்டத்தில் தேசிய வருமானத்தில் மூன்றிலொரு பங்கு கல்விக்காக ஒதுக்கப்பட்டது. இரண்டாம் ஹகம் அந்தலூசியாவின் மாமூனாகச் செயல்பட்டார். பன்னாட்டு அறிஞர்களைக் கோர்டோவாவுக்கு வரவழைத்தார். கல்லூரிகளையும், நூலகங்களையும் ஏற்படுத்தினார். தனது சகோதரன் முன்ஸிரை கல்லூரிகளின் மேற்பார்வையாளராக நியமித்தார். மற்றொரு சகோதரன் அப்துல் அஸீஸை பிரதம நூலகராக அமர்த்தினார். இவர்களின் காலத்தில் இலவசக் கல்வி வழங்கப்பட்டது. கோர்டோவாவில் நகைக் கடைகளையும் புடவைக் கடைகளையும் விட புத்தகக் கடைகளே அதிகமாகக் காணப்பட்டன. 2000 புத்தகக் கடைகளும் 70 நூலகங்களும் அங்கே காணப்பட்டன. இவற்றுள் உமையா நூலகம் முதன்மை வகித்தது. நல்ல நூல்கள் எங்கு எழுதப்படுகின்றனவோ அதனை விலை கொடுத்து வாங்க அமீருல் மு.ஃமினீன் தயாராக நின்றார். கிதாபுல் அகானி என்ற கீழ்நாட்டில் எழுதப்பட்ட நூலை அங்கு பிரசுரிக்கப்படுமுன், ஆயிரம் தீனார் கொடுத்து அமீருல் மு.ஃமினீன் வாங்கினார். இவ்வாறு கல்வித் துறையில் ஆட்சியாளர் எடுத்த முயற்சி கீழ் மட்டத்தில் வாழ்ந்தவர்களையும் கல்வித் துறையில் நாட்டங் கொள்ளத் தூண்டிக் கொண்டிருந்தது. சாதாரண தொழிலாளர் கூட சொந்த நூலகங்களை வைத்திருந்தனர்.

- கிறிஸ்தவ ஐரோப்பாவில் மதகுருமாரும், மேட்டுக் குடியினரும் மட்டுமே கல்வி பெற, அந்தலூஸியாவில் ஒவ்வொரு குடிமகனும் எழுத, வாசிக்கக் கற்றிருந்தான். கோர்டோவா பல்கலைக்கழகம் ஐரோப்பாவுக்கு கல்வி ஒளியை வழங்கியது. அங்குதான் மொழியியலறிஞர் அபூ அலி அல் காலி, வரலாற்றறிஞர் இப்னு கூதியா, ஹதீஸ்துறை அறிஞர் அபூபக்ர் இப்னு முஆவியா, பிக்ஹுத் துறை அறிஞர் அபூ இப்ராஹீம் முதலானோர் விரிவுரையாளராகப் பணிபுரிந்தனர். விண்ணில் பறப்பதற்கு முதன் முதலாக விஞ்ஞான ரீதியாக முயற்சித்த இப்னு பிர்னாஸ், அறுவை சிகிச்சை நிபுணர் அல் ஸஹ்ராவி, தன்னியக்கக் கடிகாரத்தை உருவாக்கிய அபீதத் போன்றோர் அந்தலூசிய ஆய்வாரளர்களாவர்.

- கோர்டோவா பல்கலைக்கழகத்தின் சிறப்பை அறிந்த ஐரோப்பியர் பிரனீஸ் மலையைத் தாண்டி வர முயற்சித்தனர். அல்பிரட் என்ற துறவி அறபு உடை தரித்து வந்து மற்றோருக்கு வழிகாட்டினார். இவர்கள் அங்கு கற்று வெளியேறும்போது பல நூல்களைக் கொண்டு சென்று மொழிபெயர்த்துப் படித்தனர். அப்போதுதான் மறுமலர்ச்சிக்கான சிந்தனை அவர்களின் உள்ளங்களில் பதிந்தது.

- அறிவுத் துறையில் மட்டுமன்றி வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அவர்கள் உயர்ந்து நின்றனர். விவசாய விருத்திக்காக கால்வாய்களையும் அணைக்கட்டுகளையும் அமைத்தனர். எண்ணெய் ஆலைகளை உருவாக்கினர். கைத்தொழில்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தோல் விரிப்புகள், வண்ணக் கம்பளங்கள், உபகரணங்கள், அஸ்தர்லோப் போன்ற கருவிகள், பீங்கான் பாத்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. துணிகளில் அறபு எழுத்துக்கள் பதிவு செய்யப்பட்டன. அவற்றை அலங்காரச் சித்திரமாகவே ஐரோப்பியர் எண்ணினர். முஸ்லிம்களின் கட்டடக்கலை அங்கு சிறப்புற்று விளங்கியது. மூரிஷ் கட்டடக்கலை எனும் பெயரில் அது வளர்ந்தது. அல் ஹம்றா, அல் கஸ்ர் மாளிகைகள் இன்றும் அவர்களின் சிற்பத் திறனை வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

- சுல்தான் இரண்டாம் ஹகமுக்குப் பின்னர் பலம் பொருந்திய ஆட்சியாளர்கள் இல்லாமற் போயினர். அவரது மகன் பதவியேற்றபோது 11 வயது இளைஞராக இருந்தார். அவ்வேளை செயலாளராக இருந்தவர், முதலமைச்சராகி (ஹாஜிப்) அல் மன்ஸூர் எனும் பெயரில் ஆட்சி நடத்த ஆரம்பித்தார். இவர் அனுபவசாலியாக இருந்தமையால் ஆட்சியை சிறப்பாக நடத்தினார். இவருக்குப் பின்னர் மகன் ஹாஜிபாக பணியாற்றிய போது மக்கள் வெறுப்படைந்தனர். மத்திய வகுப்பார், தொழிலாளர், வியாபாரிகள் ஆகிய யாவரும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இச்சந்தர்ப்பத்தில் வட நாட்டுக் கிறிஸ்தவர்கள் எல்லைப் பிரதேசங்களைக் கைப்பற்ற ஆரம்பித்தனர். ஹாஜிப் குடும்பம் அழிய உமையா ஆட்சியும் முற்றுப் பெற்றது.

- அதன் பின்னர் முலூக்குத் தவாஇப் எனப்பட்ட சிற்றரசுகளின் காலம் ஆரம்பமானது. 23 சிற்றரசுகள் தோன்றி மறைந்தன. வட ஆபிரிக்காவுடன் தொடர்புடைய முராபிதூன்களும் முவஹ்ஹிதீன்களும் இக்காலத்தில் அந்தலூசியாவை சொற்ப காலம் ஆண்டனர். கடைசியாக கிரானடா மாத்திரம் எஞ்சியிருந்தது. இப்னு அஹ்மரின் கலைத் திறனை வெளிக்காட்டிய அல் ஹம்ரா இக்காலத்திலேயே கட்டப்பட்டது. சுற்றியிருந்த கிறிஸ்தவ அரசுகளின் தொடரான படையெடுப்புக்களும், தூண்டிவிடப்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களும் முஸ்லிம்களை அந்தலூசியாவில் வாழ விடாமல் தொல்லை கொடுத்தன. எனவே ஒரு பக்கமாக முஸ்லிம்கள் வெளியேறினர். மறுபக்கமாக முஸ்லிம்கள் துரத்தப்பட்டனர். கடைசியாக ஹி.898ஆம் ஆண்டோடு (1492) அந்தலூசுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

- **வீழ்ச்சிக்கான காரணங்கள்**
    - இரண்டாம் ஹகமுக்குப் பின்னர் தோன்றிய ஆட்சியாளரின் பலவீனம்
    - அதிகாரம் கைமாறியமை (ஹாஜிப் குடும்பத்திற்கு)
    - வட நாட்டுக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருந்தமை
    - பேபர்கள் (வட ஆபிரிக்க) எதிரிகளாக மாறியமை. சிற்றரசுகள் தோன்றியமை
    - பலமான முஸ்லிம் ஆட்சியொன்று பின்னணி சக்தியாக அமைய இல்லாமற் போனமை

- **சாதனைகள்**
    - ஐரோப்பாவில் இஸ்லாமிய சிந்தனையைப் பரப்பியமை
    - முஸ்லிம்களின் அறிவியல் ஆக்கங்கள் ஐரோப்பாவுக்குக் கிடைத்தமை
    - ஐரோப்பிய மொழிகளில் அறபுச் சொற்களும் மொழி மரபுகளும் ஊடுருவியமை
    - மூரிஷ் கட்டடக்கலை தோன்றி வளர்ந்தமை
    - கீழ்நாட்டு வாழ்க்கை முறை மேல் நாட்டில் அறிமுகமானமை
    - மத்திய காலம் நீங்கி, நவீன காலம் தோன்றுவதற்கான அத்திவாரங்கள் இடப்பட்டமை. (சமயப் புரட்சி, பிரான்ஸிய புரட்சி, நாடுகாண் பயணம்)

- **உஸ்மானியர் ஆட்சி**
    - அந்தலூசிய உமையா ஆட்சியை அடுத்து ஐரோப்பாவில் ஆட்சி நடத்திய மற்றொரு இனத்தவர் உஸ்மானிய துருக்கியராவர். நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும் காலத்திலேயே கொன்ஸ்தாந்திநோபிளைப் பற்றி நினைவுபடுத்தினார்கள். அதனை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வருபவருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள். அதனால் அதற்காக நீண்ட காலம் முயற்சிக்கப்பட்டது.

    - துருக்கியர் மத்தியாசியாவில் வாழ்ந்தனர். ஏழாம் நூற்றாண்டில் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பத்தாம் நூற்றாண்டில் அவர்கள் ஈராக், ஈரான் பிரதேசங்களில் குடியேறினர். துருக்கியரின் ஒரு பிரிவான செல்ஜூக்கியர், 11ஆம் நூற்றாண்டில் பெரும் சக்தியாக மாறினர். அப்பாஸிய கலீபாவை தமது கைக்குள் கொண்டு வந்தனர். பைசாந்திய பேரரசின் கீழிருந்த அனடோலியாவையும் கைப்பற்றினர். அப்போதைய சுல்தான் அலப் அர்சலான் என்பவரே அனடோலியாவுக்கு துருக்கி எனப் பெயரிட்டார்.

    - துருக்கியரின் மற்றொரு பிரிவினர் உஸ்மான் என்பாரின் தலைமையில் வலிமை பெற்றனர். இதனால் இவர்கள் உஸ்மானிய துருக்கியர் என பெயர் பெற்றனர். முதலாவது உஸ்மான் பைசாந்தியருடன் போரிட்டு 1326 இல் பூர்ஸாவை வெற்றி கொண்டு உஸ்மானிய அரசைத் தாபித்தார். அவர் வழி வந்தோர் படிப்படியாக எல்லையை விஸ்தரித்துக் கொண்டனர். நீண்ட காலமாக கொன்ஸ்தாந்திநோபிளை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டுமென்ற முஸ்லிம்களின் ஆசை 1453 இல் நிறைவேறுகிறது. இரண்டாவது முஹம்மத் அதனைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். இதனால் முஹம்மத் அல் பாத்திஹ் என முஸ்லிம் உலகினால் பாராட்டப்பட்டார். அது முதல் அந்நகர் இஸ்லாம்பூல் எனப்பட்டது. இதுவே மருவி காலப்போக்கில் இஸ்தம்பூல் என வழங்கி வருகின்றது.

    - உஸ்மானியர் கொன்ஸ்தாந்திநோபிளை வெற்றி கொண்டமை ஒரு வரலாற்று சாதனையாகும். கலீபா முஆவியா (ரழி) அவர்களின் காலம் முதல் அதற்காக முயற்சித்து, ஏழரை நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கைகூடியது. இது சிலுவைப் போருக்குப் பின்னர் முஸ்லிம்களுக்குக் கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும். இதனைத் தொடர்ந்து உஸ்மானியர் தமது ஆட்சியை விஸ்தரித்துக் கொண்டனர். சுல்தான் முதலாவது ஸலீம் 1517 இல் மம்லூக்கியரை வெற்றி கொண்டு எகிப்தையும், சிரியாவையும்

தமதாக்கிக் கொண்டார். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் உஸ்மானியராட்சி வட ஆபிரிக்கா வரை விரிவடைந்தது. எகிப்து, லிபியா, துனேஷியா, அல்ஜீரியா முதலிய நாடுகளும் பஸ்ரா, பக்தாத், மௌஸில் நகர்சார் ஈராக்கிய பிரதேசங்களும், எலப்போ, டமஸ்கஸ் உள்ளிட்ட ஷாம் பிரதேசங்களும் அறேபியாவில் ஹிஜாஸ், யமன், மகாணங்களும் உஸ்மானியராட்சிக்குட்பட்டன. எட்ரியாட்டிக் முதல் போல்கன் வரை அதன் ஆதிக்கம் பரந்திருந்தது. கிரீஸ், அல்பானியா, மெஸிடோனியா, சேர்பியா, பல்கேரியா, யூகோஸ் லாவியா, பொஸ்னியா முதலிய ஐரோப்பிய நாடுகளும் உஸ்மானியராட்சிக்குட்பட்டன. சமகாலத்தில் மிக விரிந்த நிலப் பரப்பை ஆட்சி செய்த பெருமை உஸ்மானியருக்குண்டு. துருக்கிய சுல்தான் பேரரசின் ஆட்சியாளராக மட்டுமன்றி முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவராகவும் கொள்ளப்பட்டார். 1492 இல் ஐரோப்பாவிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய எதிர்ச் சக்திகளுக்கு இது பேரிடியாக அமைந்தது.

- சுல்தான் சுலைமான் (1520-1566) உஸ்மானிய கலீபாக்களில் குறிப்பிடத்தக்கவராவர். அவர் ஆட்சியில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பல்லின மக்கள் வாழ்ந்த பேரரசில் எல்லோரும் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான ஒரு சட்ட யாப்பை உருவாக்கினார். இதனால் அவர் சுலைமான் அல் கானூனி என வழங்கப்பட்டார். அமெரிக்க செனட் சபையில் தொங்கவிடப்பட்டுள்ள சட்டவாக்க அறிஞர்களின் பட்டியலில் அவரது பெயரும் இடம்பெற்றுள்ளது.

- துருக்கிய பேரரசில் இஸ்லாமிய ஷரீஅத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறையே இடம்பெற்றது. ஆயினும் ஏனைய மதத்தவர்கள் தமது உரிமைகளை அனுபவித்து வந்தனர். அவர்களது உரிமைகள் மில்லத் என்ற அமைப்பின் மூலம் பாதுகாக்கப்பட்டன. 1924 இல் கிலாபத் ஒழிக்கப்படும் வரை 38 சுல்தான்கள் ஆட்சி நடத்தினர். ஐந்து நூற்றாண்டுகள் கடக்க அது வீழ்ச்சியை அடைந்தது.

- உஸ்மானியராட்சி ஐரோப்பாவுக்கு சவாலாக அமைந்ததால் அதனை ஒழிப்பதில் தந்திரங்களைக் கையாண்டனர். எதிரிகளை ஆட்சிப் பிரதேசங்களில் ஊடுருவ வைத்தனர். மூளைச் சலவை செய்யப்பட்ட பலரை உருவாக்கினர். ஒவ்வொரு நாட்டிலும் தேசியவாதிகளை உருவாக்கினர். அவர்கள் சுதேசிகளிடம் தேசியவாதத்தைத் தூவினர். எகிப்தில் முஹம்மத் அலி பாச்சா உஸ்மானியருக்கெதிராகச் செயல்பட்டார். ஹிஜாஸில் இப்னு சுஊத் செயற்பட்டார். இவ்வேளை சுல்தான் இரண்டாவது அப்துல் ஹமீத் கிலாபத்தின் ஒருமைப்பாட்டிற்காகப் பெரு முயற்சி செய்தார். எனினும் வெற்றி கிட்டவில்லை. ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மத் அப்துஹு, பதிஉஸ் ஸமான் நூர்ஸி முதலான அறிஞர்கள் கிலாபத்தின் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின. இராணுவ அதிகாரியாக பணியாற்றிய முஸ்தபா கமால் 1924 இல் துருக்கியில் ஜனநாயக ஆட்சியை அறிமுகப்படுத்தினார். உத்தியோகபூர்வமாக கிலாபத்தை ஒழித்துவிட்டதாகப் பிரகடனப்படுத்தினார். இளந் துருக்கிய சமய சார்பற்ற அரசாங்கமாக இயங்க ஆரம்பித்தது. முஸ்தபா கமால் துருக்கிய தேச பிதாவாக - அதாதுர்க் பட்டம் சூட்டப்பட்டார்.

- சில குறைபாடுகள் இருந்த போதிலும் துருக்கிய உஸ்மானியராட்சி இஸ்லாத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்தது. உஸ்மானியரின் எழுச்சிக்கு இஸ்லாமே உந்துசக்தியாக இருந்தது. அவர்களை துருக்கிய இனவாதியாகக் குறிப்பிட்டாலும் அவ்வாறான போக்கைக் காண முடியவில்லை. ஆறு நூற்றாண்டுகள் ஆட்சி செய்தாலும் கூட அவர்கள் அறபு மொழியையே பாடசாலைகளில் போதனா மொழியாக வைத்திருந்தனர். துருக்கிய மொழி ஒரு கிராமிய மொழியாகவே இருந்தது. ஜோன்டன் என்ற பிரான்ஸ் நாட்டவரே துருக்கி மொழியின் இலக்கண விதிகளை நூலாகத் தந்தார். துருக்கியர் தம்மை முஸ்லிம்கள் என்றே இனம் காட்டினர். ஐரோப்பியரே ஒட்டமன், துருக்கியர் என்ற

பிரயோகங்களைப் பயன்படுத்தி வேறுபடுத்திக் காட்டினர். அங்கு மத சகிப்புத் தன்மையும், தாராள மனப்பான்மையும் வளர்ந்து வந்தது. துரதிஷ்டவசமாக இனவாதமும் ஐரோப்பியர்களால் பிரதேசவாதமும் தூண்டப்பட்டன.

- முஸ்தபா கமால் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இஸ்லாமிய சின்னங்களை படிப்படியாக ஒழிக்க முற்பட்டார். துருக்கித் தொப்பிக்குத் பதிலாக ஐரோப்பிய தொப்பியை அணியுமாறு பணித்தார். பெண்கள் முகமூடி அணிவதை தடுத்தார். மத நிறுவனங்களைக் கலைத்தார். அவற்றின் சொத்துக்களை பறிமுதல் செய்தார். அறபு லிபியிலிருந்து துருக்கி மொழி லிபியை லத்தீன் லிபிக்கு மாற்றினார். பெயர்களை அறபு மொழியிலன்றி துருக்கிய மொழியில் வைக்குமாறு கட்டளையிட்டார். அவர் மரணிக்கு முன்பே அவருக்காக சிலை எழுப்பப்பட்டது. 1938 இல் அவர் மரணித்த பின்பும் சிலைகள் எழுப்பப்பட்டுள்ளன.

- உஸ்மானியரின் வீழ்ச்சியால் முஸ்லிம்களுக்கு தலைமைத்துவம் இல்லாமற் போனது. அறபு மொழி செல்வாக்கிழந்தது. இஸ்லாமிய சட்டம் மாற்றப்பட்டது. (உ-ம்: பலதார மணத்துக்குத் தடை, விவாகரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநிலை, வெள்ளிக் கிழமைக்குப் பதிலாக சனி, ஞாயிறு விடுமுறை) முஸ்லிம்களின் ஐக்கியம் குலைந்தது. நூற்றாண்டு காலம் பாதுகாத்து வந்த கிலாபத் நிறுவனம் இல்லாமற் போயிற்று.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி I** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.

**படி II** பின்வரும் தலைப்புகளில் ஸ்பானிய முஸ்லிம் ஆட்சி பற்றி குழுநிலையில் கருத்துப் பரிமாற சந்தர்ப்பமளியுங்கள்.(கற்றல் துணைகளின் உதவியூடாக)

அ) முஸ்லிம்கள் ஸ்பானியாவைக் கைப்பற்றிய சூழ்நிலையும், தேவையும்
ஆ) முஸ்லிம்கள் ஸ்பானியாவை இழந்தமைக்கான காரணங்கள்
இ) துருக்கிய உஸ்மானியராட்சியின் சாதனைகள்
ஈ) உஸ்மானியராட்சி வீழ்ச்சியால் ஏற்பட்ட பாதிப்புகள்.

**படி III** குழுக்களின் கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.

**படி IV** குறைநிரப்புச் செய்து குறிப்பெழுதிக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை


- இப்றாஹீம் செய்யித், (1962), *ஐரோப்பாவில் இஸ்லாம்*, சென்னை, வளர்மதிப் பதிப்பகம்
- இப்றாஹீம் செய்யித்,(1962), *துருக்கி*, சென்னை, வளர்மதிப் பதிப்பகம
- அபூபக்ர் ஏ.எம்., (1968), *இஸ்லாமிய வரலாறு, பாகம் 3*, சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்

**தேர்ச்சி 9.0 : உமையா அப்பாஸிய ஆட்சிக் காலங்களிலும் அதன் பின்னரும் நிலவிய அரசியல், சமூக, கல்வி, கலாசார முன்னேற்றங்களை விமர்சன ரீதியாக விளங்கி நயப்பார்.**

**தேர்ச்சி மட்டம்9.4:** இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை அறிந்து விளக்குவார்.

**காலம்** : 15 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- இந்திய நாகரிகத்துக்கு இஸ்லாம் வழங்கிய பங்களிப்புக்களை இங்கண்டு சொற்பொழிவாற்றுதல்.
- இஸ்லாமிய நாகரிகத்தில் இந்தியச் செல்வாக்கை விமர்சன ரீதியாக முன்வைத்தல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- அறபிகள் தமது தென்கிழக்காசிய கடல் வணிகத்தின் மூலம் இந்தியாவைப் பற்றி அறிந்திருந்தனர். அறபு மக்களின் பேச்சு வழக்கில் இந்தியா பற்றிப் பிரஸ்தாபிப்பது மரபாக இருந்தது. ஜாஹிலிய்யாக் கால கவிஞர் இம்ரஉல் கைஸ் இந்தியாவில் புகழ்பெற்ற கஸ்தூரி பற்றிப் பாடியுள்ளார். பானத் ஸுஆத் பாடிய கஅப் இப்னு ஸுஹைர், நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் இந்தியாவில் செய்யப்பட்ட இலங்கக் கூடிய வாளைப் போன்றவர் என்று வர்ணித்துள்ளார்.

- எனவே, அறபு நாட்டில் இஸ்லாம் அறிமுகமானபோது, இந்தியாவிலும் அறிமுகமாகி விட்டது. அறபு வணிகர்கள் தென்கிழக்காசிய கடல் வணிகத்தில் இலங்கையையும், இந்தியாவின் தென்கரையையும் அதிகமாகப் பயன்படுத்தினர். தென்னிந்தியக் கரைகளில் அறபுகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. நபி (ஸல்) அவர்களின் தோழர்களான தமீம் அல் அன்ஸாரி (ரழி) அவர்களின் அடக்கத்தலம் சென்னைக்கு அருகிலுள்ள கோவனத்திலும், உக்காஸா (ரழி) அவர்களின் அடக்கத்தலம் பறங்கிப் பேட்டையிலும் காணப்படுவதாக மஸ்ஊத் நத்வி குறிப்பிடுகின்றார். இது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தைப் போதிக்க ஸஹாபாக்கள் இந்தியாவுக்கு வந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

- ஆதம் மலையைத் தரிசிக்க வந்த அறபி முஸ்லிம்கள், சேரமான் பெருமான் என்ற இந்திய மன்னனைச் சந்தித்து இஸ்லாத்தை சொல்ல, அவர் இஸ்லாத்தை ஏற்று அப்துர் ரஹ்மான் என்ற பெயரையும் சூட்டிக் கொண்டார். அறபு நாட்டுக்குச் சென்று இஸ்லாத்தைக் கற்று மீளும் வழியில் இறக்க, அவருடன் வந்தவர்கள் கி.பி. 642 இல் ஒரு மஸ்ஜிதைக் கட்டினர். அவருடன் வந்த மாலிக் பின் தீனார் கொடுங்களூரிலும் மாலிக் பின் ஹபீப் கொல்லம் என்ற இடத்திலும் தங்கி இஸ்லாமிய பிரசாரத்தில் ஈடுபட்டதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.

- ஹிஜ்ரி 93 இல் (கி.பி. 712) முஹம்மத் பின் காஸிம் சிந்து நாட்டின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினாலும் அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவில் முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்பட்டிருந்தன. ஹஜ்ஜாஜின் கொடுமையை சகிக்க முடியாத ஹாஷிமிகள் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவின் தென்கரையிலுள்ள கொங்கன், கன்னியாகுமரி பகுதிகளிலும் குடியேறியதாக வரலாறு உண்டு.

- எனினும், அரசியல் ரீதியாக இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியின் தலையீடு ஹி. 93 / கி.பி. 712 இல் தான் ஆரம்பமாகின்றது. இந்திய முஸ்லிம் ஆட்சியைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
    1. உமையா, அப்பாஸிய வம்ச ஆட்சியில் கிலாபத்தின் ஒரு மாகாணமாக இருந்த காலம் (712-856)
    2. ஹப்பாரிகளின் சுயாதீன ஆட்சி நிலவிய காலம் (856-1026)
    3. கஸ்னவிய, கோரிய சிற்றரசுகளின் பகுதிகளாக இருந்த காலம் (1027-1206)
    4. டெல்லி சுல்தானியம் நிலவிய காலம் (1206-1526)
    5. மொகலாயராட்சிக் காலம் (1526-1761)

- **டெல்லி சுல்தானியம் (34 சுல்தான்கள்)**
    - முஹம்மத் பின் காஸிம் சிந்து நாட்டைக் கைப்பற்றியதன் பின்னர், உமையா கலீபா சுலைமான் அவரைத் திருப்பி அழைத்தார். மற்றொருவர் பதில் கடமையாற்றினார். இரண்டாவது உமரின் காலத்தில் கவர்னராக்கப்பட்ட அம்ர் பின் முஸ்லிம் அல் லாஹிரி சமாதான வழியில் த.்.வாவை மேற்கொண்டார். தொடர்ந்து உமையா, அப்பாஸிய காலங்களில் சிந்துப் பிரதேசம் முஸ்லிம் ஆட்சியின் கீழ் இருந்தது. பிற்பட்ட காலத்தில் ஆப்கானிஸ்தானில் தோன்றிய கஸ்னவிய, கோரிய சிற்றரசுகளின் கட்டுப்பாட்டில் அவை வந்தன. கோரி முஹம்மத் இராச புத்திரர்களை வென்று மீண்ட சந்தர்ப்பத்தில் கொலை செய்யப்பட்டார். அவ்வேளை அவரது அடிமையாக இருந்த குத்புத்தீன் ஐபைக் டெல்லியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

    - டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தமையால் அதற்கு டெல்லி சுல்தானியம் எனப் பெயரிடப்பட்டது. அதில்,
        1. ஐபைக் பரம்பரை 1206-1290
        2. கில்ஜி பரம்பரை 1290-1321
        3. துக்லக் பரம்பரை 1321-1412
        4. ஸையித் பரம்பரை 1412-1447
        5. லோடிப் பரம்பரை 1447-1526

        என ஐந்து பரம்பரையினர் ஆட்சி செய்தனர்.

    - இவர்கள், தமது காலத்தில் டில்லி சுல்தானிய்யத்தைப் படிப்படியாக தெற்கு நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தனர். இவ்வேளை மத்தியாசியாவில் தனது ஆட்சியை இழந்த ஸஹீருத்தீன் முஹம்மத் பாபர், இந்தியா மீது படையெடுத்து அவரை எதிர்த்த இப்றாஹீம் லோடியை வெற்றி கொண்டார். இதன் காரணமாக மொகலாயராட்சி ஆரம்பமானது.

- **மொகலாயராட்சி (1526 - 1857)**
    - இந்தியாவில் மொகலாயராட்சியை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம்.
        1. எழுச்சிக் காலம் 1526 - 1707 (ஹி. 932-1117)
        2. வீழ்ச்சிக் காலம் 1707 - 1761

    - மொகலாயராட்சியை தாபித்து ஸஹீருத்தீன் பாபர் (1526-1530) துருக்கியத் தந்தைக்கும், மங்கோலியத் தாய்க்கும் பிறந்தவர். துருக்கிய மொழியில் பாபர் என்பது புலியைக் குறிக்கும். இவர் முதலில் சமர்கந்தின் ஆட்சியாளராக இருந்து அதை இழந்த பின்னர் காபூல் மன்னரானார். அப்போது இப்றாஹீம் லோடியின் ஆட்சியை விரும்பாத இந்து முஸ்லிம் ஆட்சியாளர்கள் இவரை அழைத்தனர். இவர் இப்றாஹீம் லோடியை 1526இல் நடந்த முதலாவது பனிபெட் போரில் தோற்கடித்ததோடு இந்தியாவின் ஆட்சியாளரானார்.

தொடர்ந்து இடம்பெற்ற பல போர்களில் வெற்றி பெற்று ஆள்புலத்தை விரிவாக்கிக் கொண்டார். மேற்கே இந்து முதல் கிழக்கே பீகார் வரையும் வடக்கே இமயம் முதல் தெற்கே குவாலியூர் வரையும் மொகலாயராட்சி விரிவடைந்தது.

- பாபர் தன்னம்பிக்கையுடைய தலைவராகவும், சிறந்த இலக்கியவாதியாகவும், இசைக் கலைப் பிரியராகவும் வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தார். அயோத்தியில் இவரது தளபதி கட்டிய மஸ்ஜித், பாபர் மஸ்ஜித் எனப்படுகின்றது. பாப் நாமா அவரது கால வரலாற்றை எடுத்துக் காட்டுகின்றது. அவர் காலத்தில் பாரசீக மொழி வளர்ச்சியடைந்தது. துருக்கிய மொழியில் படைப்புக்கள் தோன்றின. கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன.

- பாபர் இறக்க அவர் மகன் ஹுமாயூன் (1530-1556) பதவியேற்றார். சிறு வயதிலேயே அறபு, பார்ஸி, துருக்கி மொழிகளைக் கற்றதோடு வேறு பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். இவரது காலத்தில் எழுச்சி பெற்ற சேர்கான் இவரது பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டதாலும், சகோதரர்களின் தலையீட்டினாலும் சிறிது காலம் பின்னடைவு ஏற்பட்டது. 1555 இல் மீண்டும் தன்னை பலப்படுத்திக் கொண்டார். இழந்த பிரதேசங்களை மீட்க ஆரம்பித்தார். 50 வயதில் விபத்துக்குள்ளாகி மரணமானார்.

- இவருக்குப் பின்னர் மகன் ஜலாலுத்தீன் முஹம்மத் அக்பர் (1556-1605) பதவியேற்றார். அவர் 13 வயதுடைய இளவலாக இருந்தமையால் பைரம்கான் என்பார் நிருவாகத்தை நடத்தி வந்தார். இளவல் என்பதால் பலரும் ஆட்சியைப் பிடிக்க முயன்றனர். 1556இல் நிகழ்ந்த பனிபெட் போரின் மூலம் எதிரிகள் தோற்கடிக்கப்பட்டனர். இழந்த பகுதிகளை படிப்படியாக மீட்டு வந்தார். அவருக்கு வெற்றியளித்த நகரத்தை பதஹ்பூர் சிக்ரி என நாமம் சூட்டி முதன்மை நகராக்கினார். இவரது ஆட்சியில் காபூல், லாகூர், முல்தான், டெல்லி, ஆக்ரா, அவத், அலஹபாத், அஜ்மீர், குஜராத், மால்வா, பீஹார், வங்காளம், காந்தேஷ், பிரார், அஹ்மத் நகர், ஒரிஸா, கஷ்மீர் சிந்து ஆகிய பதினெட்டு மாநிலங்கள் காணப்பட்டன.

- இவர் இந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்க புதிய வழிமுறைகளைக் கையாண்டார். அமைச்சரவையில் இந்துக்களை இணைத்தார். இராஜ புத்திரப் பெண்களை மணந்தார். இராஜ புத்திரர்களை தளபதிகளாக நியமித்தார். ஜிஸ்யா வரியை இல்லாமலாக்கினார். இந்து, பௌத்த, சமண, யூத, பார்ஸி, இஸ்லாம் மதங்களைச் சார்ந்த அறிஞர்களை 1582 இல் ஒன்றுகூட்டி ஒரு பொது மதத்தை உருவாக்குமாறு கோரினார். அவர்கள் திருப்தியான பதிலளிக்காதபோது, தீனே இலாஹி என்ற மார்க்கத்தைத் தானே உருவாக்கினார். இதனால் உலமாக்களதும் ஏனையவர்களதும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டார். இந்துக்கள் உடன்கட்டை ஏறுவதைத் தடைசெய்தார். பால்ய விவாகத்தை தடைசெய்து விதவா விவாகத்தை ஊக்குவித்தார்.

- அக்பரின் மரணத்துக்குப் பின்னர் மகன் ஜஹாங்கீர் (1605-1627) பதவியேற்றார். மூதாதையரின் ஆட்சியை பாதுகாக்கும் முயற்சியிலீடுபட்ட ஜஹாங்கீர் பல சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார். கொலை, கொள்ளை, வழிப்பறி நிகழும் ஒதுக்குப் புறங்களில் பள்ளிவாசல்கள், பொதுக் கிணறுகள் போன்றவற்றைக் கட்டி மக்களை நடமாட வைத்தார். சுங்கவரி, இறக்குமதி வரி போன்ற வரிகளைத் தடை செய்தார். தனிநபர்கள் ஸகாத் வசூலிப்பதையும் தடுத்தார். இசையிலும் கலைகளிலும் ஆர்வம் கொண்ட இவர், எல்லாக் கலைஞர்களையும் வரவேற்றார். அழகிய கட்டடங்களைக் கட்டுவித்தார். ஓவியங்களைத் தீட்டுவித்தார். வண்ணந் தீட்டும் கலையிலும் பாரசீக மொழியிலும் திறமை பெற்றிருந்தார். வாரிசின்றி மரணிக்கும் செல்வந்தர்களின் சொத்துக்களை அரசாங்கம் சுவீகரித்து, பிரதேச கல்வி நிலையங்களின் வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்தும் முறையினை அறிமுகப்படுத்தினார். டில்லி ஜாமிஆ மஸ்ஜிதுக்கு அருகே மத்ரஸா ஒன்றை நிறுவினார்.

- இவரது காலத்தில் புடைவைக் கைத்தொழில், உலோகத் தொழில், கப்பல் கட்டுதல், தோல் பதனிடுதல், காகித, சீனி உற்பத்தி ஆலைகள் தொடங்கப்பட்டன. குடிசைக் கைத்தொழில்களுக்கும் ஊக்குவிக்கப்பட்டது. கார்கானா எனப்படும் தொழிற்கூடங்களில் அன்பளிப்புப் பொருள்கள் தயாரிக்கப்பட்டன. அவை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. தென்னாபிரிக்கா, மத்திய கிழக்கு, பர்மா, மலேசியா, ஜாவா முதலிய நாடுகளுடன் வர்த்தக ஏற்று இறக்குமதி தொடர்புகள் இருந்தன.

- இவரது காலத்தில் இந்தியாவுக்கு ஆங்கிலேயர் வந்தனர். அவர்கள் வணிக நிலையங்களை உருவாக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள் படிப்படியாக அரசியல் நிருவாகத்திலும் தலையிட ஆரம்பித்தனர்.

- ஜஹாங்கிருக்குப் பின்னர் அவர் மகன் ஷாஜஹான் (1627-1657) ஆட்சிக்கு வந்தார். இவரே தனது காதல் மனைவிக்காக தாஜ்மஹாலை அமைத்தவராவார். யமுனா நதிக் கரையில் ஆக்ராவில் அது கட்டப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கட்டடக்கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். வண்ணக் கற்களும் சலவைக் கற்களும் இறக்குமதி செய்யப்பட்டன. 20 ஆண்டுகள் இரவு பகலாக உழைத்து அக்கட்டடம் எழுப்பப்பட்டது. அதன் கதவிலும் வெளிச் சுவர்களிலும் இந்திய, வெளிநாட்டு மணிக்கற்கள் பதிக்கப்பட்டன. அமானத் கான் என்ற பாரசீக ஓவியரால் அல்குர்ஆன் வசனங்கள் சுவர்களில் எழுதப்பட்டன. இந்தியாவில் வர்த்தகம் செய்த ஆங்கிலேயரும் போர்த்துக்கேயரும் போரிட்டுக் கொண்டனர். கோபமுற்ற கலீபா அவர்களுக்கெதிராகப் படையெடுத்துச் சென்றார். அவர்கள் மன்னிப்பு கோரினர். இவரது காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. வருமானம் உயர்ந்தது. பொருளாதாரம் உச்ச நிலையை அடைந்தது. வரி விதிக்காமலே மக்கள் ஆளப்பட்டனர். இவரது காலத்தில் மகன் தாரா ஷெய்கோ மும்மொழி (அறபு, பார்ஸி, சமஸ்கிருதம்) வித்தகராக வாழ்ந்தார். இந்து-இஸ்லாம் சமயங்களை இணைத்து மஜ்மஉல் பஹ்ரைன் என்ற நூலை எழுதினார். ஆக்ராவிலிருந்து தலைநகரை மாற்றக் கருதி பெருஞ் செலவு செய்து ஷாஜஹானாபாத்தை உருவாக்கினார். இதுவே இன்றைய புதுடில்லியாகும். இந்தியாவில் பிரமாண்டமான ஜும்ஆ மஸ்ஜிதும் இவர் காலத்திலேயே கட்டப்பட்டது.

- இவரையடுத்து ஔரங்கஷீப் (1658-1707) ஆட்சியாளரானார். பதவியேற்ற நாள் முதல் போராடிக் கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவருக்கேற்பட்டது. முதல் 25 வருடங்களை அக்பரால் முன்மொழியப்பட்ட மாற்றங்களை திருத்தியமைக்கும் காலமாகச் செலவிட்டார். அடுத்த 25 வருடங்களும் குழப்பக்காரர்களை அடக்குவதில் கழிந்தன.

- முதலில் அக்பர் உருவாக்கிய தீனே இலாஹியை ரத்துச் செய்தார். இந்தியாவை தாருல் இஸ்லாமாகப் பிரகடனப்படுத்தினார். இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியைத் தாபிப்பது கஷ்டமாக இருந்தாலும் அவர் அந்த முயற்சியில் இறங்கினார். அவர் இந்துக்களை எதிர்க்கவில்லை. முரண்பாடுகளைத் தவிர்க்கும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். கோயில்களுடன் இணைத்துப் பள்ளிவாசல் கட்டுவதைத் தடுத்தார். பகிரங்கமாக இசை, மதுப் பயன்பாடுகளைத் தடைசெய்தார். பாமினி அரசை வெற்றி கொண்டபோது தமக்கு ஆபத்து வருமென மராட்டியர் அஞ்சினர். அவர்களது கிளர்ச்சியை அடக்குவதற்காக தலைமை தாங்கிய சிவாஜியைக் கைதுசெய்தார். அவர் தப்பிச் சென்று ஔரங்கஷீப் இந்துக்களின் எதிரி எனப் பிரசாரம் செய்தார். உடன்கட்டையேறும் வழக்கத்தைத் தடைசெய்ததால் இராச புத்திரரர்கள் கிளர்ச்சி செய்தனர். தக்கணத்தை வெற்றி கொண்டதால் மகாராஷ்டிரர்கள் குழப்பம் செய்தனர்.

- இவரது ஆட்சி காபூலிலிருந்து சிட்டகோன் வரையும் இமயத்திலிருந்து காவிரி வரையும் பரந்திருந்தது. ஔரங்கஷீப் அழகான கையெழுத்துடையவர். அவர் கைப்பட எழுதிய அல்குர்ஆன் பிரதிகளை விற்றே வாழ்க்கை நடத்தினார். பரந்த பேரரசை ஆண்ட அவர் எளிமையான வாழ்வை மேற்கொண்டார். இவர் கைப்பட பார்ஸியில் எழுதிய கடிதங்கள்; ராக்கத், ஆலம்கீரி; எனப்படுகின்றது. இவரது காலகட்டத்தில் தொகுக்கப் பட்ட சட்டத் தொகுப்பு; பதாவா ஆலம்கீரி; எனப்படுகிறது. முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் இவரது காலத்தைப் பாராட்டிப் பேசுவர்.

- தனக்குப் பின் யார் ஆள வேண்டுமென்பது பற்றி அவர் உயில் எழுதிச் சென்றாலும் பிள்ளைகள் அதனை நிறைவேற்றவில்லை. 1707 இல் பதுர் ஷா 1712 முஹம்மத் ஷா 1713 இல் பாரூக் ஷா என ஒருவர் பின் ஒருவர் ஆண்ட போதிலும் பழம் பெருமையை மீட்ட முடியவில்லை. 1739 இல் ஈரானிய நாதிர் ஷா டெல்லிக்குப் படையெடுத்தார். எதிர்கொள்ள முடியாத மொகலாயர் சமாதானத்துக்கு உடன்பட்டனர். எனினும், ஈரானிய படையெடுப்புக்கள் தொடர்ந்து கொண்டே இருந்தன. கடைசியாக 1761 இல் இடம்பெற்ற பனிபெட் போரோடு மொகலாய ஆட்சி முற்றுப் பெற்றது.

- பாபரும் அவரது சந்ததியும் சுமார் 325 ஆண்டுகள் இந்தியாவை ஆட்சி செய்தார்கள். அவர்களது காலத்தில் பார்ஸி மொழி அரச மொழியாக இருந்தது. கல்விப் போதனை களும் அம்மொழிலேயே இடம்பெற்றது. முன்னர் சங்கத (சமஸ்கிருதம்) மொழி பெற்ற இடத்தை பார்ஸி மொழி பெற்றுக் கொண்டது. ஆதலால் இந்துக்களும் அம்மொழியைக் கற்றனர். சிலர் சங்கத மொழியிலான நூல்களை பார்ஸியில் பெயர்த்தனர். பொதுவாக ஏனைய மொழிகளும் வழக்கத்திலிருந்தன.

- ஆரம்பக் கல்வி மக்தபுகளிலும் மத்ரஸாக்களிலும் வழங்கப்பட்டது. பள்ளிவாசல்களில் உயர்கல்வி வழங்கப்பட்டது. உயர்கல்விக்கான கல்லூரிகளும் இருந்தன. சிந்து, லாகூர், டெல்லி பகுதிகளில் புகழ்பெற்ற மத்ரஸாக்கள் காணப்பட்டன. ஆக்ரா உயர்கல்வி வழங்கும் நகராக இருந்தது.

- பாபரும் அவர் மகன் ஹுமாயூனும் இலக்கிய ஆர்வலர்களாக இருந்தனர். பாரசீக, துருக்கிய, அறபு மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஹுமாயூன் டெல்லியில் கல்லூரி ஒன்றையும் நூலகம் ஒன்றையும் நிறுவினார். டில்லி, அலகபாத், அஹ்மதாபாத், சூரத், ஔரங்கபாத் ஆகிய இடங்களில் தனியார் கல்லூரிகள் நிறுவப்பட்டிருந்தன. அக்பர் காலத்தில் எல்லா மொழிகளிலுமான 24000 நூல்களைக் கொண்ட ஒரு நூலகம் உருவாக்கப்பட்டது. மொகலாயர்கள் அறபுகளாக இல்லாவிட்டாலும் அறபு மொழியில் நூல்கள் வெளியாகின. அல்பிரூனி என்ற அறிஞர் இந்திய வரலாற்றை முதன் முதலாக ஆய்வுக் கண்ணோட்டத்தில் எழுதிய கிதாபுல் ஹிந்த் எனும் நூல் அறபு மொழியிலேயே எழுதப்பட்டது. தக்கணத்தில் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட அறிஞர்களை ஆசிரியர்களாகக் கொண்ட அறபுக் கல்லூரிகள் இருந்தன. அன்று சங்கத, ஹிந்தி மொழிகளும் வளர்க்கப்பட்டன.

- மொகலாய ஆட்சிக்காலம் இந்தியாவைக் கலைவடிவமாக எடுத்துக் காட்டியது. ஒவ்வோர் ஆட்சியாளரும் ஏதாவதொரு கவின் கலையில் ஆர்வமும் தேர்ச்சியுமுடைய வராகக் காணப்பட்டார்.ஆக்ரா, பதஹ்பூர், புதுடில்லி முதலிய நகர்களில் கலை நிரம்பி வழிந்தது. ஈரானிய இசையும் இந்திய இசையும் சங்கமித்து புதிய இராகங்கள் தோன்றின. பாரசீக, சீன ஓவியக் கலைகள் இந்திய ஓவியத்தோடு கலந்து பரிணாமம் பெற்றன. அக்பர் இயற்கைக் காட்சிகளை தாமே வடித்தார். காபூல் பூங்கா, நசீம் பூங்கா, நிசாத் பூங்கா, வெரினா பூங்கா என அழகிய விரிந்த பூங்காக்கள் நிறைய அமைக்கப்பட்டன. மொகலாயர் தோட்டங்களை உருவாக்கி நகர மேனிக்கு பச்சைப்பட்டாடை அணிவித்தனர்.

ஆக்ரா, டெல்லி முதலிய நகர்கள் அழகிய கட்டடங்களால் நிறைந்து காணப்பட்டன. ஒவ்வோர் ஆட்சியாளரும் தம்மை நினைவூட்டும் வகையில் கட்டடங்களை நிர்மாணித்தனர். செங்கோட்டை, குதுப் மினார், தாஜ்மாஹால், டெல்லி ஜாமிஆ மஸ்ஜித் முதலான கட்டடங்கள் மொகலாயக் கட்டடக் கலையின் சின்னங்களாகக் காட்சி தருகின்றன.

- இந்தியாவைப் பொறுத்தவரை வட இந்தியாவில் படையெடுப்புக்கள் மூலமாகவும், தென்னிந்தியாவில் அறபு வணிகத் தொடர்பு மூலமாகவும் இஸ்லாம் பரவியது. இந்தியாவில் இஸ்லாம் பரவுவதற்கு ஆட்சியாளர்களை விட ஸூபிகளின் பணியே முதன்மையானது. இவர்களுள் காஜா முஈனுத்தீன் ஜிஸ்தி (ரஹ்) (கி.பி. 12ம் நூற்றாண்டு) சிறப்பானவர். இவர் லாகூர், டில்லி, அஜ்மீர் பிரதேசங்களில் இஸ்லாத்தைப் பரப்பினார். ஸுல்தானுல் ஹிந்த் என அவர் பாராட்டப்பட்டார். அடுத்து செய்கு நிஸாமுத்தீன் டில்லியை மையமாகக் கொண்டு த.்.வாப் பணியில் ஈடுபட்டார். அவரது சீடர்கள் குஜராத்திலும், வங்காளத்திலும் பிரசாரப் பணியில் ஈடுபட்டனர். தென்னிந்தியாவிலும் சூபிமகான்களின் பணிகள் இஸ்லாத்தின் பரம்பலுக்குக் காரணமாக அமைந்ததை மறுக்க முடியாது.

- “இஸ்லாமும் வடமேற்கு பகுதியிலிருந்து படையெடுத்து வந்த மக்களும் இந்தியாவில் ஏற்படுத்திய செல்வாக்கு கணிசமானது. அது இந்து சமூகத்தில் புகுந்திருந்த சாதிப் பாகுபாடு, தீண்டாமை போன்றவற்றின் தீய விளைவுகளை மக்களுக்கு உணர்த்தியது. இந்து சமூகத்தில் எந்த சமூக உரிமையுமின்றி வாழ்ந்த மக்களை இஸ்லாமிய சகோதரத்துவ கோட்பாடு பெருமளவு கவர்ந்தது.” இவ்வாறு ஜவஹர்லால் நேரு தனது Discovery of India எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

- இந்தியாவில் சுமார் 8 நூற்றாண்டுகள் முஸ்லிம் ஆட்சி நிகழ்ந்தாலும் ஆட்சியாளர்களிடம் இஸ்லாம் பிரதிபலிக்காமையாலும் அறபிகளின் தொடர்பு (வந்தவர்கள் அஜமிகள்) அற்றுப் போனதாலும் முஸ்லிம் நாடாக தொடர்ந்திருக்க முடியவில்லை. ஆட்சியாளர் நிலம், ஆட்சி, செல்வம் என்பவற்றையே இலக்காகக் கொண்டிருந்தனர். இவ்வாறு மஸ்ஊத் நத்வி குறிப்பிடுகிறார்.

- இந்தியாவுக்கு முஸ்லிம்களளித்த மிக முக்கிய பங்களிப்பு ஏகத்துவ சிந்தனையாகும். அதன்வழி அது முன்வைத்த சமத்துவ சகோதரத்துவ சிந்தனைகள் குலபேத சிந்தனையைப் பலவீனப்படுத்தின.

- எனவே முஸ்லிம்கள்,
  - இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் ஆள்வதற்கு வழிகாட்டினர்.
  - பிராமணிய மரபுகளை ஒழிக்க முயற்சித்தனர்.
  - உருது மொழி உருவாகக் காரணமாக அமைந்தனர்.
  - மொகலாயக் கலை என்று ஒரு கலையை வழங்கினர்.
  - இந்திய கலாசாரத்தில் இஸ்லாமிய பண்பாடுகளைப் புகுத்தினர்.
  - பாகிஸ்தான், வங்காளாதேசம், கஷ்மீர் போன்ற நாடுகளையும் பெருந் தொகையான இந்திய முஸ்லிம்களையும் பரம்பரையாக விட்டுள்ளனர்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

**படி II** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து கற்றல் துணைகளை வழங்குக.

**படி III** பின்வரும் தலைப்புக்களில் குழுக் கலந்துரையாடல்களை நடத்த வழிப்படுத்துக.

அ) இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமான காலமும், பின்னணியும்

ஆ) இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி - மொகலாயர் வீழ்ச்சியடையும் வரை

இ) இந்தியாவுக்கான முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புக்கள்

ஈ) இந்திய முஸ்லிம்களின் கலாசாரமும் இலங்கை முஸ்லிம்களின் கலாசாரமும் இணைதல்

**படி IV** குழுக்களின் கருத்துக்களை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

**படி V** குறைநிரப்புச் செய்து குறிப்புக்களை எழுதிக்கொள்ள இடமளியுங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை


- செய்யித் இப்றாஹீம், *(1962)அப்பாஸிகள் - பாகம் I, II* , சென்னை, வளர்மதி பதிப்பகம்
- • இப்றாஹீம் செய்யித், (1962), *இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி*, சென்னை, வளர்மதிப் பதிப்பகம

**தேர்ச்சி 10.0 : இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமாகன பின்னணியை விளங்கி, நாட்டின் கலாசாரத்தில் முஸ்லிம்கள் ஏற்படுத்திய தாக்கங்களை இனங்கண்டு, முஸ்லிம்களுள் பங்களிப்புக் களை விளங்குவார்.**

**தேர்ச்சி மட்டம்10.1:** இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை அறிந்து விளக்குவார்.

**காலம்** : 20 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள்** :

- அறபு வர்த்தகர்கள் நாடு பிடிக்கும் ஆசையிலன்றி வர்த்தக நல்லுற வைப் பேணும் வகையிலேயே இலங்கைக்கு வந்தனர் என்பதை உணர்ந்து கொள்ளுதல்.
- இலங்கைக்கும் அறேபியருக்கும் இடையிலான தொடர்பு வரலாற்றுத் தொன்மை வாய்ந்தது என்பதை விளங்கிக் கொள்ளுதல்.
- இந்த உறவினாலும் தொடர்பினாலும் எத்தகைய விளைவுகள் உண்டாயின என்பதை அறிந்து கூறுதல்.
- எத்தகைய ஒரு காலப்பிரிவில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுக மாகியது என்பதைக் கணித்து அறிந்து கொள்ளுதல்.
- முஸ்லிம்களின் ஆரம்பகாலக் குடியேற்றங்கள் பற்றி அறிதல்.
- சிங்கள மன்னர் காலத்திலும் ஐரோப்பியர் காலத்திலும் சுதந்திரத் துக்குப் பின்னரும் நம் நாட்டு முஸ்லிம்கள் தமது கலாசாரத் தனித்து வத்தை எவ்வகையில் பேணிப் பாதுகாத்து வந்தனர் என்பதை அறிந்துகொள்ளுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- இலங்கைக்கும் அறபுகளுக்கும் இடையிலான உறவு.
- அறேபியர் இலங்கைக்கு வந்தமைக்கான காரணிகள்.
- அறேபியரது வர்த்தகப் பாதையின் மையத்தில் இலங்கை அமைந்திருந்தமை.
- அவர்களுக்குத் தேவையான வர்த்தகப் பொருட்கள் இங்கு தாராளமாகக் கிடைத்தமை.
- பருவக் காற்றின் சாதகமான நிலையும் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கு கொழும்புத் துறைமுகங்கள் வாய்ப்பாக அமைந்தமையும்.
- பாவாதமலையை (Adams Peak) தரிசிக்க விரும்பியமை.
- பாரசீகருடன் அறபுகள் செய்து வந்த நீண்டகால கடல் மார்க்க வர்த்தகத் தொடர்பு, தென்கிழக்காசிய நாடுகளுக்கும் பிரயாணம் செய்ய உதவியமை.
- பாரசீகரது வீழ்ச்சிக்குப் பின்னர் (கி.பி. 4ஆம் நூற்றாண்டு) அறேபியர் போட்டியின்றி தென்கிழக்காசிய நாடுகளுடன் கடல் வர்த்தகம் செய்த அதேவேளை இலங்கைக்கும் வந்துபோனமை.

- நம்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான பொருட்களையும் வழங்கியமை.

- நம்நாட்டின் கரையோரங்களில் குடியேறி வாழ்ந்த அரேபியர், கப்பல்களைப் பழுதுபார்த்தல், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடல் முதலான பணிகளிலும் ஈடுபட்டமை.

- பருவப் பெயர்ச்சிக் காற்று தமது பயணத்துக்கு சாதகமாக அமையும் வரை இலங்கையில் தங்கியிருந்த காலங்களில் இந்த நாட்டின் சுதேச மக்களோடு நல்லுறவை வளர்த்துக் கொண்டமை.

- **இஸ்லாம் அறிமுகமாதல்**
  - சீன நாட்டு மன்னனுக்கு இஸ்லாத்தின் தூதைச் சுமந்து சென்ற வஹ்ப் பின் அபீ ஹப்ஸா எனும் நபித்தோழர் இலங்கை மன்னனுக்கும் இஸ்லாத்தின் தூதை எடுத்து வந்தார்.

  - தென்னிந்தியாவிலுள்ள கோவளத்திலும், பறங்கிக் கோட்டையிலும் நபித்தோழர்களான தமீம் அன்ஸாரி, உக்காஸா போன்றோரின் அடக்கஸ்தலங்கள் அமைந்துள்ளன.

  - இப்னு ஷஹ்ரயார் எனும் வரலாற்றாசிரியர் அஜாஇபுல் ஹிந்து எனும் தனது நூலில் அறபு நாட்டில் இஸ்லாம் அறிமுகமாகியுள்ள செய்தியை அறிந்து இலங்கை மன்னன் தூதர்களை அனுப்பி வைத்தான். தூதர்கள் கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் மதீனாவை அடைந்து உண்மையைத் தெரிந்து வந்தனர் என்று குறிப்பிடும் வரலாற்றுச் சம்பவமும் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமானதைத் தெரிந்துகொள்ளத் துணை செய்தது.

  - வியாபாரத்துக்காக வந்த அரேபியர் துறைமுக நகர்களில் தங்கி வாழ்ந்தபோது சுதேசப் பெண்களைத் திருமணம் செய்தனர்.

  - இலங்கைக்கு வந்த அறபு வியாபாரிகளின் நற்பண்புகளும், பழக்க வழக்கங்களும் இஸ்லாம் பரவக் காரணமாயின.

  - இதனால் இலங்கையில் முஸ்லிம் சமூகமொன்று உருவாகியது.

  - அறபு ஆண்களையும் பெண்களையும் கொண்ட முஸ்லிம் குடும்பங்கள் சிலவும் இலங்கையில் வாழ்ந்தன.

  - சிந்துப்பிரதேசம் முஸ்லிம்களால் கைப்பற்றப்படுவதற்குக் காரணமாக அமைந்த நிகழ்வும் அறபுக் குடும்பங்கள் இலங்கையில் குடியிருந்தமையை எடுத்துக் காட்டுகின்றன.

  - உமையாக் கலீபாக்களான அப்துல் மலிக் (685-705), வலீத் 705-715) காலங்களில் கவர்னர் ஹஜ்ஜாஜின் கொடுமைக்கு அஞ்சி சில ஹாஷிமீக்கள் இலங்கையில் வந்து குடியேறினர் எனும் மரபுவழிச் செய்தி ஒன்றை அலக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடுகிறார்.

- கிலாபத் காலங்களில் இஸ்லாத்தைப் பிரசாரம் செய்யவென போதகர்கள் அனுப்பப்பட்டனர்.

- அப்பாஸிய கலீபா ஹாரூன் ரஷீதினால் அனுப்பி வைக்கப்பட்ட காலித் பின் பகாயாவின் கல்லறை நடுகல் (Stone) கொழும்பில் கண்டெடுக்கப்பட்டது.

- **இலங்கையில் முஸ்லிம்கள் வரலாறும் கலாசாரமும்**
  - இஸ்லாத்தின் தோற்ற காலம் முதற்கொண்டே இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகி வளர்ச்சி கண்டிருந்ததனால், இலங்கையின் பிரதான நகர்களில் எல்லாம் -(குறிப்பாக கரையோர நகர்களில்) முஸ்லிம் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றிருந்தன.

  - இவ்வாறு குடியிருப்புக்கள் தோற்றம் பெற்ற காலம் தொட்டே இலங்கை முஸ்லிம்கள் தமது கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணி பாதுகாத்து வந்துள்ளனர்.

  - இவர்கள் தமது குடியிருப்புப் பிரதேசங்களில் மஸ்ஜித்களை நிறுவி தமது மார்க்கக் கடமைகளை நிறைவேற்றியதோடு, தமது குடும்ப, சமூக, வர்த்தக ரீதியான நடவடிக்கைகளை இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு முரணாகாத வகையில் அமைத்துக் கொண்டனர்.

  - இதனால் முஸ்லிம் குடியிருப்புக்கள், அவற்றுக்கான பிரதேசவாரியான முஸ்லிம் தலைமை, தலைமைக்கான அதிகாரம், அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான அனுமதி என சமூகம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

  - முஸ்லிம்கள் தமது கலாசாரத் தனித்துவத்தை பேணி வாழ்ந்த அதேவேளை, சுதேச மக்களுடனும் சிநேகபூர்வ உறவைப் பேணி வந்தனர்.

  - இதனால் சிங்கள மன்னர்களின் அரவணைப்பும் ஆதரவும் கிடைத்தன. நாட்டின் அரச விவகாரங்களிலும், ஏற்றிறக்குமதி வர்த்தகத்திலும் முஸ்லிம்கள் முக்கிய பங்கு வகித்தனர்.

  - ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் போர்த்துக்கீச, ஒல்லாந்தர் காலங்களில் கரையோர நகர்களில் வாழும் வாய்ப்பை முஸ்லிம்கள் இழந்ததால், நாட்டின் உட்பிரதேசங்களிலும் கண்டிய மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும் குடியேறி வாழ்ந்து வரலாயினர்.

  - இக்காலங்களில் முஸ்லிம்களது கலாசார அடையாளங்களாகத் திகழ்ந்த மஸ்ஜித்கள், மக்தப்கள் முதலானவை போர்த்துக்கீசராலும் ஒல்லாந்தராலும் அழித்தொழிக்கப்பட்டன. அவர்கள் முஸ்லிம்களது வர்த்தக முயற்சிகளுக்குக் கூட கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர்.

  - இந்நிலை சுமார் மூன்று நூற்றாண்டுகள் நீடித்ததால் முஸ்லிம் சமூகத்தின் கலாசாரப் பாரம்பரியங்களின் வளர்ச்சி பதிப்புக்குள்ளாகியது.

  - பின்னர் வந்த ஆங்கிலேயரின் தாராண்மைக் கொள்கை, முஸ்லிம்கள் மீண்டும் கரையோர நகர்களில் குடியேறி வாழத் துணை செய்தது.

  - இதன் விளைவாக நாட்டின் தேசிய இனங்களோடு சேர்ந்து, சுதந்திரத்துக்காக உழைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

- நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தேசிய அரசுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி, தமது தனித்துவங்களைக் காத்துக்கொள்வதற்கான உரிமைகளையும் சந்தர்ப்பங்களையும் பெற்றுக் கொண்டனர்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான பின்னணியை சுருக்கமாக எடுத்துக் கூறுங்கள்.

**படி II** தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.

**படி III** பின்வரும் தலைப்பில் விவாதமொன்றை ஒழுங்குசெய்யுங்கள்.
- இலங்கைக்கு இஸ்லாம் அறபு நாட்டிலிருந்து வந்ததா?
- தென்னிந்தியாவிலிருந்து வந்ததா?

**படி IV** விவாதத்தில் இடம்பெற்ற கருத்துக்களை குறைநிரப்புச் செய்யுங்கள்.

**படி V** முக்கியமான கருத்துக்களைத் தொகுத்தெழுத வழிப்படுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை**


- *இலங்கையில் இஸ்லாம் மொடியூல் 219314*, இஸ்லாம் ஆசிரியர் கல்விப் பாடநெறி, தேசிய கல்வி நிறுவகம்
- அமீன் எம்.ஐ.எம்., (2008), *முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல், அழகியற் கலைகள்,* ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம், 2008
- *இஸ்லாம் தரம் 11* (2000), இலங்கை, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- அமீன். எம்.ஐ.எம்., (2000), அல்ஹஸனாத், *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்*

**தேர்ச்சி 10.0** : **இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமாகன பின்னணியை விளங்கி, நாட்டின் கலாசாரத்தில் முஸ்லிம்கள் ஏற்படுத்திய தாக்கங்களை இனங்கண்டு, முஸ்லிம்களுள் பங்களிப்புக் களை விளங்குவார்.**

**தேர்ச்சி மட்டம்10.2:** இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புகள் பற்றி அறிந்து விளக்குவார்.

**காலம்** : 20 பாடவேளைகள்

**கற்றல் பேறுகள் :**

- இலங்கை முஸ்லிம்கள் சுதேசிகளேயன்றி வந்தேறு குடிகளல்லர் என்பதை விளக்குதல்.
- சுதந்திரத்துக்கு முன்னரும், பின்னரும் இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புகளை இனங்கண்டு எழுதுதல்.
- தென்னிந்தியா - இலங்கை முஸ்லிம்களின் தொடர்பினால் ஏற்பட்ட பங்களிப்பு ரீதியான அம்சங்களை முன்வைத்துப் பேசுதல்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## இலங்கை முஸ்லிம் தேசியப் பங்களிப்புகள்

- அறபு வர்த்தகர்களின் பரம்பரையினர் எனக் கருதப்படும் இலங்கை முஸ்லிம்கள், அவர்கள் இங்கு வந்து குடியேறிய காலம் முதலே இந்த நாட்டின் அரசியலில் பல்வேறு பரிமாணங்களில் தமது பங்களிப்புக்களைச் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

- கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அறபுப் பிரயாணி ஒருவர், சிங்கள மன்னர் ஒருவரிடம் முஸ்லிம் அமைச்சர்கள் நால்வர் பணியாற்றினர் எனும் தகவலைத் தருகிறார்.

- ஆரம்ப கால முஸ்லிம்கள் இந்நாட்டு முஸ்லிம் அல்லாதோரிடையே எழும் பிரச்சினை களை தீர்த்து வைப்போராகவும் வர்த்தகம் தொடர்பான விடயங்களில் அரசுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும் விளங்கியுள்ளனர்.

- உள்நாட்டு விவசாயத்துறை பாதிப்புக்குள்ளானபோது உள்நாட்டின் ஏற்றிறக்குமதி வர்த்தகத்தைப் பலப்படுத்த இலங்கை மன்னன் முஸ்லிம் தூதுக் குழுக்களை வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைத்தான்.

- வெளிநாட்டு வர்த்தகத்தில் முஸ்லிம்களுக்கிருந்த இத்தகைய செல்வாக்கு போர்த்துக்கேயரையே பயம்கொள்ளச் செய்திருந்தது.

- போர்த்துக்கேயரைத் துரத்துவதற்காக மாயாதுன்னை மன்னனுக்கு கள்ளிக்கோட்டை மன்னனின் படை உதவியைப் பெற்றுக்கொள்ள முஸ்லிம்கள் அனுப்பப்பட்டார்கள்.

- போர்த்துக்கேயர்களுக்கு எதிராக டச்சுக்காரரின் உதவியை பெறுவதற்காக கண்டிய மன்னன் முஸ்லிம்களையே அனுப்பி வைத்தான்.

- போர்த்துக்கேயரை எதிர்த்துப் போராடுவதற்கு முஸ்லிம்கள் செய்த பங்களிப்புக்காகவே கண்டி மன்னன் இராஜசிங்கன் நன்றிக் கடனாக அக்குறனையில் முஸ்லிம்களைக் குடியேற்றினார்.

- கண்டிய மன்னர்களின் தூதுவர்களாகவும் முஸ்லிம்கள் செயற்பட்டனர்.

- ஒல்லாந்தரைத் துரத்தியடிப்பதற்காக (கர்நாடக) நாவாப் முஹம்மதலியிடம், உஸ்மான் லெப்பே மௌலாமுகாந்திரம் என்பவரை கண்டி மன்னன் தூதராக அனுப்பி வைத்தான்.

- ஆங்கிலேயரின் தாராண்மைக் கொள்கை முஸ்லிம்ளைத் தேசிய அரசியலில் மேலும் பங்குகொள்ள வைத்தது.

- 1833 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட நிரூபண சபையில் கி.பி. 1889 முதல் முஸ்லிம்களும் அங்கம் வகித்தனர்.

- 1865 இல் அறிமுகமான மாநகர, உள்ளூராட்சி மன்றங்களிலும் முஸ்லிம்களுக்குப் பங்கு கொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

- 1919 இல் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது அதன் உபதலைவர்களில் ஒருவராக இளம் பட்டதாரி ரீ.பி. ஜாயா தெரிவானதோடு முஸ்லிம்களும் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

- டொனமூர், சோல்பரி யாப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழுக்களிடம் யாப்புச் சீர்திருத்த சட்டக் கோரிக்கைகளை முஸ்லிம்கள் முன் வைத்தனர்.

- சட்ட சபைக்கான முஸ்லிம் உறுப்பினர்கள் மூவரும் கவர்னரால் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதை எதிர்த்து, படித்த வர்க்கத்தார் சிலர் அம்மூவரும் மக்களால் தெரிவுசெய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தபோது, இக்கோரிக்கை கவர்னரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் முழு இலங்கையையும் தழுவிய தேர்தல் நடாத்தப்பட்டது.

- இத்தேர்தலில் முஹம்மத் மகான் மாக்கார், என்.எச்.எம். அப்துல் காதர், ரீ.பி. ஜாயா ஆகிய மூவரும் 1924இல் தெரிவுசெய்யப்பட்டனர்.

- தமக்கு சுதந்திரம் அளிப்பதாக கொடுத்து வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோரி அரசாங்க சபை 2 ஆம் உலக யுத்தத்தின் பின் கோரிக்கை விடுத்தபோது இந்த மூன்று முஸ்லிம் உறுப்பினர்களும் எவ்வித நிபந்தனையும் விதிக்காது ஆதரவு நல்கினர்.

- **தென்னிந்திய, இலங்கை முஸ்லிம் உறவு**
  - இலங்கை முஸ்லிம்களுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் உறவு ஏற்படுவதற்கு பல்வேறு அம்சங்கள் துணை நின்றிருப்பதைக் காண முடிகிறது.

  - வணிக நோக்கில் தென்கிழக்காசிய நாடுகளில் பயணித்த அறபு வணிகர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் தமது குடியிருப்புக்களை அமைத்திருந்தமை.

  - புவியியல் ரீதியில் இரு நாடுகளும் அயல் நாடுகளாய் இருந்தமை.

- தென்னிந்தியாவைச் சேர்ந்த முஸ்லிம்கள் வணிக நோக்கங்களுக்காகவும், வேறு சில காரணங்களுக்காகவும் இலங்கையில் குடியேறி வாழ்ந்தமை.

- இலங்கையை 1505 இல் கைப்பற்றிய போர்த்துக்கேயர் அதுவரை இருந்து வந்த அறேபியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுக்குத் தடைகளை ஏற்படுத்தியமை.

- இந்நிலை இலங்கை முஸ்லிம்களின் ஆன்மீகத் துறையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியதால் ஆன்மீக மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு இந்திய முஸ்லிம் (பெரியார்)களைத் தமது ஆன்மீக வழிகாட்டிகளாகக் கொண்டமை.

- இக்காலப்பகுதியில் இலங்கை முஸ்லிம்களின் மஸ்ஜித்களில் கதீப்களாகக் கடமை புரியவும், மஸ்ஜித்களில் அல்லது மத்ரஸாக்களில் கடமையாற்றவும் தென் இந்தியாவிலும் இருந்தே ஆலிம்கள் வருவிக்கப்பட்டமை.

- இரு நாட்டு மக்களினதும் தாய்மொழி தமிழாக அமைந்திருந்தமையும், இரு நாட்டு முஸ்லிம்களதும் ஆன்மீக சிந்தனையினை வழங்கும் ஊடகமாக அறபுத் தமிழ் அமைந்திருந்தமையும்.

- இக்காலங்களில் சமயம் தொடர்பான நூல்கள் பெரும்பாலும் அறபுத் தமிழில் தென்னிந்தியாவிலேயே வெளியிடப்பட்டதால் நம் நாட்டு முஸ்லிம்கள் சமயம் சார்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆக்கங்கள் என்பவற்றுக்காக தென்னிந்தியாவையே எதிர்பார்த்து நின்றமை.

- இரு நாட்டு மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட திருமண ரீதியான தொடர்புகள்.

- போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னரேயே தென்னிந்தியருடனான தொடர்பு இருந்து வந்தபோதும், அவ்வுறவு போர்த்துக்கேயரின் பின்னரேயே வலுப்பெற்றது.

- ஸ்பானிய முஸ்லிம் ஆட்சியை அழித்துவிட்ட கையோடு இலங்கை வந்த போர்த்துக்கேயர் இலங்கை முஸ்லிம்களையும் எதிரிகளாகவே எண்ணியதால் அவர்களது முன்னேற்றத்தைத் தடுக்க தம்மாலான அனைத்து வழிகளையும் மேற்கொண்டனர்.

- இதனூடாக இலங்கை முஸ்லிம்களின் கல்வியையும், பொருளாதாரத்தையும் நசுக்கிவிட முனைந்த போர்த்துக்கேயர், இதன் முதற்கட்டமாக சமய, வணிக நோக்கில் அறபுகள் இலங்கை வருவதைத் தடை செய்ததோடு, இங்குள்ளோர் அரேபியா சென்று வருவதற்கும் கட்டுப்பாடு விதித்தனர்.

- இந்நிலையில் சமய கலாசாரங்களையாவது காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் தென்னிந்தியரோடு உறவு வைத்துக் கொண்டதால் அங்கு சென்று கல்வி கற்க ஆரம்பித்தது போலவே, அங்கிருந்தே கல்வி போதிக்கவும், மார்க்க பிரசாரம் செய்யவும் ஆலிம்கள் இங்கு வருகை தரலாயினர்.

- இந்த இரு பக்கத் தொடர்பு இலங்கை முஸ்லிம் சமூகத்தில் சமய, நாகரிக, பண்பாட்டு அம்சங்களில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியது.

- இத்தாக்கம் ஒரு பக்கத்தில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியதுபோல, மறுபக்கம் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தவும் தவறவில்லை.

- **விளைவுகள்**
  - தென்னிந்திய கலாசார செல்வாக்கினால் எமது கலாசார பாரம்பரியங்களை உயிர்ப்பிக்கும் சில நிகழ்வுகளுக்கு இந்திய வர்த்தகர்களும் அறிஞர்களும் துணையாக இருந்துள்ளனர். குறிப்பாக இந்தியாவில் புகழ்பெற்ற அறபு மத்ரஸாக்களில் இலங்கை மாணவர்களுக்கு இடமளித்தமை இலங்கையின் முக்கிய நகர்களில் மஸ்ஜித்களை நிருவியமை.

  - தென்னிந்தியாவில் இருந்து நம்நாட்டுக்கு வருகை தந்த மார்க்கப் போதகர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மஸ்ஜித்கள், மத்ரஸாக்கள், குர்ஆன் மத்ரஸாக்கள் அல்லது மக்தப்கள், தரீக்கா மையங்கள் முதலானவற்றை நிறுவினர். உ-ம்: வெலிகாமத்தில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நிறுவிய மத்ரஸதுல் பாரி.

  - சமய ரீதியான இலக்கியங்கள் முஸ்லிம் சமூகத்தில் அறிமுகமாயின. மசாலாக்கள், முனாஜாத்துகள், கிஸ்ஸா என்பன இந்த வகையில் குறிப்பிடத்தக்கவை. இதன் பலனாய் அறபுத் தமிழ் வளர்ச்சி கண்டது. குத்பாக்கள் அறபுத் தமிழில் வாசிக்கப்பட்டன.

  - இப்பின்னணியில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமும் தோன்ற ஆரம்பித்ததோடு ஷரீஆ தொடர்பான விடயங்களை விளக்கக் கூடிய நூல்களும் எழுதப்பட்டன.

  - இந்திய அல்லது தென்னிந்தியக் கட்டடக்கலை மரபுகள் இலங்கை முஸ்லிம்களின் கட்டடங்களில் செல்வாக்குச் செலுத்தின.

  - இரு நாட்டினரும் செய்துகொண்ட திருமணங்களினூடாக சமூக உறவுகள் பலப்படுத்தப்பட்டதுடன் அதுவரை இருந்து வந்த வம்சாவழி முறையும் ஒதுக்கப்பட்டது.

  - தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட வணிக உறவால் உள்நாட்டில் பொருளாதாரம் மேம்படலாயிற்று.

  - இந்திய சூழலில் வாழ்ந்த கலாசாரப் பாரம்பரியங்கள் இலங்கை முஸ்லிம்களிடத்திலும் புகுந்தன.

  - பெயர்சூட்டல், பெண்கள் பூப்படைதல், விவாகம், மரணம் முதலான நிகழ்வுகளில் அரேபியாவில் காணப்படாத பல சடங்குகள் வளர்ந்தன.

  - இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் குர்ஆன் மத்ரஸாக்கள் இல்லாமலிருந்தமையால் அவற்றை நடத்துவதற்கு இந்தியாவிலிருந்து லெப்பைமார் வருகை தந்தனர். அவர்களில் தகுதியுடையோரும், தகுதியற்றோரும் இருந்தனர்.

  - அறேபியருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டதால், இந்நிலையில் தென்னிந்தியாவிலிருந்து கிடைத்த சமய சிந்தனைகள் பிரதேச வாரியான தென்னிந்திய கலாசாரத்தைத் தழுவிய சிந்தனைகளாக அமைந்து காணப்பட்டன.

  - இக்காலத்தில் கிடைத்த சமய நூல்கள், குறித்த சில நூலாசிரியர்களதும் அந்த நூல்களை வெளியிட்ட மத்ரஸாக்களதும் சிந்தனைகளையும் கருத்துக்களையும் தழுவியே காணப்பட்டன.

  - நாட்டில் பல்வேறு பகுதிகளில் சூபித்துவச் சிந்தனைகள், அமைப்புக்கள் தோற்றம் பெற்றன.

- காலவோட்டத்தில் அறபு மொழியின் முக்கியத்துவம் அருகிச் சென்றமை துரதிஷ்டமான ஒன்றாகும்.

- **முஸ்லிம் தனியார் சட்டம் வரைவிலக்கணம்**
  - ஒரு நாட்டில் மத, கலாசார, பிரதேச அடிப்படையில் வாழ்கின்ற தனித்துவமான குழுமங்களின் தனித்துவங்களைப் பேணும் வகையில், அவர்கள் பின்பற்றுகின்ற, அவர்களுக்கே உரித்தான சட்டங்கள், நடைமுறைகள், வழக்காறு என்பனவற்றை அவர்களுக்கு உரித்தாக்கும் சட்டம் தனியார் சட்டம் எனப்படும்.

  - பல்லின மக்களைக் கொண்ட நம் நாட்டில் நடைமுறையில் உள்ள தனியார் சட்டங்கள்.
    1. ***கண்டியச் சட்டம்:*** இது கண்டியச் சிங்களவர்களுக்கு மட்டுமான தனியார் சட்டம்
    2. ***தேச வழமைச்சட்டம்:*** இது யாழ்ப்பாணத் தமிழருக்கு மட்டும் உரித்தான சட்டம். (மட்டக்களப்புத் தமிழருக்கு இது பொருந்தாது)
    3. ***முஸ்லிம் தனியார் சட்டம்:*** இத்தனியார் சட்டம் என்பது, இஸ்லாத்தின் அனைத்துச் சட்ட திட்டங்களையும் கொண்ட ஒரு சட்டத் தொகுப்பு அல்ல.

  - முஸ்லிம் தனியார் சட்டத்தின் உள்ளடக்கம்
    இது இரு பிரிவுகளைக் கொண்டது.
    1. ஆள்சார் சட்டம் (Personal Law) - இதன் கீழ் இடம்பெறுபவை.
       - திருமணம், பலதாரமணம்
       - விவாகரத்து
       - பராமரிப்பு
       - பிரதிபலன்களை எதிர்பார்க்காத கொடைகள்
       - பருவமடைதல்
       - தத்தெடுத்தல் அல்லது மகவேற்பு
       - பிள்ளைகளது பாதுகாப்பு
       - திருமணம் செய்யத் தடுக்கப்பட்டோர்
       - மஹரும் கைக்கூலியும்

  - ஆதனம் சார் சட்டம் (Law of Property)
    இப்பிரிவில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன.
    1. உயில் எழுதாத சொத்து வாரிசுரிமை: உயில் எழுதாது மரணிப்பவரது மத்ஹப் சட்டப் பிரகாரம் வாரிசுகள் சொத்துக்களைப் பெறுவர்.
    2. பிறப்பின் மூலம் வாரிசுரிமை
    3. வாரிசின் வகை
    4. வக்பு அல்லது நம்பிக்கைப் பொறுப்பு

  - **வக்பு சட்டம்**
    மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸின் முயற்சிகளின் பயனாய் 1956 இல் வக்பு சட்டம் இலங்கையில் அறிமுகமானது.
    **வக்பின் வகை:**
    1. வறுமை நிவாரணத்துக்காகச் செய்யப்படும் வக்பு
    2. பொதுவாக இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் வக்பு
    3. மஸ்ஜித்களை முறைமை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் வக்பு
    4. தர்ம நோக்கில் செய்யப்படும் வக்பு

    இவ்வாறு முஸ்லிம் தனியார் சட்டத்தால் அங்கீகரிக்கப்படும்/அனுமதிக்கப்படும் எதுவும் இப்பகுதியில் அடங்கும்.

**வக்பு சட்டத்தின் நோக்கம்:**

1. மஸ்ஜித்களையும் வக்பு சொத்துக்களையும் பதிவு செய்தல்.
2. நம்பிக்கைப் பொறுப்புக்களைப் பராமரிப்போரின் கடமைகளை வரையறுத்தல்.
3. ஜமாஅத்தினரால் தெரிவுசெய்யப்படும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களை வக்பு சபையில் பதிதல்.
4. முஸ்லிம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை உருவாக்குதல்.
5. ஆணையாளரை நியமித்தலும், ஏழு உறுப்பினர் கொண்ட சபையை அமைத்தலும்.
6. 1982ம் ஆண்டில் திருத்தச் சட்டத்தின்படி மஸ்ஜித்களுக்கு மேலாக தர்ஹாக்களையும் பதிவு செய்தல்
7. பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் நிதியம் அமைக்கப் பங்களிப்புச் செய்தல்.

- தனியார் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தாபனங்கள்
  1. ***காழி நீதிமன்றம்:*** நீதிச் சேவைகள் ஆணையாளரால் காழிகள் நியமிக்கப்படுவர்.
     **காழிகளின் அதிகாரங்கள்:**
     1. மஹரைப் பெற்றுக் கொடுத்தல்.
     2. வாழ்க்கைச் செலவை அதிகரித்தல் அல்லது கூட்டல்
     3. விவாகரத்தை மேற்கொள்ள உதவல்.
     4. கைக்கூலியை மீளப் பெற உதவல்.
     5. அவசியத்தின் நிமித்தம் வலியாகச் செயற்படல்.
     6. சமரசம் செய்தல்.

***2. காழிகள் சபை:***

- காழிகளின் தீர்ப்பில் திருப்தியடையாத ஒருவர் 10 நாட்களுக்குள் இச்சபைக்கு மேன்முறையீடு செய்ய வேண்டும்.
- இதில் ஐந்து உறுப்பினர்கள் இருப்பர்.
  ஒரு தீர்ப்பு வழங்கப்படும்போது, குறைந்தது மூன்று உறுப்பினர்கள் அல்லது நீதிபதிகளாவது இருக்க வேண்டும்.

***3. மேன்முறையீட்டு நீதிமன்றம்***

***4. சுப்ரீம் கோட்:*** மேன்முறையீட்டில் திருப்தி காணாதோர் இந்த நீதிமன்றில் வழக்கைத் தாக்கல் செய்யலாம்.

***5. வக்பு சபை***

- 7 பேர் உறுப்பினராக இருப்பர்.
- இதில் எடுத்த தீர்மானம் திருப்தி இல்லை எனில் வக்பு நியாய சபைக்கு 30 நாட்களுக்குள் முறையீடு பண்ணலாம்.
- வக்ப் சபையை நீதிச் சேவைகள் ஆணைக்கு தெரிவு செய்யும்.
- நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமித்தல், அவர்களை நீக்குதல், இடைநிறுத்தம் செய்தல், அவர்கள் சமர்ப்பிக்கும் கணக்குகளை மேற்பார்வை செய்தல், வக்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.

- முஸ்லிம் தனியார் சட்ட வரலாறு
  இதனை மூன்று தலைப்புக்களில் நோக்கலாம்.
  **1. சிங்கள மன்னர் காலம்**
  - இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னரே அறபுகள் நம் நாட்டோடு தொடர்பு வைத்திருந்தனர்.
  - மன்னர்களின் ஆலோசகர்களாகவும் மருத்துவர்களாகவும் வெளிநாட்டு வர்த்தகத்துக் கான பொறுப்பாளர்களாகவும் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டனர்.

- வியாபார நோக்கிலும், ஹஜ்ஜுக்காகவும் அறேபியா சென்று வந்த அவர்கள், அங்கு தாம் கற்றுக் கொண்டவற்றை இலங்கையில் அறிமுகம் செய்தனர்.
- ஷரீஅத்தை அமுலாக்கம் செய்தவற்கான வழிகளையும் செய்தனர்.
- இப்படி ஷரீஅத்தை அறிமுகம் செய்தவர்களுள் அப்துர் ரஹ்மான் பின் அபீ ஹாஷிம் ஸெய்லானி என்பவர் முக்கியமானவர்.
- இவர் இஸ்லாமிய சட்டங்களை தமிழில் எழுதி வெளியிட்டபோதும் அதற்கு எவரும் எத்தகைய தடையையும் விதிக்கவில்லை.

### 2. போர்த்துக்கேயர் - ஒல்லாந்தர் காலம்

- போர்த்துக்கேயரின் வருகையோடு அதுவரை இலங்கைக்கும் அறேபியாவுக்கும் இடையில் இருந்து வந்த தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.
- அவர்களது அச்சுறுத்தலுக்குப் பயந்து முஸ்லிம்கள் ஒதுங்கி வாழ்ந்தார்கள்.
- பின்வந்த ஒல்லாந்தரும் தம் மதத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டியதால் முஸ்லிம்களின் கல்விநிலை தேக்கமடைந்து பலவழிகளிலும் பின்தங்கினர்.
- டச்சு கவர்னர் வில்லியம் போக் (Folck - 1765-1783) இலங்கைக்கென ஒரு சட்ட முறையை அறிமுகப்படுத்தியதோடு, இங்கிருந்த முஸ்லிம்களுக்கெனத் தனியான சட்டவாக்கம் ஒன்றை உருவாக்கவும் வழிசெய்தார்.
- இதற்கு முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்கப் பயந்ததால், பதேவியாவில் இருந்த முஸ்லிம்கள் பின்பற்றும் சட்டத்தொகுப்பை வருவிக்கச் செய்து, இலங்கையில் அறிமுகம் செய்தார்.
  இதன் இரு பகுதிகள்
  1. வாரிசுரிமைச் சட்டம்
  2. திருமணம், விவாகரத்து தொடர்பான சட்டம்

### 3. ஆங்கிலேயர் காலம் (1796-1948)

- இவர்களும் ஒல்லாந்தர் அறிமுகம் செய்த சட்டத்தையே நடைமுறைப்படுத்திய போதும், தலைப்பை மாத்திரம் "முஹம்மதியர் அல்லது சோனகர் சம்பந்தமான விஷேட சட்டங்கள்" என மாற்றியமைத்தனர்.
- 1806இல் உயர் நீதியரசர் அலக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் அப்போதைய கவர்னரிடம் முன்வைத்த தனியார் சட்டம் தொடர்பான சில திருத்தங்களுடனான சட்டக் கோவை அமுலுக்கு வந்தது.
- இது ஆரம்பத்தில் கண்டி மன்னனின் ஆட்சிக்குட்படாத பகுதிகளுக்கு மட்டும் என்றிருந்தது. பின்னர் முழு முஸ்லிம் சமூகத்திற்கும் என ஆகியது.
- இக்காலத்தில் இக்கோவைக்கு வெளியே சென்றும் தீர்ப்பு வழங்கலாம் என காலி மாவட்ட வழக்கறிஞர் கில்மன் ஒரு தீர்ப்பு வழங்கியதால் இது தொடர்பாக பல விமர்சனங்கள் எழுந்தன.
- இந்நிலையில், தனியார் சட்டத்தை அமுல் நடாத்த முஸ்லிம்களுக்குப் பூரண அதிகாரம் வழங்கும் வகையிலான ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனும் பிரேரணை ஒன்றை என்.எச். அப்துல் காதர் கொண்டு வந்தார்.
  1. திருமணம், விவாகரத்து தொடர்பான சட்டம்
  2. இவ்விரண்டும் பதிவு செய்யப்பட வேண்டும் எனும் சட்டம்
- இக்காலத்தில் முன்னைய முகமதியர் சட்டம்' என்பதில் இருந்த 'முகமதியர்' எனும் பதம் நீக்கப்பட்டு, இஸ்லாமிய சட்டம் என அறிமுகமாகியது.
- 1939இல் இச்சட்டமும் மாற்றப்பட வேண்டும் எனக் கூறப்பட்டதற்கிணங்க, பதிவாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு குழு, 1951 இல் 13ஆம் இலக்க புதிய சட்டத் திருத்தம் ஒன்றை அறிமுகம் செய்தது.

- இக்குழுவில் எம்.ரீ. அக்பர், ரீ.பி. ஜாயா, சம்சுதீன் போன்றோர் அங்கத்துவம் வகித்தனர்.
- 1954ல் நடைமுறைக்கு வந்த இச்சட்டமே இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிறது.

- **இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கான முன்னோடிகள்**
  - சிங்கள மன்னர்களின் காலத்தில் இலங்கையின் அரசியல், பொருளாதார வாழ்வில் பங்கேற்ற முஸ்லிம்கள் ஐரோப்பியர் காலத்தில், இந்நாட்டின் ஏனைய சமூக மக்கள் பாதிக்கப்பட்டது போலவே பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.
  - இதனால் முஸ்லிம்களின், அறபுலகத்துடனான வர்த்தக, பொருளாதார, கல்வி, கலாசாரத் தொடர்புகள் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி, கல்வியிலான வளர்ச்சியும் தடைப்பட்டது.
  - ஐரோப்பாவின் புதிய சூழலுக்கு ஏற்ப ஏனைய சமூகங்கள் தம்மை மாற்றிக் கொண்டு முன்னேற்றம் அடைந்ததுபோல முஸ்லிம்களால் முடியவில்லை.
  - ஐரோப்பியர் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் மார்க்கக் கல்வியைப் வாய்ப்பை இழந்தனர்.
  - இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கூட முறையாகப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக அவர்கள் இருந்தனர்.
  - மார்க்கத் துறையில் புலமையும் ஆற்றலும் பெற்ற அறிஞர்கள் அக்காலத்தில் இருக்க வில்லை
  - முஸ்லிம்களின் அனைத்துத் துறைகளிலுமான குறிப்பாக தேசிய முன்னேற்றத்துக்கு இந்நிலை தடையாகியதால், சமூக, தேசிய நலன்களைக் கருத்திற் கொண்டு இம்மக்களை உயிர்ப்பிக்க வேண்டிய அவசியமும், தேவையும் 19ஆம் நூற்றாண்டின் பிற்கூறுகளில் உருவாகின.
  - இக்காலப்பகுதியில் ஏனைய சமூகங்களில் தேசிய எழுச்சியின் பெயரால் சமய சீர்திருத்தத்துக்கும் சமூக விழிப்புணர்ச்சிக்குமே முனைப்புக் காட்டப்பட்டது.
  - இதே பண்பையே இக்காலத்திய நமது முஸ்லிம்களின் வரலாறும் கொண்டிருக்கிறது.
  - அநாகரிக தர்மபால, ஆறுமுக நாவலர் போன்றோர் தத்தம் சமூக எழுச்சிக்காக உழைத்தது போன்று இக்காலத்தில் வாழ்ந்த சித்திலெப்பை, மாப்பிள்ளை லெப்பை ஆலிம், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், ரீ.பி. ஜாயா முதலான முஸ்லிம் பெரியார்களும் தம் சமூகத்தின் தேசிய, சமூக, கல்வி, சமயத்துறைச் சீர்திருத்தங்களுக்காக உழைத்தனர்.

- **எம்.ஸீ. சித்தி லெப்பை**
  - கி.பி. 1838ஆம் ஆண்டு கண்டியில் பிறந்தார்.
  - இலங்கையின் முதல் முஸ்லிம் வழக்கறிஞர் எனக் கருதப்படும் இவரது தகப்பன் முஹம்மது லெப்பை சித்தி லெப்பை இவருக்கு இட்ட பெயர் முஹம்மது காஸிம் என்பதாகும்.

- சித்தி லெப்பையின் தந்தைக்கு ஐந்து பிள்ளைகள். ஐவரும் அறபுமொழி பயின்ற வர்களாவர். மூத்த சகோதரர் ஒரு ஆலிமாகவும் காழியாகவும் இருந்தார்.

- முஹம்மது லெப்பை என்ற இவரிடம் -தான் சித்தி லெப்பை தமிழ், சிங்களம்,அறபு முதலானவற்றைக் கற்றார்.

- அருள் வாக்கி அப்துல் காதரிடம் தமிழ் இலக்கியத்தைக் கற்றுக்கொண்ட இவர், கஸாவத்தை ஆலிம் அப்பாவிடமும் தேவையான ஞானங்களைப் பெற்றுக் கொண்டார்.

- கண்டியில் இருந்த ஜனால் எனும் பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலத்தைக் கற்றார்.

- 1871இல் கண்டியில் வாழ்ந்த இந்தியரான அப்துல் காதிர் என்பவரின் மகள் செய்யித் உம்மா என்பாரை சித்திலெப்பை மணந்தார். மனைவியும் இவருக்குச் சளைத்தவராக இருக்கவில்லை.

- குர்ஆனை ஓதி முடித்திருந்த இவர், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளைக் கற்றிருந்ததோடு, இசைக் கருவிகளை இயக்கும் திறனையும் பெற்றிருந்தார்.

- குர்ஆனுடன் நவீன கல்வியையும் இவர் பெற்றிருந்ததால் கணவனின் சிந்தனைப் போக்கிற்கு இயைந்து செல்ல அவரால் முடிந்தது.

- 1862இல் வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட சித்திலெப்பை கி.பி. 1874-78 காலப்பகுதியில் முனிசிபல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றினார்.

- வழக்கறிஞர் பதவியில் திருப்தியுறாத அவர், சமூக நலனுக்கு உழைக்கும் நோக்கில் 1884இல் கொழும்பில் வந்து குடியேறினார். கொழும்பில் மக்களின் வரவேற்புக்கு மத்தியில் எதிர்ப்பும் இருந்தது.

- சமூக சேவையில் ஆர்வம் காட்டிய அவர், தான் சொந்தமாக வாங்கிய அச்சு இயந்திரம் மூலம் சமூக, சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட முஸ்லிம் நேசன் எனும் பத்திரிகையை 1882 இல் ஆரம்பித்தார்.

- ஞானதீபம், அஸ்ராருல் ஆலம், ஷுருத்துஸ் ஸலாத் போன்ற தத்துவ நூல்களையும் அசன்பே சரித்திரம், கிரேக்க, துருக்கிய சரித்திரம் போன்ற வரலாற்று நூல்களையும் வெளியிட்டார். இவற்றுள் அசன்பே சரித்திரம் இலங்கையின் முதல் தமிழ் நாவலாகக் கருதப்படுகிறது.

- சித்திலெப்பையின் சிந்தனைப் போக்கில் திருப்பத்தை உண்டாக்கிய இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்துறையும் தத்துவவியலும் அவரது ஆன்மீக உலகியற் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தின.

- எகிப்திய போராட்ட வீர் ஒராபி பாஷா, உலக முஸ்லிம்களின் ஒருமைப்பாட்டுக்காக குரல் கொடுத்த ஜமாலுத்தீன் ஆப்கானி போன்றோரது சிந்தனைத் தாக்கம், சித்திலெப்பையை முற்போக்கான ஒரு சிந்தனையாளராக மாற்றியது.

- மறுபுறம், ஆலிமான அவரது மூத்த சகோரரின் வழிநடாத்தலும், கஸாவத்தை ஆலிம் புலவர், யமனியரான அப்துல்லாஹ் பின் பாதிப் போன்றோரின் உறவும் நட்பும் ஆன்மீகப் பகுதியைச் செதுக்கிச் செப்பனிட்டன.

- தனது காலத்தில் ஏனைய இரு சமூகங்களும் கல்வித் துறையில் முன்னேற்றம் கண்டு வந்தபோது, முஸ்லிம் சமூகம் கல்வியைப் புறக்கணிப்பதைக் கண்டு கவலை கொண்ட அவர், இந்நிலையில் இருந்து முஸ்லிம் சமூகத்தைக் காப்பதற்காக மத்ரஸதுஸ் ஸாஹிராவை நிறுவினார்.

- தொடர்ந்து கண்டி, ஹட்டன், பதுளை போன்ற இடங்களிலும் பாடசாலைகள் அமைக்கப்பட்டன.

- கண்டியில் அவர் ஆரம்பித்து வைத்த முதல் முஸ்லிம் பெண் பாடசாலையில் தனது சகோதரியையே அதிபராக்கியதோடு, மாணாக்கருக்குத் தேவையான பாடநூல்களையும் எழுதிப் பிரசுரித்தார்.

- எம்.ஸீ. அப்துர் ரஹ்மானைச் சட்ட சபைக்கு அனுப்பி வைக்க வழிசெய்தார்.

- சித்திலெப்பையின் சிந்தனைகளும், செயற்பாடுகளும் அவருக்கு தேசிய மட்டத்தில் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது போலவே, எதிர்ப்பையும் பெற்றுக் கொடுத்தது.

- இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தனது பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்ட அவர், தனது 60ஆவது வயதில் 1898ஆம் ஆண்டு ஆஸ்த்மா நோயால் பீடிக்கப்பட்டு மரணமானார்.

- **கலாநிதி ரீ.பீ. ஜாயா**
    - நம் நாட்டின் மிகச் சிறந்த கல்வியாளர்களுள் ஒருவரான கலாநிதி ஜாயா, கண்டியில் உள்ள கலகெதர எனும் இடத்தில் ஒரு மலாய் இனக் குடும்பத்தில் 1890ஆம் ஆண்டில் பிறந்தார்.

    - தனது சிறுபராயத்தில் ஆலிம்களிடம் மார்க்கக் கல்வியைப் பெற்றுக்கொண்ட அவர், ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்காக கொட்டாஞ்சேனை பீ.ஜி. பாடசாலையில் இணைந்தார்.

    - பின்னர் சென். தோமஸ் கல்லூரியில் இணைந்து பல சிறப்புக்களையும் பெற்றார். பாடசாலையிலும் வகுப்பிலும் தலைசிறந்த மாணவன் என்ற அந்தஸ்தை அவர் தட்டிக் கொண்டார்.

    - கல்லூரி வாழ்க்கையை முடித்துக் கொண்ட ஜாயாவுக்கு கண்டி தர்மராஜா கல்லூரியிலும் மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியிலும் மேலைத்தேய இலக்கிய ஆசிரியர் நியமனம் கிடைத்தது.

    - 1916இல் கலைப் பட்டதாரிப் பரீட்சையில் தேர்ச்சி அடைந்த இவர் 1917இல் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இலக்கியம், வரலாறு என்பன கற்பிக்கவென நியமனம் பெற்றுச் சென்றார். இக்காலப் பிரிவிலேயே ஜாயாவுக்கு முஸ்லிம் கல்வித் துறையில் நாட்டம் ஏற்பட்டது.

- மிகப் பெரும் கல்வி மறுமலர்ச்சி முன்னோடிகளதும், சேர் செய்யித் அஹ்மத்கான் போன்ற சர்வதேச கல்வியியலாளர்களதும் சிந்தனைத் தாக்கத்தால் கவரப்பட்டார்.

- இஸ்லாமிய வரலாற்றில் ஆழ்ந்த பற்றும் மத்திய கால முஸ்லிம்களின் கல்வித்துறை முன்னேற்றம் குறித்தான ஞானமும் பெற்றிருந்த அவருக்கு அவர் காலத்து முஸ்லிம் சமூகத்தின் கல்வியிலான பின்னடைவு பெரும் கவலையை அளித்தது.

- கல்வியில் பின்னடைவு கண்டும் கலாசாரத்தில் தனித்துவத்தை இழந்து அரசியலில் புறந்தள்ளப்பட்டும் வந்த துரதிஷ்டமான நிலையில் இருந்து முஸ்லிம் சமூகத்தை விடுவிக்க வேண்டுமெனக் கனவு கண்டார்.

- தனது கனவை நனவாக்க எழுத்தையும் பேச்சையும் பயன்படுத்தினார்.

- இலங்கை முஸ்லிம் சங்கத்தில் 1913இல் ஜாயா நிகழ்த்திய உரை, சமூக சீர்திருத்தத் துறையில் அவருக்கிருந்த ஆர்வத்தைக் காட்டுகிறது.
  - எமது சாதனைகள் என்ன?
  - சகோதர சமூகத்தினர் பல துறைகளிலும் பல நிபுணர்களை உருவாக்கியுள்ளது போல் நாம் எத்தனை பேரை உருவாக்கியுள்ளோம்?
  - கற்றறிந்தவர்கள் இல்லாதது போல் அரச துறையிலும் தேவையான உறுப்பினர்கள் இன்னும் உருவாக்கப்படவில்லை.
  - தனித்துவத்தைக் காக்கக் கூடிய வகையிலான பாடசாலைகள் கூட எம்மிடையே
  - இல்லாதிருப்பது கவலை அளிக்கக் கூடிய விடயமாகும்.

- அப்போதைய சூழலில் சமூக முன்னேற்றமானது ஆங்கிலக் கல்வியைப் பெறுவதனூடாகவே சாத்தியமானது என்பதில் உறுதியாக இருந்தார்.

- 1914இல் அவர் கூறிய பின்வரும் கருத்து அவருக்கிருந்த நிலப்பாட்டை மெய்ப்பிக்கிறது. “ஆங்கிலக் கல்வியின் அழுத்தமான செல்வாக்கின் மூலமே அறிவும், சமூகத் திறனும், அரசியல் அதிகாரமும் பெற்ற உயர் சமூகமாக முஸ்லிம் சமூகம் மாற முடியும்.”

- 1921இல் கொழும்பு ஸாஹிராவின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டபோது, ஸாஹிரா மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது.

- அடுத்த 20 வருடங்களுக்குள் புகழ் மிகுந்த ஏனைய கல்லூரிகளான ரோயல், ஆனந்தா கல்லூரிகளின் நிலையை அடைந்தது.

- 1939 இல் 2ஆம் உலக யுத்தத்தின்போது கொழும்பு வாழ் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது மட்டுமன்றி ஸாஹிராக் கல்லூரி இராணுவத்தினர் தங்குமிடமாகவும் மாற்றப்பட்டது.

- இந்த இக்கட்டான நிலையை வெளி மாவட்டங்களில் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

- இதன் பயனாய் வேக்கந்தை (கொழும்பு), கம்பளை, அழுத்கம, பண்டாரவளை, மாத்தளை, புத்தளம் போன்ற இடங்களில் ஸாஹிராவின் கிளைகளை நிறுவ முடிந்தது.

- கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டிய இவரை, 1946 இல் பிரசுரிக்கப்பட்ட The Crescent சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கம், இலங்கையின் சேர் செய்யித் அஹ்மத்கான் என குறிப்பிட்டிருந்தது நோக்கத்தக்கது.

- மனிதப் பண்பாட்டு உருவாக்கத்தில் சமயம் வகிக்கும் பங்கு மகத்தானது எனும் விடயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த ஜாயா, சிறுவர்களுக்கான கல்வித் திட்டத்தில் சமயக் கல்வியினதும் சூழலினதும் அவசியத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தார்.

- ஜாயாவின் கல்விச் சிந்தனை தூர நோக்குடையதாகவும் தேசிய நலன் கொண்ட விசாலித்த ஒரு தளத்தைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது.

- முஸ்லிம்களின் கல்வியானது தேசப்பற்று கொண்டதாகவும் பொது நல ஆர்வம் உடையதாகவும் வாய்ப்புகள் அற்றோரின் நலனில் கரிசனையை ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டுமென வலியுறுத்தினார்.

- அரசியல் தளத்தில் தடம் பதித்த ஜாயா 1924 இல் சட்ட நிருபண சபைக்குத் தெரிவானது முதல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக முஸ்லிம் சமூக நலனுக்காக வாதிட்டு வந்தார்.

- பொன். இராமநாதன், ஜேம்ஸ் பீரிஸ் போன்ற தமிழ்த் தலைவர்களுடன் நெருக்கமான உறவு வைத்திருந்த அவர், பின்னர் தேசிய காங்கிரஸில் இணைந்து சிங்களத் தலைவர்களோடு சேர்ந்து தேசிய சுதந்திரத்துக்காகப் போராடினார்.

- முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்கும் விடயங்களில் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் எப்போதும் விழிப்போடு இருந்து வந்தார்.

- முஸ்லிம்களுக்கு ஜும்ஆ தொழுகைக்காக வெள்ளிக்கிழமை லீவு வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் தொடர்பாக 1925 இல் சட்ட சபையில் விவாதித்தார்.

- 1931இல் முஸ்லிம் சார்பாக இலங்கையில் டொனமூர் அறிக்கை பற்றி “முஸ்லிம்களும் உத்தேச அரசியல் மாற்றங்களும்” எனும் தலைப்பில் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

- அகில இலங்கை முஸ்லிம் லீக்குடனும் அவருக்கு நெருக்கமான உறவிருந்தது.

- சுதந்திரத்தின் பின்னர் அமைக்கப்பட்ட முதலாவது பாராளுமன்றத்தில் ஜாயா தொழில் அமைச்சராக நியமனம் பெற்றார்.

- 1950 இல் பாகிஸ்தானுக்கான தூதுவராகத் தெரிவாகிய அவர், அங்கு அரசினதும் மக்களதும் நல்லபிமானத்தைப் பெற்றதால் அவரது சேவை நலன்களைக் கருத்தில் கொண்டு கராச்சிப் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டம் அளித்து கௌரவித்தது.

- 1960இல் இலங்கை ஹாஜிகளுக்கு விடுதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சவூதி சென்ற அவர், அதே ஆண்டு மே 31 இல் மதீனாவில் காலமானார்.

- **மாப்பிள்ளை லெப்பை ஆலிம்**
  - ஸைத் முஹம்மத் எனும் இயற்பெயர் பெற்ற இவர், கி.பி. 1817 (ஹிஜ்ரி 1232)ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் உள்ள காயல் பட்டணத்தில் பிறந்தார்.
  - தந்தை பெயர் வெள்ளை அஹ்மத் லெப்பை ஆலிம், தாயார் ஆமினா காயல் சதக்கதுல்லாஹ் அப்பாவின் வழியில் வந்தவர்.
  - இவர் இரு வயதுக் குழந்தையாக இருக்கும்போது இவரது பெற்றோர் கீழக்கரையில் குடியேறினர்.
  - பத்து வயதாகும்போது அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்தார்.
  - ஆரம்பத்தில் இவர் மார்க்கக் கலைகளையும் அறபு, உர்து, பார்ஸி, தமிழ் ஆகிய மொழிகளையும் தைக்கா ஸாஹிபு வலியுல்லாஹ் எனும் பெரியாரிடம் கற்றுத் தேர்ந்தார்.
  - தனது மாணவரின் மாண்பினை உணர்ந்த தைக்கா ஸாஹிப், தனது நான்காவது மகள் ஸாரா உம்மாவை மணம்செய்து கொடுத்ததோடு, அவருக்கு லெப்பை ஆலிம் ஸாஹிபு என்றும் நாமமிட்டார்.
  - இப்பெயரே அவரது இயற் பெயரை விடப் பிரபல்யம் அடைந்தது.
  - இப்பெயரை அறபியில் 'அல் ஆலிமுல் அரூஸ்' என மொழிபெயர்த்து மக்கள் அழைக்கலாயினர்.
  - இதன் காரணமாக இவர் நடாத்தி வந்த மத்ரஸா, அல் மத்ரஸதுல் அரூஸிய்யா எனப் பெயர் பெறலாயிற்று.
  - ஹிஜ்ரி 1267இல் இவரது ஆசிரியர் தைக்கா ஸாஹிபு வலியுல்லாஹ் காலமானபோது இவரே அவர் நடாத்தி வந்த தைக்காவுக்கும் தரீக்காவுக்கும் தலைமை தாங்கலானார்.
  - மக்களிடையே நிலவிய அனாச்சாரப் பழக்க வழக்கங்களை ஒழித்து அவர்களை இஸ்லாமிய அறநெறியில் திருப்பிவிட்ட பெருமை இவரையே சாரும்.
  - இவரின் கரம் பற்றித் பைஅத் (தீட்சை) பெற்றவர்கள் ஏராளம்.
  - இவர் வெள்ளிக்கிழமை ஜும்ஆ குத்பாவை தமிழிலும் ஓதலாம் எனத் தீர்ப்பு வழங்கியதோடு குத்பாவை தமிழில் மொழிபெயர்த்தும் வழங்கினார்.
  - இவர் அறபியிலும் அறபுத் தமிழிலும் பல நூல்களை எழுதியுள்ளார். தனது நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கென்றே கீழக்கரையில் ஹி. 1304இல் ஓர் அச்சகத்தையும் நிறுவினார்.
  - மார்க்கச் சட்டதிட்டங்கள் தொடர்பாகச் சுருக்கமாக பத்ஹுல் மத்தீன், பத்ஹுஸ் ஸலாம், பத்ஹுத் தையான் போன்ற நூல்களை அறபுத் தமிழில் எழுதிய இவர், பின்னர் ம.்.கானி எனும் பெயரில் பிக்ஹ் தொடர்பான விரிவான ஒரு சட்ட நூலையும் எழுதினார்.

- நபியவர்கள் மீது ‘மின்ஹதுஸ் ஸரந்தீப்’ எனும் பெயரில் ‘புகழ்ப்பா’ பாடிய இவர் ‘தலைப்பாத்திஹா’ எனும் பெயரில் பாத்திமா (ரழி) அவர்களின் புகழையும் பாடியுள்ளார். அத்தோடு பல்வேறு பெரியார்களின் பெயரில் புகழ்ப் பாக்களையும் இரங்கற் பாக்களையும் அறபியில் பாடியுள்ளார்.

- அறபியில் இவர் இயற்றி அளித்த ராதிபுல் ஜலாலிய்யா பிரபல்யமானதாகும்.

- வியாபாரத்தின் நிமித்தம் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஹிஜ்ரி 1232இல் இலங்கை வந்தார்.

- இலங்கை முஸ்லிம்களின் சீர்திருத்த முன்னோடிகளான சித்திலெப்பை, ஒராபி பாஷா போன்றோரின் சமகாலத்தவரான இவர், இலங்கையில் காதிரிய்யாத் தரீக்காவை அறிமுகப்படுத்திய மூவருள் ஒருவராவார்.

- காதிரிய்யாத் தரீக்காவை இலங்கையில் வளர்ப்பதற்கென்றே தனது 18ஆவது வயது முதல் கீழக்கரையில் இருந்து இலங்கைக்கு வந்து போனார்.

- இவர் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தனது தரீக்கா சார்ந்த தைக்காக்களை நிறுவினார்.
  உதாரணம்:
  கொழும்பு பழைய சோனகத்தெரு - 1881 (மத்திய நிலையம் ம.்.னமுஸ் ஸுஅதா)
  மருதானை - 1883
  வெலிகாமம் - 1884
  வெலிப்பிட்டி - 1855
  கொடுவேகொட, மாத்தறை - 1886
  மில்துவ, காலி - 1887
  கடைவீதி, மாத்தறை - 1888

- அவர் நிறுவிய தக்கியாக்களில் காதிரிய்யாத் தரீக்காவைச் சார்ந்த ராத்திபுகள் தொடர்ந்து ஓதப்பட்டன.

- இதன் காரணமாக மக்கள் மத்தியில் காதிரிய்யாத் தரீக்கா செல்வாக்குப் பெற்று வளர்ந்தது. இவரும் சித்திலெப்பையைப் போலவே சீர்திருத்தம் எனும் பெயரால் மத்ரஸாக்களை நிறுவி, நூல்களையும் வெளியிட்டு அதே பணியைச் செய்தாராயினும் தமது இலக்கை அடைவதில் இருவரும் வேறுபட்ட சிந்தனைப் போக்குகளைக் கொண்டிருந்தனர்.

- அறபு மொழியினூடாகக் கல்வியூட்டும் மத்ரஸாக்கள் மூலம் ஆழ்ந்த சமய அறிவையும், உணர்வையும் வழங்க முடியும் என்பதால் அத்தகைய மத்ரஸாக்கள் மூலம் மட்டுமே சமய, சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியும் என மாப்பிள்ளை லெப்பை ஆலிம் கருதினார்.

- இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்காகவே மத்ரஸதுல் பாரி எனும் மத்ரஸாவை வெலிகாமத்தில் 1884இல் நிறுவினார்.

- சித்திலெப்பை போன்றவர்கள் நூல்களையும் பத்திரிகைகளையும் வெளியிட்டு மக்களிடையே சீர்திருத்தம் செய்ததைப் போன்று இவரும் தனது மரபுவழிச் சிந்தனைப் போக்கை வளர்க்கும் வகையிலான நூல்களை எழுதி வெளியிட்டார்.

- ஷரீஆச் சட்டங்களைப் பாதுகாக்கும் வகையில் அறபுத் தமிழில் அதுவும் இலகு நடையில் ஷரீஅத் தொடர்பான சட்டவிதிகளைத் தொகுத்து வழங்கினார்.

- பத்ஹுல் மதீன் எனும் நூல் இந்தவகையில் வெளிவந்த அவரது முதல் நூலாகும். இது பின்னர் பத்ஹுஸ் ஸலப் என்ற பெயரில் விரிவுபடுத்தப்பட்டது. இதனையும் மேலும் விரிவாக்கி 1873இல் பத்ஹுத் தையான் எனும் பெயரில் வெளியிட்டார். இது 1886இல் ம.ஃகானி எனும் பெயரில் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

- இந்நூல் இறை நம்பிக்கை, இறைவழிபாடு, விவாகம், வர்த்தகம், குற்றவியல் போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

- பாமரனும் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் எழுதப்பட்ட இந்நூலை நிகர்த்த ஒரு நூல் இன்றுவரை தமிழிலோ அல்லது அறபுத் தமிழிலோ கிடைக்காதிருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

- இதன் மூலம் அவர் எதிர்பார்த்ததெல்லாம் மேற்கத்தியக் கல்வியைப் பெற்ற முஸ்லிம்களும் மார்க்கப் பின்புலத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதே.

- மக்களது வாழ்க்கைப் போக்கை சீர்திருத்த வேண்டும் எனும் இலட்சிய வேட்கை அவரிடம் இருந்ததால், உம்மஹாதுல் மு.ஃமினீன், நபித்தோழர்கள் வலிமார்கள் போன்றோரின் வாழ்க்கை வரலாற்றை உரைநடைப் பாணியிலும், கவிதையிலும் தொகுத்து வழங்கினார்.

- அவர் வாழ்ந்த காலத்து மக்களிடையே அறிமுகமாகி இருந்த கந்தூரி வைபவங்களில் வாசிக்கும் வகையிலான மௌலித் தலைப்பாத்திஹா போன்ற நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

- குத்பாக்களைத் தொகுத்து ‘குத்பாத்’ எனும் பெயரில் வழங்கினார்.

- இவ்வாறு ஆரம்ப கால முஸ்லிம்களின் முன்மாதிரி மிக்க வாழ்க்கைப் போக்கையும் அவர்களது போதனைகளையும் மக்களிடையே அறியச் செய்ய முயற்சி எடுத்தார்.

- **ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்**
  - கொழும்பில் புகழ்மிக்க ஒரு முஸ்லிம் குடும்பத்தில் ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் என்பவருக்கு மகனாக இவர் 1867இல் பிறந்தார்.

  - இவரது தந்தை ஒரு காசாளராகப் பதவி வகித்தவர்.

  - இவர் மீது நம்பிக்கை கொண்ட அப்போதைய ஆங்கில அரசு 1879 இல் அவரை குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியின் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமித்தது.

  - அல்குர்ஆனையும் தமிழ் மொழியையும் தன் தந்தையிடமே கற்றுத் தேர்ந்த இவர், ஆங்கிலக் கல்வியை கோட்டையில் இருந்த அரச ஆண்கள் பாடசாலையில் கற்றார்.

- மார்க்க ரீதியான அறிவை போதியளவு பெற்றுக்கொண்ட இவர், தமிழ் மொழியிலும் பாண்டித்தியம் பெற்றதோடு அநேக ஆங்கில நூல்களையும் படித்தார்.

- வைத்தியசாலைகளில் இருந்து முஸ்லிம்களது மையித்துகளை சிரமமின்றி பெற்றுக்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்ட அல்ஜாமிஅதுல் இஸ்லாமிய்யா எனும் கழகத்தில் செயலாளராக 1888இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- 1889இல் சித்திலெப்பை ஆரம்பித்து வைத்த 'முஸ்லிம் நேசன்' பத்திரிகையின் பதிப்பாளர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

- வாப்பிச்சி மரிக்காரின் உதவியோடு சித்திலெப்பை தொடக்கி வைத்த கல்வி இயக்கத்துக்கு இவர் தனது முழு ஆதரவையும் வழங்கினார்.

- இந்த இயக்கமே கொழும்பு முஸ்லிம் கல்விக் கழகத்தை நிறுவி அதனூடாக ஸாஹிராக் கல்லூரியையும் நிறுவியது. இதன் செயலாளராக இவர் விளங்கினார்.

- ஸாஹிராவின் வளர்ச்சியில் அயராது பாடுபட்டு உழைத்த ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் சேவையைப் பாராட்டி அப்போதைய வழக்கறிஞர்களுள் ஒருவராக இருந்த ஏ.ஸீ. முஹம்மத் என்பார் பேசும்போது ஓரிடத்தில், 'இக்கல்வி நிலையத்தின் நெம்புகோலே அவர்தான்' என்றார்.

- இவரின் சமூக சீர்திருத்தப் பணியானது குறித்த ஒரு துறையிலன்றி பல்வேறு தளங்களில் வியாபித்திருந்ததைக் காண முடிகின்றது.

- கி.பி. 1950இல் தாபிக்கப்பட்ட சோனகர் சங்கத்தின் தலைவராக இவர் தெரிவானார்.

- முதல் முஸ்லிம் அட்வகேட் எனக் கருதப்படும் அப்துல் காதர் என்பருக்கு அஸீஸ் ஒரு வாழ்த்துரையை வழங்கினார். துருக்கி அரச கௌன்ஸலர் 'அதாவுல்லா பே' என்பார் கொழும்பைத் தாண்டி சிங்கப்பூர் சென்றவேளை, அவருக்கும் வாழ்த்துரையொன்றை வாசித்தளித்தார். விக்டோரியா ராணியினதும் ஏழாம் எட்வட் மன்னனினதும் மறைவை ஒட்டியும் அவர் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தார்.

- டப்ளியூ. எம். அப்துர் ரஹ்மான் என்பவரை சட்டவாக்க சபைக்கு நியமித்ததற்காக கவர்னர் சேர். வெஸ்ட் ரிஜ்வேக்கு ஒரு நன்றிகூறும் தீர்மானத்தையும் அவர் நிறைவேற்றினார்.

- சமயத்துறையில் அவருக்கிருந்த புலமைக்கு எடுத்துக் காட்டாக அமைவது, மறுமை வாழ்வு பற்றிய முஸ்லிம்களின் கொள்கை எனும் தலைப்பில் அப்துல் அஸீஸ் ஆற்றிய உரையாகும். இவ்வுரையின் உள்ளடக்கத்தில் இமாம் கஸ்ஸாலியின் சிந்தனைத் தாக்கத்தைக் காண முடியும் என்பர்.

- அஸீஸ் 1898இல் 'அஸ்ஸவாப்' எனும் பெயரிலான அறபுத் தமிழ்ப் பத்திரிகையை வெளியிட்டார்.

- முஸ்லிம் காடியன் (முஸ்லிம் பாதுகாவலன்) எனும் பெயரில் மற்றுமொரு தமிழ்ப் பத்திரிகையை 1901இல் வெளியிட்டார்.

- இப்பத்திரிகை மூலம் முஸ்லிம்களது விவாகங்களைப் பதிவு செய்ய சட்டம் இயற்றப்பட வேண்டும் என அரசை வற்புறுத்தினார்.

- இக்காலப்பகுதியில் வெளிவந்த கிறிஸ்மஸ் வெளியீடு ஒன்றில் அப்போதைய குடியேற்ற நாட்டுச் செயலாளர் கிளிபட் என்பார் வெளியிட்டிருந்த இஸ்லாத்துக்கு விரோதமான கண்டனங்களுக்கு அஸீஸ் தகுந்த பதிலடி கொடுத்தார்.

- 1907 இல் அவர் 'அல் முஸ்லிம்' எனும் பெயரில் ஆங்கிலம் - தமிழ்ப் பத்திரிகை ஒன்றைப் பிரசுரித்தார்.

- சட்டவாக்க சபையில் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் பற்றியும், முஸ்லிம்களின் கல்வி நிலை பற்றியும் அவர் இந்நாட்டுப் பத்திரிகைகளுக்கு வழங்கிய கருத்துரைகள் பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

- முதல் முஸ்லிம் அட்வகேட் அப்துல் காதர் துருக்கித் தொப்பி அணிந்ததை நீதியரசர் தடுத்தபோது, ஒரு தூதுக்குழுவோடு நீதிபதியின் வீடு சென்று தமது முறையீட்டைச் சமர்ப்பித்தார். இதனால் எப்பயனும் கிட்டாத நிலையில் 1905 இல் மருதானைப் பள்ளி முற்றவெளியில் இக்குழு ஒரு பெரும் கூட்டத்தைக் கூட்டி, நீதிபதியின் இச்செயலுக்கு நிவாரணம் கேட்டு மன்னருக்கு ஒரு பிரேரணையை அனுப்பி வைத்தார்.

- இவரது சீர்திருத்த முயற்சிகள், அரசியல் சார் முயற்சிகள் மிக முக்கியமானவை.

- சட்டவாக்க சபையில் பொதுவாக தமிழ்பேசும் மக்களை தமிழர் ஒருவர் பிரதிநிதித்துவம் செய்வது தவறானதாகும். முஸ்லிம்கள் தமிழைப் பேசினாலும் அவர்கள் ஒரு தனித்துவமான இனமாதலால் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்ய ஒரு முஸ்லிம் பிரதிநிதி அவசியம் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

- சோனகர் தமிழ்பேசும் மக்களெனவும், அவர்கள் தமிழினத்திலிருந்து இஸ்லாத்துக்கு மதமாற்றம் செய்யப்பட்டவர்கள் எனவும் கூறி, அந்த அடிப்படையில் பொன். ராமநாதனின் கருத்துக்களை இவர் துணிந்து எதிர்த்தார்.

- முஸ்லிம்கள் தமக்கென்று சட்ட சபையில் ஓர் உறுப்பினரைக் கொண்டிருக்க வேண்டும் என்று சித்திலெப்பை முன்னின்று நடாத்திய போராட்டத்தை அப்துல் அஸீஸ் தொடர்ந்தார்.

- முஸ்லிம்களின் இந்த வேண்டுகோளை சட்டவாக்க சபையில் எதிர்த்தது மட்டுமன்றி, அரச ஆசியக் கழகக் கூட்டத்தில் Ethnology of the Moors of Ceylon எனும் ஆய்வுக் கட்டுரையையும் இராமநாதன் வாசித்தார்.

- இக்கட்டுரையில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி, அக்கட்டுரைக்கான திறனாய்வொன்றை வெளியிட்டார். இது சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தால் ஒரு நூலாக தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

- 1903இல் மருதானைப் பள்ளியில் முகாமை நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

- மாகான் மார்க்கார் துருக்கிக்கான கவுன்ஸலராக நியமிக்கப்பட்டபோது வழங்கப்பட்ட இராப்போசன விருந்துக்கு அப்துல் அஸீஸே தலைமை தாங்கினார்.

- 1911இன் குடிசன மதிப்பீட்டறிக்கைக்கு, முஸ்லிம்கள் குழந்தைப் பிறப்பின்போது கையாளும் வழக்கங்களும் அவர்களின் சாமத்தியச் சடங்குகளும்'' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை வழங்கினார்.

- 1905இல் சட்டவாக்க சபையில் அப்துல் ரஹ்மானின் பிரதிநித்துவக் காலம் முடிவுற்றபோது அவ்விடத்துக்கு இவரை நியமிக்க வேண்டும் என்று முஸ்லிம்கள் அரசுக்கு மனு ஒன்றை அனுப்பினர்.

- 1906இல் இவர் முஹம்மதிய விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்துக்கு வரைந்த திருத்தத்தில் இஸ்லாமிய சட்டங்களில் இருந்து விலகாமல் முஸ்லிம் பெண்கள் சமூக, அறிவியல், ஆன்மீகத் துறைகளில் முன்னேற 'பர்தா' விடயத்தில் சீர்திருத்தங்கள் அவசியம் என வலியுறுத்தினார்.

- அப்துல் அஸீஸின் மார்க்கத் துறை சார்ந்த சீர்திருத்தங்களும் அன்றைய கால சூழலில் முற்போக்கு மிகுந்தவைகளாகக் காணப்பட்டன.

- ஹதீஸ், மௌலிது போன்றவற்றை வெறுமனே அறபியில் ஓதுவதால் நன்மை பயக்கும் என அன்றைய உலமாக்கள் கூறிவந்ததைக் கண்டித்த அவர், உண்மையிலே தேவைப்படுவது சமயம் தொடர்பாக கிரந்தங்களின் மொழிபெயர்ப்பும், விளக்கமுமே எனக் கூறிவந்தார்.

- 1912இல் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அவர், அங்கு ஜும்ஆ பிரசங்கத்தின் பின் ஆற்றிய உரையில், குத்பாப் பிரசங்கம் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என வேண்டிக் கொண்டார். அன்று முதல் அறபியிலும் தமிழிலும் குத்பா ஓதும் வழக்கம் ஆரம்பித்தது.

- இவர் பல்வேறு நூல்களைத் தொகுத்து வழங்கினார். அவற்றுள் "சக்தியின் ஞானார்வம்' எனும் நூல் மிக முக்கியமானதாகும். இந்நூலில் நாத்திக வாதத்துக்கு எதிரான சித்திலெப்பையின் வாதத்தை அவர் இறந்தபின் தொடர்ந்தார்.

- சிலுவைக்கும் இளம்பிறைக்கும் இடையிலான மோதல் சம்பந்தமாக அப்துல் அஸீஸ் ஆற்றிய சொற்பொழிவும் ஒரு நூலாக வெளியிடப்பட்டது.

- செப்டம்பர் 11, 1915இல் இவர் வபாத்தானார்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி I** இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறுங்கள்.

**படி II** மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து தேடலுக்காக வழிப்படுத்துங்கள்.

**படி III** பின்வரும் தலைப்புகளில் கட்டுரை எழுத குழுக்களை நெறிப்படுத்துங்கள்.

அ) இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புகள்
ஆ) இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பங்களிப்புகள்
இ) இலங்கை முஸ்லிம்களும் தனியார் சட்டமும்
ஈ) முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்புகள்
(சித்தி லெப்பை, ஐ.எல். அப்துல் அஸீஸ், ரீ.பி. ஜாயா)

**படி IV** இவற்றைத் தொகுத்து நூலாக ஆக்குங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை**


- ரஹீம் அப்துல், (2006), *இஸ்லாமிய கலைக் களஞ்சியம், பாகம் 1,2,3,4,* சென்னை, யுனிவேர்ஸ் பப்லிஷர்ஸ்
- அமின் எம்.ஐ.எம், (2002), *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870 - 1915),* ஹெம்மாத்தகம, அல்ஹஸனாத் பதிப்பகம்
- கமால்தீன் எஸ்.எம். (1990), *கலாநிதி புர்ஹானுதீன் ஜாயா*, மகரகம, தேசிய கல்வி நிறுவகம்
- இஸ்லாம், (1994), *க.பொ.த (உயர் தரம்) பரீட்சைக்கான வழிகாட்டல்கள்,* மகரகம, தேசிய கல்வி நிறுவகம்.
- அஸீஸ் ஏ.எம்.ஏ. (2007), *இலங்கையில் இஸ்லாம்,* சென்னை, குமரன் பத்தக இல்லம் வெளியீடு,
- அமீன் எம்.ஐ.எம்., (1997), *இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அறிஞர் சித்திலெப்பை,* ஹெம்மாதகம, அல்ஹஸனாத் வெளியீடு.
- ஸாஹிர் (ஸாயிர்) ஏ.ஸீ.எம்., (1979), *நம் முன்னோர்,* கொழும்பு, சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்.
- அமீன் எம்.ஐ.எம். (2010), *இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்,* ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீடு மதிப்பீட்டை பயன்படுத்த வேண்டும் என்பதும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகமும்) மதிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும் போதே மதிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம் பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ, சோதனை நடாத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர்களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். அதனால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமாகும்.

கற்றல் - கற்பித்தல் செயல் மூலம் தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப்படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்களது செயற்பாடுகளை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவர் ஆற்றல் அபிவிருத்தி எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தகுந்த அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து அவற்றை மாணவர்கள் சரியாகப் பெற்றுக்கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல்-கற்பித்தல் ஊடாகத் நிகழ வேண்டும். அத்தோடு அதற்கு தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மதிப்பீட்டில் (கணிப்பீட்டில்) ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பொதுவாக பின்னூட்டல், முன்னூட்டல் எனப்படும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனம்காணும்போது அவற்றை மேன்படுத்த முன்னூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர்களுக்கு அவசியமாகின்றது. மதிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் -கற்பித்தல் மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தத் தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சை திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அந்த அணுகுமுறை வகைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்படைகள் | 2. | செயற்றிட்டங்கள் |
| 3. | அளவாய்வுகள் | 4. | தேடியாய்வுகள். |
| 5. | அவதானிப்புக்கள் | 6. | கண்காட்சி / முன்வைத்தல்கள் |
| 7. | களச் சுற்றுலாக்கள் | 8. | குறுகிய எழுத்துப் பரீட்சைகள் |
| 9. | அமைப்புக் கட்டுரைகள் | 10. | திறந்த நூல் சோதனைகள் |
| 11. | ஆக்கச் செயற்பாடுகள் | 12. | செவிமடுத்தல் சோதனைகள் |
| 13. | செய்முறைச் செயற்பாடுகள் | 14. | பேச்சுக்கள் |
| 15. | சுய ஆக்கங்கள் | 16. | குழுச் செயற்பாடுகள் |
| 17. | எண்ணக்கருப் படங்கள் | 18. | இரட்டைப் பதிவு - ஜேர்னல் |
| 19. | சுவர்ப் பத்திரிகைகள் | 20. | வினா - விடை நிகழ்ச்சிகள் |
| 21. | வினா - விடைப் புத்தகங்கள் | 22. | விவாதங்கள் |
| 23. | குழுக் கலந்துரையாடல்கள் | 24. | கருத்தரங்குகள். |
| 25. | உடனடிச் சொற்பொழிவு | 26. | பாத்திரமேற்று நடித்தல் |

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லாப் பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர்பார்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

மேற்படி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## முதலாம் தவணை

**கருவி இலக்கம் : 01**

**தேர்ச்சி : 7.0**

**தேர்ச்சி மட்டம் : 7.1**

**கருவியின் தன்மை : ஒப்படை**

இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அறிவுச் சமூகத்தின் பின்வரும் அம்சங்களை மையமாக வைத்து குழுக்கலந்துரையாடலொன்றை நடாத்தி அதனை ஓர் ஒப்படையாத் தயாரிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள.

- சமூகப் பொருளாதார நிலை
- மொழியும் இலக்கியமும்
- சமயமும் ஒழுக்கமும்

என்ற தலைப்புக்களை உள்ளடக்கி ஓர் ஒப்படை தயாரிக்க மாணவரை வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | நியதிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | ஒப்படையின் குறிக்கோளை விளக்குதலும் குறிக்கோள்களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடலும் | 4 | 3 | 2 | 1 |
| 2. | தரவு, தகவல்கள் சேகரிப்பதற்காகக் கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 3. | தரவு, தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 3 | 2 | 1 |
| 4. | பயன்படுத்திய உத்திகளின் பொருத்தப் பாடும் தர்க்கரீதியான தன்மையும். | 4 | 3 | 2 | 1 |
| 5. | முடிவுக்கு வருதலும் அவற்றுற்கு காரணம் காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## முதலாம் தவணை

**கருவி இலக்கம் : 02**

**தேர்ச்சி : 8.0**

**தேர்ச்சி மட்டம் : 8.1**

**கருவியின் தன்மை : கட்டமைப்புக் கட்டுரை வினாக்கள்**
நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் நிகழ்வு தரும் படிப்பினைகளை பின்வரும் தலைப்புக்களில் விளக்குக.

- ஹிஜ்ரத்திற்கான ஆயத்தம்
- ஹிஜ்ரத் நிகழ்வு
- முஹாஜிர்களின் அர்ப்பணிப்பு
- அன்ஸார்களின் ஒத்துழைப்பு

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | தலைப்பை அறிமுகம் செய்தல். | 4 | 3 | 2 | 1 |
| 2. | பாடங்களின் முக்கியத்துவம் தலைப்புக்குப் பொருத்தமானதாக இருத்தல். | 4 | 3 | 2 | 1 |
| 3. | ஒழுங்கமைப்பு, பந்தி பிரித்தல் ஒழுங்கான பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல். | 4 | 3 | 2 | 1 |
| 4. | மொழிச் செம்மை, இலக்கணச் செம்மை, நிறுத் தக் குறிகள், மொழி சார்ந்த பிரயோகங்கள், தெளிவு, ஆக்கபூர்வத்தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 5. | முடிவெடுத்தல், நியாயப்படுத்தல், விடயங்களை தர்க்க ரீதியில் முன்வைத்தல் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## முதலாம் தவணை

**கருவி இலக்கம்** : 03

**தேர்ச்சி** : 8.0, 9.0

**தேர்ச்சி மட்டம்** : 8.2, 8.4, 9.1

**கருவியின் தன்மை : நில விவரப்படமொன்றை வரைதல்.**
நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் அப்பாஸியர் எழுச்சி பெறும் காலம் வரையிலான (கி.பி. 622 - 750) இஸ்லாமிய கிலாபத்தின் வளர்ச்சியை காலகட்டத்துக்கேற்ப வேறுபடுத்திக்கட்டும் வகையில் பாடசாலை புறச்சுவரில் வரைந்து காட்சிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | தலைப்புக்கேற்ப பொருத்தப்பாடும் தொடர்பும் | 4 | 3 | 2 | 1 |
| 2. | பட வரைபுக்குக் கையாளப்பட்ட வழிமுறைகள் | 4 | 3 | 2 | 1 |
| 3. | பயன்பாடும் உத்திகளின் பொருத்தமும் | 4 | 3 | 2 | 1 |
| 4. | நேர்த்தியும் ஒழுங்கும் | 4 | 3 | 2 | 1 |
| 5. | விளைவும் முடிவும் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## இரண்டாம் தவணை

**கருவி இலக்கம்** : 01

**தேர்ச்சி** : 8.0

**தேர்ச்சி மட்டம்** : 8.2

**கருவியின் தன்மை : உடனடிச்சொற்பொழிவு**
நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகள் ‘‘முஸ்லிம் சமூகத்தை ஸ்திரப்படுத்துவதில் பெரும்பங்கு வகித்தன.’’ என்ற தலைப்பில் உடனடிச் சொற்பொழி வொன்றை நிகழ்த்த மாணவரை வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள் (சொற்பொழிவுக்கு உரிய நியதிகள்)** | **புள்ளி வழங்கல் தேர்ச்சி மட்டத்தினை** | | | |
|---|---|---|---|---|---|
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | அணுகுமுறையும் தலைப்பைத் தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும். | 4 | 3 | 2 | 1 |
| 2. | ஒழுங்கமைப்பு, தலைப்புக்குப் பொருத்தமான வாறு விடயங்களை முன்வைத்தல், மொழிச் செம்மை | 4 | 3 | 2 | 1 |
| 3. | சிறப்பான மொழிப் பிரயோகங்கள், மேற்கோள்கள் போன்றவற்றை பயன்படுத்தல், ஆக்கபூர்வமான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 4. | தெளிவு, குரல் கட்டுப்பாடு, முகபாவனை, அங்க அசைவுகள், நேரக்கட்டுப்பாடு, சரியான உச்சரிப்பு | 4 | 3 | 2 | 1 |
| 5. | தொகுப்பு, முடிவுகளுக்கு காரணம் காட்டல் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## இரண்டாம் தவணை

**கருவி இலக்கம் : 02**

**தேர்ச்சி : 8.0**

**தேர்ச்சி மட்டம் : 8.3**

**கருவியின் தன்மை : விவாதம்**

''குலபாவுர் ராஷிதீண்களுள் முதலிரு கலீபாக்களின் பங்களிப்பா? பின்னைய இரு கலீபாக்கங்களி பங்களிப்பா காத்திரமானது'' இந்த தலைப்பின் கீழ் மாணவர்கள் ஒட்டியும் வெட்டியும் விவாதிக்க வழிப்படுத்துங்கள்

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | நியதிகள் | புள்ளி வழங்கல் தேர்ச்சி மட்டத்தினை | | | |
|---|---|---|---|---|---|
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | அணுகுமுறை, தலைப்பை தெளிவாக அறிமுகஞ் செய்தல் | 4 | 3 | 2 | 1 |
| 2. | தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தலும் ஒழுங்கமைப்பும். | 4 | 3 | 2 | 1 |
| 3. | தகவல் ஆக்கபூர்வமாகவும் தர்க்க ரீதியாக முன்வைக்கப்பட்டிருத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | பொருத்தமான முக பாவனையும் அங்க அசைவுகளும் நேரமுகாமையும் | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கல் முடிவுகளையும் அம்முடிவு களுக்கான காரணங்களையும் முன்வைத்தல். | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## இரண்டாம் தவணை

**கருவி இலக்கம் : 03**

**தேர்ச்சி : 9.0**

**தேர்ச்சி மட்டம் : 9.2, 9.3**

**கருவியின் தன்மை : குழுக் கலந்துரையாடல்**

அப்பாசிய ஆட்சியிலும், ஸ்பானியா ஆட்சியிலும் அறிவுரைத்துறை வளர்ச்சிப் பங்களிப்பு பற்றிய விரிவான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள மாணவர்களை வழிப்படுத்துங்கள்..

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | நியதிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 2. | குழுவாகக்கலந்ரையாடலை ஒழுங்கு செய்தல், நெறிப்படுத்தல், தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல், அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் | 4 | 3 | 2 | 1 |
| 3. | கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லத் தக்க வகையில் விருத்திகரமான வகையில் கருத்துக்களை முன்வைத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான, கணிசமான, தர்க்கரீதியான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கலும் முடிவுகளும், முடிவுக்களுக் கான காரணங்களை முன்வைத்தலும் | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி $= \frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## மூன்றாம் தவணை

**கருவி இலக்கம்** : **01**

**தேர்ச்சி** : **9.0**

**தேர்ச்சி மட்டம்** : **9.1, 9.2**

**கருவியின் தன்மை : கண்காட்சி**

இஸ்லாமிய வரலாற்றில் உமையா, அப்பாஸியக் காலத்தில் தோன்றிய தனித்துவமிக்க கலைகளான கட்டடக்கலை, எழுத்தணிக் கலை, அறிவியல் கலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்ய வழிப்படுத்துங்கள். அதில் நூல்கள் மற்றும் இணையம் மூலம் தேடிப் பெறப்பட்ட படங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துங்கள்

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | **நியதிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சி மட்டத்தினை** | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | கண்காட்சியின் தலைப்புக்கேற்ற பொருத்தப்பாடும் தொடர்பும் | 4 | 3 | 2 | 1 |
| 2. | கண்காட்சியை ஏற்பாடு செய்ய கையாண்ட வழிமுறைகள் | 4 | 3 | 2 | 1 |
| 3. | கண்காட்சியை ஒழுங்கமைத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | பயன்பாடும் உத்திகளின் பொருத்தமும். | 4 | 3 | 2 | 1 |
| 5. | விளைவும் முடிவும். | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## மூன்றாம் தவணை

**கருவி இலக்கம் : 02**

**தேர்ச்சி : 10.0**

**தேர்ச்சி மட்டம் : 10.1**

**கருவியின் தன்மை : சுவர்ப்பத்திரிகை**

''தென்னிந்திய - இலங்கை முஸ்லிம்களின் உறவு இலங்கை முஸ்லிம்களிடையே ஏற்படுத்திய சாதக பாதக விளைவுகள்'' பற்றி விளக்கக்கூடிய சுவர்ப் பத்திரிகை ஒன்றை தயார்படுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | நியதிகள் | புள்ளி வழங்கல் தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | புள்ளி வழங்கல் தேர்ச்சி மட்டத்தினை அடையவில்லை | |
|---|---|---|---|---|---|
| 1. | கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் காட்டும் தொடர்பு, பொருத்தப்பாடு | 4 | 3 | 2 | 1 |
| 2. | ஒழுங்கமைவும் பொதுவானதாக இருத்தலும் | 4 | 3 | 2 | 1 |
| 3. | அழகுபடுத்துவதற்காக கையாளப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும் | 4 | 3 | 2 | 1 |
| 4. | உள்ளடக்கத்தின் ஆக்கபூர்வமான தன்மையும் தர்க்கரீதியான தன்மையும். | 4 | 3 | 2 | 1 |
| 5. | சுவர் செய்திப்பத்திரிகை என்றவகையில் ஆக்கத்தின் வெற்றிகரமான தன்மை | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள்
## மூன்றாம் தவணை

**கருவி இலக்கம் : 03**

**தேர்ச்சி : 10.0**

**தேர்ச்சி மட்டம் : 10.2**

**கருவியின் தன்மை : விவாதம்**

“இலங்கை முஸ்லிம்களின் சுதந்திரத்திற்கு முன்னைய பங்களிப்பா, சுதந்திரத்திற்குப் பின்னரான பங்களிப்பா பெறுமானம் கூடியது” என்ற தலைப்பின் கீழ் மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து ஒரு விவாதத்தை நடத்துங்கள்.

**பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளி வழங்குங்கள்.**

| | நியதிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை | | | |
| | | அடைந்துள்ளார் | | அடையவில்லை | |
| 1. | அணுகுமுறை, தலைப்பை தெளிவாக அறிமுகஞ் செய்தல் | 4 | 3 | 2 | 1 |
| 2. | தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தலும் ஒழுங்கமைப்பும். | 4 | 3 | 2 | 1 |
| 3. | தகவல் ஆக்கபூர்வமாகவும் தர்க்க ரீதியாக முன்வைக்கப்பட்டிருத்தல் | 4 | 3 | 2 | 1 |
| 4. | பொருத்தமான முக பாவனையும் அங்க அசைவுகளும் நேரமுகாமையும் | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கல் முடிவுகளையும் அம்முடிவு களுக்கான காரணங்களையும் முன்வைத்தல். | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | | | | 20 |
| | பெற்ற மொத்த இறுதிப் புள்ளி = $\frac{\text{புள்ளிகள்}}{2}$ | | | | 10 |